UNIVERSAL LIBRARY
OU_208138
UNIVERSAL LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894.8113 S18N. Accession No. Tm 895

Author Sambandam, P.

Title Nalaka medai ninaivugal 1935.

This book should be returned on or before the date last marked below.

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

MY FRIEND

**C. RANGAVADIVELU**

# நாடகமேடை நினைவுகள்

## மூன்றாம் பாகம்

முதல் வருஷம் தசராக்கொண்டாட்டத்தில் தினம் பூஜை ஆனவுடன், பிரசாதம் சாப்பிடுமுன், ஆக்டர்களில் பாடத்தெரிந்தவர்களெல்லாம் கொஞ்சம் பாட ஆரம்பித்தோம். இரண்டாவது வருஷம் கொட்டகை போட்டபின், அங்கு ஏதாவது நாடகக் காட்சிகள் நடத்தலாமே யென்று, இரண்டொரு நாள் எங்கள் நாடகங்களிலிருந்து, சில காட்சிகளை ஆடினோம். பிறகு விக்டோரியா ஹால் மேல் மாடியை வாடகைக்கு எடுத்துக்கொண்டபின், ஒன்பது அல்லது பத்து தினங்களும் நாடகங்கள் ஆட ஆரம்பித்தோம். முதலில் தினச்செலவு, அதிகமானால் 5 ரூபாயா யிருந்தது. பிறகு குறைந்த பட்சம் 50 ரூபாய் ஆகிவிட்டது! இவ்வாறு செலவு அதிகமாகவே, ஒருவராக இதை மேற்கொள்வது கடின மென்று, அங்கத்தினரைக் கூட்டங்களாகப் பகிர்ந்து கொடுத்தோம். இவ்வாறு தற்காலம் வக்கீல்கள் தினமென்றும், ஆரிய மஹா வைசியர்கள் தினமென்றும், பேரி செட்டிகள் தினம் என்றும், வர்த்தகர்கள் தினமென்றும், மைலாப்பூர் அங்கத்தினர் தினம் என்றும் பலவிதமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் இத்தகைய கூட்டத்தாருள் இடைவிடாது நாளது வரையில் நடத்திவந்தவர்கள், ஆரிய மஹா வைசியர்களே. இக்கொண்டாட்டத்தின் இரண்டாம் வருஷம் முதல் ஸ்திரீகளுக்குப் பிரத்யேகமாக ஒரு தினம் ஏற்படுத்தினோம். அன்று சி. பி. ராமஸ்வாமி ஐயர் செலவை யெல்லாம் மேற்கொண்டார்; முதலில் 20 அல்லது 30 ஸ்திரீகள் வர ஆரம்பித்துப் பிறகு நூற்றுக்கணக்காகி, ஒரு வருஷம் ஆயிரம் ஸ்திரீகளுக்கு மேல் வந்தார்கள் என்று சொல்வது மிகையாகாது. முதல் வருடங்களில் 20 அல்லது முப்பது ரூபாய் செலவழித்தவர் பிறகு நூறுக்கு மேலாகி, சில வருஷங்களில் 500, 600 ரூபாய் செலவழித்தது

எனக்குத் தெரியும். ஒரு வருஷம் விக்டோரியா ஹாலில் இடம் போதாமல், சவுத் இந்தியன் ஆத்லெடிக் அசோசியேஷனில் இத் தினக் கொண்டாட்டத்தை வைத்துக் கொண்டபோது இவர் 700 ரூபாய் இந்த ஒரு தினத்திற்காகச் செலவழித்தார். அப்பொழுது என்னை அழைத்து, "சம்பந்தம், வருகிற வருடம் முதல், செல வானது நூறு ரூபாய்களுக்குமேல் போகாமலிருக்கும்படிப் பார்த்துக் கொள்" என்று அவர் சிரித்துக்கொண்டே சொன்னது எனக்கு ஞாபகமிருக்கிறது. சென்னையில் அநேகம் செல்வவந்தர்களைப் பார்த்திருக்கிறேன். ஆயினும் அவர்களுள் சத்விஷயங்களில் முகங் கோணாது சந்தோஷமாய் ஏராளமாய்ச் செலவழிக்கும் இவரைப் போன்றவர்கள் மிகவும் சிலரே எனக் கூறவேண்டும். இவர் ஸ்ரீமான் சேஷகிரி ஐயருக்குப் பிற்காலம் எங்கள் சபையில் அக்கிராசனர் ஆன வரையில், தசராக் கொண்டாட்டத்தில் இத்தினக் கொண்டாட் டத்தை மிகவும் விமரிசையாக நடத்திவந்தார். அதன் பிறகு இந் நாள்வரை, அக்கிராசனர் தினத்தை நடத்தி வருகிறார்.

மேற்சொன்னபடித் தசராவில் ஸ்திரீகளுக்கு ஒரு நாள் ஏற் படுத்திய பொழுது நியாயப் பிரகாரம் குழந்தைகளுக்கும் ஒருநாள் ஏற்படுத்த வேண்டியதாயிற்று. "குழந்தைகள் தினத்தில்" அங் கத்தினர் வீட்டிலுள்ள குழந்தைகளையெல்லாம் வரவழைத்து, அவர்களுள் பாடத்தெரிந்தவர்களை யெல்லாம் பாடச்சொல்லி, ரெசிடேஷன் (Recitation) ஒப்புவிக்கத் தெரிந்தவர்களை யெல்லாம் ஒப்புவிக்கச் சொல்லி, அவர்களுக்கெல்லாம் பரிசுகள் கொடுத்து, பிறகு எல்லாக் குழந்தைகளுக்கும் (50, 60 வயதுடைய குழந்தை கள் உட்பட) சிற்றுண்டியளித்து, ஏதாவது இரண்டொரு ஹாஸ் யக் காட்சிகள் ஆடி அவர்களைக் களிக்கச்செய்து, அவர்களையெல் லாம் தத்தம் இல்லங்களுக்கு அனுப்புவது வழக்கமாயிற்று. இத் தினக் கொண்டாட்டத்தில் சில சமயங்களில், 500, 600, சிறு குழந் தைகள் ஒருங்கு கூடியிருக்கும் காட்சியை நான் பன்முறை கண்டி ருக்கிறேன். அச்சமயங்களில் அத்தனை குழந்தைகளும் முகமலர்ச் சியோடு வேடிக்கையாய் இரண்டு மூன்று மணி சாவகாசம் ஒருங்கே கழிப்பதைக்கண்டு சந்தோஷப்படாத மனிதனை நான் ஒரு முறையா வது கண்டேனில்லை! இவ்வாறு சிறு குழந்தைகளை வருஷத்தில் ஒரு

தினமாவது ஒருங்கே சேர்த்துச் சந்தோஷிக்கச் செய்வது எங்கள் சபை செய்த பாக்கியமே என்று கருதுகிறேன்.

இவ்வாறு இவ் வருஷம் தொடங்கிய தசராக் கொண்டாட்டமானது இதுவரையில் ஈஸ்வர கிருபையால் தடைப்படாது நடந்து வருகிறது.

இவ்வருஷம் எங்கள் சபையில் ஆரம்பித்த இன்னொரு புதிய விஷயம் என்னவென்றால், நாடகக் கவிகளைப்பற்றியும் சிறந்த நாடகங்களைப் பற்றியும், கற்றறிந்த பெரியோர்களைக்கொண்டு உபன்யாசங்கள் செய்யும் படிச் செய்ததே. இவ்வருஷம் காலஞ்சென்ற பண்டிட் சதாவதானம் T. E. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் "நாடகம் நடிக்கும் லட்சணங்கள்" என்பதைப்பற்றி ஒரு உபன்யாசம் செய்தார். ஆர்தர் டேவிஸ் என்பவர் ஷேக்ஸ்பியர் மகாநாடகக்கவி ஆங்கிலத்தில் எழுதிய "ஹாம்லெட்" என்னும் சிறந்த நாடகத்தை தக்க அபினயத்துடன் படித்துக் காட்டினார். இவ்வாறு அவர் படித்துக் காட்டியது முக்கியமாக எனது வேண்டுகோளுக்கிணங்கியாம். நான் அவரைக் கேட்டதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. அதாவது அந்நாடகத்தை நான் தமிழில் அமைத்து முடித்து எங்கள் சபையில் அதை ஆடவேண்டுமென்று இச்சை கொண்டதேயாம்.

இனி இந்த "அமலாதித்யன்" நாடகத்தைப்பற்றிக் கொஞ்சம் விரிவாக எழுத விரும்புகிறேன். அதற்கு முக்கியமான காரணம் இந்நாடகத்தை நான் எழுதியுள்ள நாடகங்களிலெல்லாம் சிறந்தது என்று பெரும்பாலார் கூறுவதேயாம்; அன்றியும், நான் மேடையின் மீது நடித்த பாத்திரங்களில் எல்லாம், இந்த நாடகத்தில் அமலாதித்யனை நடித்தது மிகவும் சிலாகிக்கத்தக்கதென்று எனது நண்பர்கள் அநேகர் கூறக்கேட்டிருக்கிறேன். அன்றியும் எழுதுவதற்கும் நடிப்பதற்கும் இந்நாடகத்திற்காக நான் எடுத்துக் கொண்ட சிரமம், மற்றெந்த நாடகத்திற்கும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே இதைப்பற்றிப் பலவிவரங்களை இங்கு எழுத என் நண்பர்களுடைய உத்திரவைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஷேக்ஸ்பியர் என்பவர் நாடக கவிகளுக்குள் எல்லாம் மிகச் சிறந்தவர் என்று உலகத்தோரில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படு கிறது. அவர் எழுதிய சுமார் 42 நாடகங்களுக்குள் 'ஹாம்லெட்' என்பது தான் மிகச் சிறந்தது என்று கற்றறிந்தோரால் பெரும்பா லும் ஒப்புக் கொள்ளப் படுகிறது. அன்றியும் ஐரோப்பாக் கண் டத்திலுள்ள எல்லாப் பாஷைகளிலும் இது மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது. ஆசியா கண்டத்தி லுள்ள ஜப்பான் முதலிய தேசத்து பாஷைகளிலும் மொழிபெயர்க் கப்பட்டிருக்கிறதாக அறிகிறேன். அன்றியும் இங்கிலாந்து தேசத் தில் இந்நாடகத்தின் கதாநாயகனாகிய 'ஹாம்லெட்' என்னும் பாத் திரத்தை ஆட இச்சைகொள்ளாத நடிகர் கிடையாதென்றே சொல்ல லாம். என்னைக் கேட்குமிடத்து, இதைப் படிக்கும் எவனும் தன்னி டம் கொஞ்சமாவது நாடகமாடவேண்டுமென்னும் இச்சையுடைய வனாயின், இவ்வேஷம் தரிக்கவேண்டுமென்று விரும்பாதவன் இவ் வுலகிலேயே இல்லையென்று கூறுவேன். மாடாம் சாரா பெர்ன் ஹார்ட் (Madame Sarah Bernhardt) என்னும் பிரஞ்சு தேசத் திய ஸ்திரீ, தான் ஆண்வேடம் பூண்டு, தன் 50 ஆம்வயதில் இந்த வேடத்தைத் தரிக்கப் பிரியப்பட்டு, அவ்வண்ணமே நடித்தாள் என் றால் இதைப்பற்றி நான் அதிகமாகக் கூறவேண்டிய நிமித்தமில்லை என்று நினைக்கிறேன். நாடகமேடையேறியிராத, இதை வாசிக்கும் சில நண்பர்கள், இப்பாத்திரத்தில் என்ன அவ்வளவு ஆக்டர்களு டைய மனதைக்கவரும்படியான சூட்சுமம் இருக்கிறதெனக் கேட் கக்கூடும். நானும் இதைப்பற்றிப்பன்முறை ஆராய்ந்து பார்த் திருக்கிறேன். இப்பாத்திரத்தில் ஒரு நடிகன் தன் முழுசாமர்த்தி யத்தையும் காட்டப் போதுமான இடங்கள் ததும்பி யிருக்கின்றன வென்பதுதான் இதற்கு முக்கியக் காரணம் என்னும் தீர்மானத் திற்கு வந்தேன். ஒவ்வொரு நாடகமும் கதாநாயகன் ஒன்றிரண்டு ரசங்களை முக்கியமாகக் காட்ட இடங்கொடுக்கும். சில நாடகங்க ளில் ஹாஸ்ய ரசத்தைக் காட்டலாம், சில நாடகங்களில் கருணை ரசத்தைக் காட்டலாம், சிலவற்றுள் சிருங்கார ரசத்தைக் காட்ட லாம், இன்னும் இப்படியே மற்ற நாடகங்கள் மற்ற ரசங்களை நடித் துக் காட்ட இடங் கொடுக்கும். இந்த ஒரு நாடக பாத்திரத்தில் தான் எல்லா ரசங்களையும் எடுத்து காட்டச்சிறந்த இடங்கள் உண்டு.

சுருக்கிச் சொல்லுமிடத்து இந்தப்பாத்திரத்தைத் திருப்திகரமாய் ஆடத்தக்கவன் எந்தப்பாத்திரத்தையும் நன்றாயாடுவான் என்பதற் கையமில்லை; ஆகவே இப்பாத்திரத்தைச் சபையோர் மெச்சும்படி யாக நடிப்பது மிகவும் கடினமென்று எனது நண்பர்கள் அறிவார்க ளாக. அதனால் தான் இப்பாத்திரத்தில் பெயர் எடுக்க வேண்டு மென்று ஒவ்வொரு நடிகனும் விரும்புவது போலும்! அன்றியும் ஷேக்ஸ்பியர் காலம் முதல் இங்கிலாந்து தேசத்தில், பிரபல ஆக்டர் என்று பெயர் பெற்ற ஒவ்வொரு நடிகனும் இதை நடித்திருக்கிறான். பூர்வகாலத்தில் எட்மண்ட் கீன் (Kean) கெம்பில், (Kemble) முத லிய பிரசித்தி பெற்ற ஆக்டர்களும், தற்காலத்தில் சர்ஹென்றி இர் விங், சர் பிர்போம் டிரி (Sir Beerbohm Tree) சர் போர்ப்ஸ் ராபர்ட்சன் (Sir Forbes Robertson), சர் பென்சன் (Sir Benson) முதலிய ஆக்டர்களும் இதில் பிரசித்தி பெற்றிருக்கின்றனர். அமெரிக்கா தேசத்தில் எட்வின் பூத் (Edwin Booth) என்பவர் இப்பாத்திரத்தில் மிகவும் கியாதி பெற்றிருந்தார். ஆகவே எல்லா ஆக்டர்களும் இதை ஆட விரும்புவது ஒரு ஆச்சரிய மன்று இந்த ஆசை எனக்கும் கொஞ்சம் இருந்ததென நான் ஒப்புக்கொள்ள வேண்டியதே. 'போதாக் குறைக்குப் பொன்னியம்மன்குறை' என்ற வாறு எனது நண்பர், வாமன்பாய் என்பவர், இப்பாத்திரம் உன்னால் சரியாக ஆடமுடியாதென்று கூறியது என்னை எப்படியாவது இந் நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்து, இப்பாத்திரத்தை நான் ஆடவேண்டுமென்று உந்தியதென்கிற விஷயத்தை எனது நண்பர் களுக்கு முன்னமே தெரிவித்திருக்கிறேன். இவ்வாறு உந்தப் பட்டவனாய், 'ஹாம்லெட்' என்னும் பெயருக்கு ஒப்ப, அமலாதித் யன் என்று பெயர் வைத்து இச்சிறந்த நாடகத்தைத் தமிழில், ஆறு வருடங்களுக்கு முன்பாக எழுத ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாகக் கஷ்டப்பட்டு இந்த ஆறுவருடங்களாக எழுதி ஒரு வாறு முடித்தேன்.

முடித்த பிறகு, எனது பால்ய நண்பராகிய வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரிடம் இதைக் கொண்டுபோய், நாள்தோறும் அவருக்குச் சவகாச மிருக்கும் பொழுதெல்லாம், கொஞ்சம் கொஞ்சமாகப் படித்துக் காட்டி அவர் சொல்லும்படியான திருத்தங்களையெல்லாம்

குறித்துக்கொண்டு வந்தேன். இப்படி ஏறக்குறைய ஆறுமாதம் கழிந்தது. சில சமயங்களில், கஷ்டமான பாகங்கள் வரும்பொழுது ஒரு நாளைக்கு நான்கைந்து வரிக்குமேல் போகாது; சில சமயங்களில் ஒரு பக்கம் இரண்டுபக்கம் முடிந்து போம். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய ஒரு வாக்கியமோ வரியோ, இவைகளைப் படித்து, பிறகு அதன் தமிழ் அமைப்பை நான் கூறுவேன்; எனது நண்பர், ஆங்கிலத்தில் அம்மகா நாடகக் கவி எழுதிய ஒவ்வொரு பதத்தின் அர்த்தமும் சரியாகத் தமிழில் அமைந்திருக்கிறதா என்று ஆழ்ந்தாராய்வார்; கொஞ்சமாவது தன் மனதிற்குத் திருப்தி கரமாயில்லாவிட்டால், "ஜெஷ்டை! அதென்னடா அது? சரியாயில்லை யென்றால்! இன்னொரு தரம் படி"; என்று மறுபடியும் படிக்கச் சொல்வார். இவ்வாறு ஒவ்வொரு வாக்கியத்தையும் படித்துப்படித்துத் திருத்தித்திருத்தி, தன் மனதிற்குத் திருப்திகரமாகிறவரையில் விடமாட்டார். முதலிலேயே ஏதாவது நான் சரியாக எழுதி விட்டிருந்தால், உடனே எனக்கு இரண்டு மார்க்குகள் கொடுப்பார்! இதற்கு நான் அர்த்தம் கூறவிட்டால் இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்கு இது வெளிப்படையாகாது. பால்ய சிநேகிதர்களான எங்களுக்குள் அநேக வருஷங்களாக, ஏதாவது நன்றாகச் செய்தாலும் சொன்னாலும், ஒருவருக் கொருவர் மார்க்குகள் (Marks) கொடுத்துக் கொள்வது வழக்கம். இரண்டு மார்க்குகள்தானா, என்று எனது நண்பர்கள் பரிஹசிக்க வேண்டாம். எங்களுடைய நியமனப்படி இரண்டு மார்க்குகள் தான் அதிகப்படி (Maximum); இதைப் பெறுவது மிகவும் கடினம். சாதாரணமாக ஒரு மார்க் அரைமார்க் தான் வரும்! மேற்சொன்னபடி என் பால்ய நண்பருக்கு ஏறக்குறைய ஆறுமாசம் கஷ்டம் கொடுத்து, இந்நாடகத்தை எழுதி முடித்தேன். தன் அலுவல்களையும் கவனிக்காது, சிரமத்தையும் கவனிக்காது எனக்காக இவ்வளவு கஷ்டமெடுத்துக் கொண்டு, எனக்கு ஆசிரியர் ஸ்தானத்திலிருந்து இந்நாடகத்தைப் பூர்த்தி செய்ய உதவிய என் நண்பருக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? அவரிடம்போய் "இதற்காக உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?" என்று கேட்க மிகவும் அஞ்சுகிறேன். ஏனெனில், நான் அப்படி அவரைக் கேட்பேனாயின் "இந்தக் கேள்வி கேட்டதற்காக, உனக்கு மைனஸ் 200

மார்க் (minus 200 marks) கொடுக்கிறேன்!" என்று சொல்லி விடுவார்! அந்த மைனஸ் 200 மார்க்கை நான் எப்படிக்கழிப்பது? ஆகவே பேசாமலிருக்கிறேன். இதை வாசிக்கும் எனது நண்பர்கள் "பயன்றூக்கார் செய்த வுதவி, நயன்றூக்கினன்மை கடலிற் பெரிது" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்வார்களாக.

நான் எழுதிய இந்நாடகத்தை எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் திருத்தச் செய்ததற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. நான் சிறு வயது முதல், தமிழில் கொஞ்சம் கெட்டிக்காரனுயிருந்தேன் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. எனது நண்பரோ நான்காம் வகுப்பில் தமிழைவிட்டு சம்ஸ்கிருதம் படிக்கத் தொடங்கினூர். அப்படியிருந்தும் நாங்களிருவரும் பழய மெட்ரிக்குலேஷன் (Metriculation) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது ஒரு முறை பரீட்சையில் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பதில் என்னைவிட அதிக மார்க் (mark) வாங்கினூர். அப்பொழுது எனக்கு அவர் மீதிருந்த பொருமை கொஞ்சமல்ல. தமிழனுய்ப் பிறந்து, தமிழில் கெட்டிக்காரனெனப் பெயர் பெற்ற என்னைவிட இந்தப் பிராமணப்பிள்ளை, தமிழைவிட்டு சம்ஸ்கிருதம் படித்தவன், தமிழ் மொழிபெயர்ப்பில் என்னைவிட அதிக மார்க் வாங்குவதா! என்று என் மனதிலுதித்த பொருமையானது அளவிடத்தக்கதன்று. இன்னும் அந்தப் பொருமை என்னை முற்றிலும் அகலவில்லை யென்றே கூறவேண்டும். அவர் என்னைவிடப் பிரபலமான வக்கீல் எனப் பெயர் பெற்றூர், அதற்குச் சந்தோஷப் பட்டேன்; நான் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜானபோது அவர் ஹைகோர்ட் ஜட்ஜானூர், அதற்கும் சந்தோஷப்பட்டேன்; இதிலெல்லாம் சந்தோஷப்பட்டவன், என்னை விடத் தமிழ் மொழி பெயர்ப்பில் அவர் கெட்டிக்காரராயிருக்கிறூரென நினைக்கும் பொழுதெல்லாம், அந்தப்பழய பொருமை என் மனதில், "இருக்கிறேன்" என்கிறது! "தம்மினும் கற்றூரை நோக்கிக் கருத்தழிக, கற்றவெல்லாம், எற்றே யிவர்க்கு நாம் என்று" எனப் பெரியார் கூறிய உண்மையைக் கடைபிடித்து அவரைப் போல் நாமும் இதில் விற்பன்னனுக வேண்டுமென்று விரும்புகிறேனேயொழிய, இப்

பொறுமை எனக்கு வேறொரு கெடுதியையும் செய்யவில்லை. இக் காரணத்தினால்தான் நான் மிகவும் கஷ்டப்பட்டு எழுதிய இந்த "அமலாதித்யன்" என்னும் நாடகத்தை, அவர் பார்வையிட்டுத் திருத்தச் செய்தேன். இந்த நாடகத்தைப் படிப்பவர்கள், இது நன்றாய்த் தமிழில் அமைக்கப்பட்டிருக்கின்றது, என்று எனக்கு (Mark) கொடுக்க விரும்பினால் முதலில் அதில் பாதியை, எனது பால்ய நண்பருக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று உறுதியாய்க் கூறுவேன்.

மேற்சொன்னபடி என் நண்பரைக்கொண்டு இந்த நாடகத்தைச் சீர்திருத்திய பிறகு, துண்டுக் காகிதங்களில் இதை என் வழக்கப்படிப் பென்சிலினால் எழுதியிருந்ததை, ஒரு நோட் புஸ்தகத்தில் கடைசி முறை ஆங்கில நாடகத்துடன் ஒத்திட்டுப்பார்த்து இங்கியினால் எழுதிவைக்கவேண்டுமென்று தீர்மானித்து, சென்னையிலிருந்தால், இதற்கு ஏதாவது அடிக்கடி தடங்கலுண்டாகுமென்று கோர்ட் விடுமுறைக்காலமானதால் திருவையாற்றுக்குப் போய்ச் சேர்ந்தேன். அத்தருணம் என் தமயனார் ப. அய்யாசாமி முதலியார் அங்கு டிஸ்டிரிக்ட் முன்சீப் (District Munsiff) ஆக விருந்தார்.

அவரிடம், நான் அங்கு வந்த காரணம் இன்னதென்றும், நான் இந்த நாடகத்தை எழுதி முடித்தாகிறவரையில், என்னை அங்குள்ள சிநேகர்கள் ஒருவரும் வந்து பார்க்கும்படி விடலாகாதென்றும், வாக்கு வாங்கிக்கொண்டு, அவரும் அதன்படியே செய்ய, மூன்று வாரத்தில், ஒரு மூச்சாய், தூங்குகிற வேளை சாப்பிடுகிற வேளை தவிர இதே வேலையில் உட்கார்ந்து, ஒவ்வொரு வரியாகக் கடைசி முறை ஒத்திட்டுப்பார்த்து எழுதி முடித்தேன். எழுதி முடித்தவுடன் முதுகின் மீதிருந்த ஒரு பெரும் பாரம் நீங்கினவன் போல் சந்தோஷப்பட்டேன்.

இவ்வாறு எழுதி முடித்தவுடன் என் மனதில் ஒரு சிறு பயம் குடிகொண்டது. "சத்ருஜித்" நாடகத்தின் காகிதங்கள் காணாமற் போனபடி இது காணாமற் போனால் என்ன செய்கிறது என்று பயந்தவனாய், என் பென்சில் பிரதியை, என் பெட்டியில் வைத்துக்

கொண்டு, நான் இங்கியில் எழுதிய பிரதியை, திருவையாற்றிலிருந்து சென்னைக்கு என் பேருக்கு ரிஜிஸ்டர் செய்து அங்கிருந்து அனுப்பி விட்டு, நான் பென்சில் பிரதியுடன் பட்டணம் வந்து சேர்ந்தேன்! நான் தனியாக ரெயிலேறி வந்தமையால், ஒன்று காணாமற் போனாலும், மற்றொன்றாவது நிற்கும் என்று இம்மாதிரிச் செய்தேன். ஒரு முறை பணம் பறிகொடுத்தவன் இரண்டு முடிப்புப் போடுவானன்றோ!

இவ்வாறு எழுதி முடித்தானவுடன், எங்கள் சபையின் நிர்வாக சபையார் இதைச் சபையில் ஆடவேண்டுமென்று தீர்மானித்தனர்; அப்பொழுது அவர்களிடம் நான், "ஒத்திகைகளெல்லாம் என் மனதுக்குத் திருப்திகரமாக ஆகிறவரையில் இந்நாடகத்தை பஹிரங்கமாக ஆடேன், அன்றியும், இந்நாடகம் முடிகிறவரையில், வேறெந்த நாடகமும் ஆடமாட்டேன்" என்று கூறி விட்டேன். இது நடந்தது இவ்வருஷம் ஜுலை மாதம் என்று நினைக்கிறேன். உடனே ஒத்திகைகள் தொடங்கி ஆறுமாதம் இடைவிடாது ஒத்திகை நடத்தினேன். எனது மற்றெல்லா நாடகங்களைவிட, இந்த நாடகத்திற்குத்தான் நான் அதிக ஒத்திகைகள் நடத்தினேன் என்று நிச்சயமாய்க் கூறக்கூடும். நான் ஒத்திகைகள் நடத்தும் விதத்தை, நாடக சபைகளில் கண்டக்டர்களாக இருப்பவர்களும் இருக்க விரும்புவோர்களும், அறிய இச்சைப் படுவாரென நம்பி இதைப் பற்றிச் சற்று விவரமாய் இங்கு எழுதுகிறேன்.

ஒரு நாடகத்தை ஆடவேண்டுமென்று தீர்மானித்தவுடன், முதலில் அதை எனது ஆக்டர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து அவர்களுக்குப் படித்துக் காட்டுவேன். இதற்கு முன்பாகவே, அந்நாடகத்தைப் பற்றியும் அதன் குறை குணங்களைப்பற்றியும் எழுதியிருக்கும் புத்தகங்கள் ஏதேனும் உண்டேல், அவைகளையெல்லாம் படித்து முடிப்பேன். பிறகு என்னுடைய நாடகமாயிருந்தால் நான் எழுதும் பொழுதாவது, மற்றவர்கள் நாடகமாயிருந்தால், நான் அதைப் படிக்கும்போதாவது, நான் இன்ன ஆக்டருக்கு இன்ன வேஷம் தகுந்ததாயிருக்கும் என்று தீர்மானித்தபடி, அவர்களுக்கு நாடக பாத்திரங்களைப் பகிர்ந்துகொடுப்பேன்.

அதன் மீது ஒவ்வொரு ஆக்டராக, தனிமையில் எடுத்துக்கொண்டு, அவரது பாகத்தை நிதானமாய்ப்படித்துக்காட்டி, அதன் நுட்பங்களையெல்லாம் சொல்லிக்கொண்டு போவேன். பிறகு அவர்களுக்குத் தங்கள் தங்கள் பாகத்தைக் குருட்டுப் பாடம் செய்துகொள்ளும் படிச் சொல்வேன். இச்சமயம், "உங்கள் வசனங்களை மாத்திரம் குருட்டுப்பாடம் செய்து விடுங்கள்; இன்னமாதிரி ரங்கத்தில் நடிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்து விடாதீர்கள்!" என்று அவர்களுக்குச் சொல்லிவைப்பேன். இதற்கொரு முக்கியமான காரணம் உண்டு. ஆக்டர்களில் எல்லோரும் தேர்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள்; சில புத்திமான்கள் இப்படித்தான் நடிக்க வேண்டும் இந்தப் பாத்திரத்தை என்று சரியாகத் தீர்மானிக்கக் கூடும். மற்றவர்கள், தங்கள் பாகத்தைப் படிக்கும்பொழுது, இதை இப்படி நடிக்க வேண்டு மென்று தவருகத் தீர்மானித்து விட்டார்களோ, பிறகு அவர்களைச் சரியான வழிக்குத் திருப்புதல் மிகவும் கடினம் என்பது என் அனுபவம். சரியாக ஒருவனை நேர் வழியில் அழைத்துக் கொண்டு போவது சுலபம், அவன் கோணல் வழியில் போனபின், திருப்பிச்சரியான வழிக்குக் கொண்டு வருவது மிகவும் கஷ்டம். ஆகவே அவர்கள் பாகத்தைக் குருட்டுப் பாடம் செய்தானவுடன் அவர்களுடன் கலந்து பேசி இனி இப்படி ஆக்டு செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்கு நடித்துக் காட்டும் வரையில், அவர்களாகத் தீர்மானிக்க விடுவதில்லை. இவ்விஷயத்தில் நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று நான் பிடிவாதம் செய்வதில்லை என்று நினைக்கிறேன். புத்திமான்களான என் நண்பர்கள், நான் சொல்லிக் கொடுத்ததை விட்டு இப்படி நடித்தால் நலமாயிருக்கு மல்லவா, என்று ஏதாவது விசேஷமாகச் சொல்வார்களாளுல், சரியாளுல், அதை ஒப்புக்கொண்டு, பிறகுதான் இப் பாத்திரத்தை இவ்வாறு நடிக்கவேண்டுமென்று தீர்மானிப்பேன். நான் எழுதிய நாடகங்களிலும், எனது ஆக்டர் நண்பர்கள் பலர், நான் முதலில் சொன்னதை விட, மேலாக நடிக்கும் மார்க்கங்களை எனக்குக் காட்டியுள்ளார். அதை நான் மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு அவர்களுடன் கலந்து பேசி இன்னவாறு நடிக்க வேண்டுமென்று தீர்மானித்தபிறகு, அவர்களை ஒவ்வொருவராக, தங்கள் பாகங்களை என்முன் நடித்துக்

காட்டச் சொல்வேன், இப்படிச் செய்வதினால் ஒரு முக்கியமான அனுகூலமுண்டு. அநேக ஆக்டர்கள் கூச்சமுடையவர்களாயிருப்பார்கள்; பலர் எதிரில், அவர்கள் நடிப்பது சரியாகவில்லை வேறுவிதமாய் நடிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறினால், அவர்கள் மனதில் மிகவும் உறைத்தலாம். தனித்தனியாயெடுத்துக்கொண்டு, அவர்களை எவ்வளவு திருத்திய போதிலும், இம்மாதிரியாகக் கஷ்டப்படமாட்டார்கள். அன்றியும் புது ஆக்டர்கள், மிகவும் லஜ்ஜையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களைத் தனியாக ஒத்திகை செய்யும்படிச் செய்தால், அந்த லஜ்ஜை கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடும். இவ் விஷயத்தில் என்னுருயிர் நண்பரான சி. ரங்கவடிவேலு, எனக்கு மிகவும் கஷ்டம் கொடுப்பவராயிருந்தார். சாதாரண ஒத்திகைகளில், தன் பாகத்தைச் சும்மா படித்துக்கொண்டு போவாரே யொழிய நடித்துக் காட்டமாட்டார். கடைசி ஒத்திகைகளிலும், என் கட்டாயத்தின் பேரில்தான் சரியானபடி நடிப்பார். இதற்கு முக்கிய காரணம் அவர் மிகவும் கூச்சமுடையவராக இருந்ததேயாம். ஆயினும் தாமோதர முதலியாரைப் போல், அவரிடமும் ஒரு நற்குண முண்டு. அதாவது, தனக்கு ஏதாவது ஒரு விஷயம் நன்றாய் மனதில் உறைக்கிற வரையில், என்னை அதைப் பன்முறை நடித்துக் காட்டும் படித் தொந்திரவு செய்வார். இந்த அமலாதித்திய நாடகத்தில் அவர் எடுத்துக் கொண்ட அபலை (Ophelia) வேஷத்தில், அவர் வரும் கடைசி காட்சியில் பயித்தியக்காரியாக நடிக்க வேண்டியிருந்ததை, தனக்குச் சரியாக வருமளவும் நான் எத்தனை முறை அவருக்கு, அதை அவரது வீட்டின்மேல் மாடியில் நடித்துக் காட்டினேன் என்பது, என்னால் கணக்குச் சொல்ல முடியாது.

மேற்சொன்னபடி தனித்தனியாக ஒவ்வொரு ஆக்டரையும், தேர்ச்சி செய்த பிறகு தான், எல்லா ஆக்டர்களையும் ஒருங்கு சேர்த்து, மொத்த ஒத்திகைகள் ஆரம்பிப்பேன். இம்மாதிரியாக மொத்தமாய் ஆக்டர்கள்கூடி நடிக்கும் பொழுதுதான், அவரவர்கள் செய்யவேண்டிய பை பிளே (By play) என்பதைச் சொல்லிக் கொடுப்பேன். நாடக மேடையின்மீதேறி நாடகமாடியிராத இதை வாசிக்கும் சில நண்பர்களுக்கு இது இன்னதெனத் தெரியாதிருக்க

லாம். ஆகவே இதைப்பற்றிச் சற்று விவரமாக எழுதவேண்டிய வனாயிருக்கிறேன். பைபிளே என்றால், ரங்கத்தில், ஒரு நடன் ஏதாவது பேசிக் கொண்டிருக்கும்பொழுது, மற்றவர்கள் தாங்கள் பேசவேண்டிய வசனம் ஒன்றுமில்லாவிட்டாலும், தாங்கள் செய்ய வேண்டிய காரியம், காட்டவேண்டிய முகக்குறிப்பு, முதலியவைக ளாம். இதற்கு என் நாடகமொன்றிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். மனோஹரன் நாடகத்தில் முதல் அங்கம் நான்காம் காட்சியில் மனோஹரன் மடிந்ததாக நம்பி, பத் மாவதியும் விஜயாளும் தீப்புகத் தீர்மானித்துப் புறப்படுகிறார்கள்; அச்சமயம் மனோஹரன் திடீரென்று ராஜப்பிரியனுடன் ரங்கத்தில் தோன்றுகிறான் ; புஸ்தகத்தில் விஜயாளும் பத்மாவதியும் விரைந்து போய் மனோஹரனை ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறார்கள் என்று எழுதியிருக்கிறது; மேடையின் மீதிருக்கும் மற்ற ஆக்டர்களெல் லாம் என்ன செய்ய வேண்டும்? இச்சந்தர்ப்பத்தில், அநேக கம் பெனிகள் இதை ஆடும்பொழுது, மற்ற ஆக்டர்களெல்லாம், அசை வற்று நின்று கொண்டிருப்பதை, நான் பன்முறை பார்த்திருக்கி றேன். நம்முடைய பாகம் வரவில்லையே, அதுவரையில் நாம் சும் மாகத்தான் இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய தாத்பரியம் போலும்; ஆகவே, அவர்கள் நான் வேடிக்கையாய் எனது ஆக்டர்க ளுக்குக் கூறுவது போல "அவல் மென்று கொண்டு" இருப்பார் கள்! கொஞ்சம் யோசித்துப் பார்ப்பார்களாயின் ஒவ்வொரு ஆக்ட ரும் இன்னின்னது செய்ய வேண்டுமென்று அவர்களுக்கே புலப் படும். முதலில் பௌத்தாயனன் தான் செய்த சூழ்ச்சி யெல்லாம் கெட்டு, தன்னுயிருக்கே ஹானி வந்ததே என்று பயந்து மெல்ல நழுவப் பார்க்கவேண்டும்; ராஜப்பிரியர் ஆதிமுதல் இந்தக் கபட சன்னியாசியின் மீது சந்தேகங் கொண்டவர், மனோஹரன் முதலிய மற்றவர்களையும் கவனியாது ஓடிப்போய் பௌத்தாயனனைக் கெட் டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்; மனோஹரனைத் தன் சொந்த மகன்போல் பாவித்து வந்த சத்தியசீலர், அளவிலாச் சந்தோஷம் கொண்டவராய் மனோஹரனிடம் நெருங்கவேண்டும், பணிப்பெண் ணாகிய நீலவேணி, வசந்தசேனை செய்த சூதெல்லாம் பயன்படாமற் போயிற்றே என்று மகிழவேண்டும். இவ்வாறு மற்ற ஆக்டர்க ளெல்லாம் செய்வதுடன், அவரவர்களுடைய மனோ பாவத்திற்குத்

தக்கபடி, முகக்குறிப்பு முதலிய அபிநயத்தைக் காட்டவேண்டும். இப்படிச் செய்வதைவிட்டு, இந்நான்கு ஆக்டர்களும், "அவல் மென்று" கொண்டிருந்தால், இக்காட்சி என்னமாய் நன்றாயிருக்கும் என்பதை எனது நண்பர்களே கவனிப்பார்களாக.

இம்மாதிரியான பைபிளே ஒவ்வொரு ஆக்டருக்கும் சொல்லிக்கொடுக்கவேண்டியது அதி அவசியமாம். இது சரியாக இல்லாவிட்டால் எந்த நாடகமும் சோபிக்காது. ரங்கத்தில் ஒரு ஆக்டர் நன்றாய் நடித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவனுடன் இருக்கும் மற்ற ஆக்டர்கள், அதற்குத் தக்கபடி, "பைபிளே" காட்டாதபடியால், அந்த ஆக்டர் நன்றாய் நடித்ததெல்லாம், சபையோர் மனதில் உறாத்தாததை நான் பன்முறை கண்டிருக்கிறேன். இக்குற்றம் முக்கியமாக நாடக மாடுவதையே ஜீவனமாக உடைய நாடகக் கம்பெனிகளில் நான் கண்டிருக்கிறேன். தென் இந்திய நாடகமேடை சீர்ப்படவேண்டுமானால் இவர்கள் இந்த 'பைபிளே' யை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்பது திண்ணம்.

இம்மாதிரியாக இந்த, "அமலாதித்யன்" என்னும் நாடகத்தில் எனது ஆக்டர்களுக்கு நான் "பைபிளே," சொல்லிக்கொடுத்ததற்கு ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கெழுதுகிறேன். இந்நாடகத்தில் மூன்றும் அங்கம் இரண்டாம் காட்சியில் அமலாதித்யன் தன் தந்தை மடிந்த விதத்தைப்போல் ஒரு நாடகத்தை வேஷதாரிகள் நடிக்கச் செய்ய, அதில் தூங்குகிற அரசன் காதில், அவனது சகோதரன் விஷம் விடுவதுபோல் நடிக்கப்படும்பொழுது இதைக்கண்டு, தான் செய்த கொடுங்கொலையை அமலாதித்யன் அறிந்துகொண்டான் எனத்தெரிந்தவனுய், பயந்தெழுந்து, காலதேவன் ரங்கத்தை விட்டு புறப்பட்டுப்போகிறுன். இது நடக்கும்பொழுது ஆட்கள் உட்பட ரங்கத்தின் மீது 11 நாடகப் பாத்திரங்கள் இருக்கின்றன. ஒரு நாள் விக்டோரியா பப்ளிக் ஹால் மேல் மாடியில், இக்காட்சியை ஒத்திகை செய்தேன். எனது நண்பர்களாகிய வி. வி ஸ்ரீனிவாச அய்யங்கார், அ. வாமன்பாய், இன்னும் இரண்டொரு பெயர்களை ஹாலில் மத்தியில் உட்கார வைத்து, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கச்சொன்னேன். முதலில் இந்தச் சந்தர்ப்பத்தில்

நான் நடிப்பதும், என் முகக்குறிப்பும் ஏற்றபடி இருக்கிறதா என்று அவர்களைப் பார்க்கச்சொல்லிவிட்டு, பிறகு நானும் ரங்கமேடையை விட்டு விலகி அவர்களுடன் சேர்ந்து கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் மற்ற ஒவ்வொரு ஆக்டரும் எப்படி நடிக்க வேண்டுமென்று சொல்லி, ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆக்டராகக் கவனித்து சரியாயிருக்கிறதா என்று பார்த்து வந்தோம். இந்த ஒரு சந்தர்ப்பத்தைப் பதினொரு முறை நடிக்கச் சொல்லி, சீர்திருத்தினோம். பதினொரு முறை இவ்வாறு நடித்தவுடன் காலதேவனாக நடித்த எனது நண்பர் எம். சுந்தரேசன் என்பவர், "சம்பந்தம்! இனி என்னால் இதை நடிக்க முடியாது. எனக்கு இளைப்பாயிருக்கிறது, என்னை மன்னிக்க வேண்டும்!" என்று சொல்லி சோபாவின்மீது சாய்ந்து விட்டார். என்னுடைய ஆக்டர்கள் அக்காலம், நான் அவர்களை எவ்வளவு கஷ்டப் படுத்திய போதிலும், உடன்பட்டு, மனம் கோணாது, கற்று வந்ததைப்பற்றி எனக்குண்டான மன மகிழ்ச்சியை, இதை வாசிக்கும் எனது இளைய நண்பர்களுக்குக் கூறும் பொருட்டே இதை எழுதலானேன். தற்காலம் சில கண்டக்டர்கள், ஆக்டர்களை ஒத்திகைக்கு வரும்படி அழைத்தால், "எல்லாம் என் பாடம் எனக்கு நன்றாய் வரும், நான் மேடையின் மீது ஆடி விடுகிறேன், எனக்கு ஒத்திகை வேண்டாம்" என்று போய்விடுவதைப் பன்முறை பார்த்திருக்கிறேன். இதைப் படித்தாவது, என் இளைய நண்பர்கள் அவ்வாறு செய்யாமலிருக்க மாட்டார்களா என்று கோரினவனாயும், இதை இங்கு எழுதலானேன்.

இந்த ஒத்திகைகள் இவ்வாறு நடக்கும் பொழுதும், அதற்கு முன்பாகவும், இந்த "ஹாம்லெட்" நாடகத்தைப் பற்றிச் சென்னையிலுள்ள புஸ்தகசாலைகளில் என்னென்ன அச்சிட்ட புஸ்தகங்களிருந்தனவோ ஏறக்குறைய அவைகளையெல்லாம் படித்தேன்; முக்கியமாக நான் பூண மேற்கொண்ட அமலாதித்யன் பாத்திரத்தைப் பற்றி என்னென்ன ஆராய்ச்சிகள் (Criticism) கிடைத்தனவோ அவைகளையெல்லாம் வாசித்தேன்; அதன்றியும் பிரபலமான ஆங்கில ஆக்டர்கள் இதை எப்படி எப்படி நடித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் வாசித்து, ஒரு நோட்புஸ்தகத்தில் குறித்துக்கொண்டேன். இந்தப் பாத்திரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்களும்,

ஆடினவர்களும், இரண்டு பிரிவாயிருக்கின்றனர். ஒரு பிரிவார் அமலாதித்யன் (ஹாம்லெட்) வாஸ்தவத்தில் பித்தம் பிடித்தவனா னான் என்று மதிக்கின்றனர்; மற்றொரு பிரிவார், அவனுக்குப் பித்தம் பிடிக்கவில்லை, பித்தம் பிடித்தவன் போல் நடித்தான் சில சமயங்களில் என்று கூறுவார்கள். இதில் எது சரி, எது தவறு, என்கிற விவரதத்தைப்பற்றி, எழுதியிருப்பதையெல்லாம் சேர்த்தால் ஒரு சிறு புஸ்தக சாலையாகும்! ஆராய்ச்சியுடன் நிற்க விரும்புவோர் பாடு சுலபம்; இதை நடிப்பவர்பாடு கஷ்டம். ஏனெனில் ஆராய்ச்சி செய்பவர்கள், 'கோழுட்டி சாட்சியாக' இரண்டு பக்கத்திலும் கொஞ்சம் நியாயமிருக்கின்றது என்று கூறிவிட்டுச் சும்மா இருந்து விடலாம்; மேடையின்பேரில் நடிப்பவன் ஏதாவது ஒரு பட்சத்தை ஒப்புக்கொண்டு, அதன்படி நடித்தாகவேண்டும். ஆதலால் எனக்கு கிடைக்கக் கூடிய ஆராய்ச்சிகளையெல்லாம் படித்தான பிறகு நான் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டியதாயிற்று. நான் கடைசியில் வந்த தீர்மானத்திற்குக் காரணங்கள் எல்லாம் கூறப்புகின் அது ஒரு பெரிய வியாசம் ஆகும். ஆகவே அதை விட்டு என் தீர்மானத்தை மாத்திரம் இங்கெழுதுகிறேன். தன் தந்தையின் அகால மரணத்தினாலும் தன் தாய் விரைவில் மறு விவாகம் புரிந்ததாலும், மிகவும் மனங்கலங்கினவனான அமலாதித்யன், தனது தந்தையின் அருவத்தின் மூலமாக, அவர் தம்பியினால் கொலை செய்யப்பட்டதை அறிந்தவுடன், தலை மீது இடி விழுந்தது போல, மண்டை கலங்கி னவனானன்; உடனே அவன் உயிர்த்தோழனை ஹரிஹரனுடன் பேசுங் காலையில் அவன் இன்னது சொல்கிறோம் இன்னது சொல்லவில்லை என்பதையே சற்றும் அறியாத படி, மூளை கலங்கியே பேசத் தொடங்கினான்; ஆயினும் அவனுக்குப் பித்தம் பிடிக்கவில்லை. பிறகு ஒருவாறு நிதானம் கொண்டவனாய், தான் பயித்தியக் காரனைப்போல் நடந்ததையே, தனக்கொரு உதவியாகக் கொண்டு தன் சிற்றப்பனாகிய அரசன் தன்மீது சந்தேகங் கொள்ளாதிருக்கும் படி, தான் பழிவாங்கத்தக்க சமயம் வாய்க்கும் வரையில், பயித்தியக் காரனைப் போல் நடித்து வந்தான் என்பது என் தீர்மானம். இதை மனதில் வைத்துக்கொண்டு இப்பாத்திரத்தை நான் நடித்தேன்.

அன்றியும் இப்பாத்திரத்தை நடிப்பதில் எனக்கு இன்னொரு கஷ்டம் நேர்ந்தது, இந்தப்பாத்திரத்தை மேடையில் நடித்த

பொழுது, எட்மண்ட்கீன் (Kean) என்பவர் இவ்வாறு நடித்தார்; கெம்பிள் (Kemble) என்பவர் இவ்வாறு நடித்தார், சர் ஹென்றி இர்விங் (Sir Henry Irving) என்பவர் இவ்வாறு நடித்தார், பர்பேஜ் (Burbage) என்பவர் நடித்தது இவ்விதம், சர்பீர்போம் டிரீ (Sir Beerbohm Tree) நடித்தது இவ்விதம்; அமெரிக்காதேசத்து ஆக்டராகிய பூத் (Booth) என்பவர் நடித்த மாதிரி இது, சர் போர்ப்ஸ் ராபர்ட்சன் (Sir Forbes Robertson) நடித்தது இம்மாதிரி, சர் பிராங்க் பென்சன் (Sir Frank Benson) இம்மாதிரி, நடித்தார்; இன்னும் மற்ற பிரபல ஆக்டர்கள் இப்படி இப்படி நடித்தார்கள் என்பதை எல்லாம் வாசித்தபொழுது, எனக்கு, இதில் எதை ஏற்றுக்கொள்வது, ஏதைத் தள்ளிவிடுவது என்கிற ஒரு பெரிய சங்கையுண்டாயிற்று. இவைற்றையெல்லாம் படித்து, என் மூளையும் கொஞ்சம் சிதறிப்போயிற்று என்று நான் ஒப்புக்கொள்ள வேண்டும். இத்தருவாயில் இன்னது செய்வதென்று தெரியாமல் கலங்கி நின்றபொழுது, எனது நண்பர், நமது நாட்டின் நன்மைக்காகக் காங்கிரஸ் மகாசபையில் பல வருஷங்கள் உழைத்த, எஸ் ஸ்ரீனிவாச ஐயங்கார் என்பவர், ஒரு சந்தர்ப்பத்தில், கல்வியின் பயனைப்பற்றிக் கூறிய சில வார்த்தைகள் எனக்கு ஞாபகம் வந்தது. அவர் சொன்னதாவது, "கல்வியின் முழுப்பயனையும் பெறவேண்டுமென்றால், நாம் கற்ற பலவிவரங்களையும் மறந்து அவற்றின் சாரம் மாத்திரம் நமது மனதில் நம்மையுமறியாதபடி, நாம் தங்கச் செய்ய வேண்டும்!" என்பதாம். இதையே நான் ஒரு பற்றுக் கோடாகக் கொண்டு, பிரபல ஆக்டர்கள் நடித்த விதத்தில் நான் படிக்க விரும்பியதையெல்லாம் படித்தான பிறகு ஒரு வாரம் இந்த நாடகத்தைப் பற்றி ஒன்றுமே எண்ணாது, மற்ற வேடிக்கை விநோதங்களில் என் மனதைச் செலுத்தி, நான் படித்த விவரங்களையெல்லாம் மறக்க முயன்று, ஒருவாறு அப்படியே சாதித்தேன். பிறகு கடற்கரையோரம் தனியாய்ச் சென்று, அமலாதித்யன் பாத்திரம் இன்னின்ன காட்சியில் இப்படி இப்படி நடித்தல் சரியாகுமென்று தீர்மானித்தேன், இதன் பிறகு தான் எனது பாத்திரத்தை ஒத்திகை செய்ய ஆரம்பித்தேன்.

இவ்வாறு என் கவனத்தை யெல்லாம் இந் நாடகத்தின் மீதே செலுத்தியபடியால் இவ்வருஷம் கடைசிவரையில் ஏறக்குறைய 8

மாதத்திற்கு வேறொரு தமிழ் நாடகமும் என்னால் கொடுக்க முடியாமற் போயிற்று. அதற்காக நிர்வாக சபையார் என் மீது குறை கூறியும் எழுதினர். என்ன நேர்ந்த போதிலும் என் தீர்மானத்தினின்றும் மாறமாட்டேன் என்று ஒரே பிடிவாதமாய் உட்கார்ந்தேன்.

மேற்சொன்னபடி ஒத்திகைகளெல்லாம் சரியாக நடத்தி இந் நாடகத்திற்கென்று, வேண்டிய திரைகள், உடுப்புகள் எல்லாம் தயார் செய்தான பிறகு, 1906௵ ஜனவரி மாதத்தில் ஒரு தேதி குறித்தோம் இந்நாடகத்தை ஆடுவதற்கு. இதற்கு திடீரென்று ஒரு இடையூறு நேர்ந்து, தெய்வாதீனத்தால், என் தீர்மானத்தினின்றும் பிறழவேண்டி வந்தது. ஒரு நாள் சாயங்காலம் என் கடைசி ஒத்திகைகள் ஒன்றை நான் நடத்திக்கொண்டிருக்கும் பொழுது, எனது பால்ய நண்பர், என்னிடம் வந்து, "கொஞ்சம் ஒத்திகையை நிறுத்து; ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வந்திருக்கிறேன்!" என்றார். அப்படியே நிறுத்தி, என்னவென்று விசாரிக்க அவர் பின் வருமாறு தெரிவித்தார்:—"சர் சுப்ரமணிய ஐயர் (ஹைகோர்ட்டு ஜட்ஜ்) என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினர். என்ன வென்று போய்க்கேட்டேன். அவர் அத்யட்சராயிருக்கும், லார்ட் ஆம்டில் (Lord Ampthill) என்டர்டெயின்மெண்ட் (Entertainment) கமிட்டியில் கவர்னருக்குக் கொடுக்கப்போகிற என்டர்டெயின்மெண்டில் சுகுண விலாச சபை சில காட்சிகள் நடிக்கவேண்டுமென்று கேட்டார். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் கைவிடலாகாது. நமது சபைக்கு நல்ல பெயருண்டாகும்; நீ என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

அதற்கு நான் அதெல்லாம் முடியாது இந்த அமலாதித்ய நாடகத்தைப் பிரித்துக் கொஞ்சம் காட்சிகளாக ஆட முடியாது. இந்த நாடகம் ஆடியாகிற வரையில் வேறெந்த நாடகமும் ஆடமாட்டேன் என்று தீர்மானித்துவிட்டேன், அந்தத் தீர்மானத்தினின்றும் மாறமாட்டேன், என்று கண்டிப்பாய்ச் சொல்லிப் பார்த்தேன். எனது நண்பர், "முறட்டுத்தனம் பண்ணாதே! நான் சொல்வதைக்கேள்!" என்று எவ்வளவோ நியாயங்களெடுத்துக் கூறிப்

பார்த்தார். என்னுடனிருந்த ஆக்டர்களும் வேண்டினர். என தாருயிர் நண்பர் சி. ரங்கவடிவேலுவும், 'நீங்கள் ஒப்புக்கொள்ளுங் கள்'! என்று மன்றாடினார்; கவர்னர் முன்னிலையில் நாடகம் நடத்து வதென்றால் எல்லோருக்கும் ஆசைதானே! அன்றியும் கவர்னர் முன்னிலையில் எங்கள் சபை அதுவரையில் ஆடியதில்லை. இவ்வாறு எல்லோரும் கேட்டும், நான் ஒரே பிடியாய், 'மாட்டேன்'! என்று கூறிவிட்டேன். "இந்த பக்கு ஒரு பிடிவாதம் பிடித்தால் மாற மாட்டான்!" என்று சொல்லி மனங் கசிந்து, ஒத்திகையிடத்தை விட்டு வெளியே போய்விட்டார். நான் என் ஒத்திகையை மறுபடி ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கும் சமயத்தில் கொஞ்சம் காலம் கழித்து மறுபடியும் வந்து சேர்ந்தார்! ஒரு காட்சி ஒத்திகை முடி த்து சற்று சிரம பரிஹாரம் கொள்ளும் சமயம் பார்த்து, "சம்பந் தம்! நான் சொல்வதைக்கேள்! குறுக்கே ஒன்றும் பேசாதே! நான் சொல்லியானதும், உனக்கு இஷ்டமில்லாவிட்டால், நான் உன்னைப் பலவந்தம் செய்யவில்லை" என்று மெல்ல ஆரம்பித்தார். இந்த முறட்டுக்குதிரையை அடக்கி ஆள அவர் ஒருவருக்குத்தான் வழி தெரியும். "என்ன சீக்கிரம் சொல்!" என்று முகத்தைச் சுளித் துக்கொண்டு கேட்டேன். "நான் பதில் கொண்டு வருவதாகச் சொல்லிவரவே, அவர்கள் எல்லாம் மீடிங் கலையாதிருந்தார்கள்; நான் போய், எங்கள் சபையில் ஒரு பிடிவாதக்கார மக்கு ஒருவன் இருக்கிறான், அவன் முடியாதென்கிறான்—நான் இப்படிச் சொல்ல வில்லை, ஆயினும் நான் சொன்னதின் தாத்பர்யம் அது!—என்று சொல்ல, 'ஏன்? என்ன ஆட்சேபனை?' என்று கேட்டார், சர், சுப் பிரமணிய ஐயர்; அதன் மீது நான் வாஸ்தவத்தைச் சொல்ல வேண் வேண்டியதாயிற்று—'எங்கள் சபையில் தமிழ் கண்டக்டர், தமிழில் ஹாம்லெட் நாடகத்தை ஒத்திகை செய்து கொண்டிருக்கிறான், அவன் அந்த நாடகம் ஆடப்படுகிறவரையில் வேறு எந்த நாடகத் தையும் எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான் என்று தெரிவித்தேன். யார் அப்படிப்பிடிவாதம் செய்வதென்று அவர் கேட்க, உன் பெயரைச் சொன்னேன். அதன் மீது அவர் "எந்த சம்பந்தம்? மிஸ்டர் விஜயரங்கம்'s பிள்ளையா?" என்று கேட் டார். 'ஆம்' என்றேன். அப்படியா? எனக்கு சம்பந்தத்தைத் தெரியும். (அவரும் என் தந்தையும் அத்யந்த சிநேகிதர்களாக

விருந்தவர்கள் ; என்னையும் அவர் பன்முறை பார்த்திருக்கிறார்.) 'நீ சம்பந்தத்தினிடம் போய், அவன் எங்களுடைய என்டர்டெயின் மெண்டில் ஏதாவது நாடகத்தில் சில காட்சிகள் ஆடினால், அவனது 'ஹாம்லெட்' நாடகத்திற்கு பேட்ரனேஜ் (Patronage) நான் கொடுப்பதாகச் சொல், எப்படியாவது ஒப்புக்கொள்ளச்சொல்" என்று சொல்லியனுப்பியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆம்! என்று சொல்பிறகு மற்ற சமாசாரங் களையெல்லாம் அப்புறம் தீர்மானித்துக் கொள்ளலாம்." என்று கூறினார். இந்தத் தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வது? ஒரு பக்கம் எனது ஆக்டர்களெல்லாம் கவர்னர் முன்னிலையில் ஆட வேண்டுமென்று தங்களுக்கு இச்சை யிருப்பதைத் தெரிவித்திருக் கின்றனர். மற்றொரு பக்கம், என் தந்தையின் அத்யந்த நண்பரா கிய சர். சுப்பிரமணிய அய்யர், ஹைகோர்ட்டு ஜட்ஜ், கேட்டனுப்பி யிருக்கிறார். அன்றியும் பச்சையப்பன் கலாசாலையின் வருடாந்திரக் கொண்டாட்டங்களில் இரண்டொரு முறை, நான் புஸ்தகப் பரிசு பெற்றபோது இவர் எனக்கு என் தந்தை முன்னிலையில், சந்தோஷ வார்த்தைகள் கூறியிருக்கிறார்; முக்கியமாக, என் அமலாதித்ய நாடகத்திற்குத்தான் வருவதாகச் சொல்லியனுப்பி யிருக்கிறார், என்று இவைகளை யெல்லாம் யோசித்துச் சரிதான் என்று ஒப்புக் கொண்டேன். இத்தனை வருடங்கள் பொறுத்து இதைப்பற்றி யோசித்து பார்க்கும் பொழுது, அந்த கடைசி காரணம் தான் முக் கியமாக என்னை ஒப்புக்கொள்ளச் செய்தது என்று நினைக்கிறேன். உடனே எனது நண்பர், இதைத் தெரிவிக்க, அந்த மீட்டிங் நடக்கு மிடத்திற்குப் போய்விட்டார். எனது ஆக்டர்களெல்லாம் மிகவும் சந்தோஷப்பட்டனர். எனக்கும், ஒரு விதத்தில் நமது தீர்மானித் தினின்றும் தவறுகிறோமே யென்று இருந்த போதிலும் நமது சபைக்கு இவ்வளவு பெருமைகிடைக்கிறதே என்ற சந்தோஷம் தான்.

இங்கு, பெரிய கதையில் கிளைக்கதை வருகிறதுபோல், அமலா தித்யன் நாடகம் ஆடியகதையைச் சொல்லவந்தவன், இடையில், கவர்னர் முன்னிலையில் நாங்கள் ஆடிய காட்சிகளைப்பற்றி எழுத வேண்டியவனா யிருக்கிறேன்.

போன் எனது நண்பர் ஸ்ரீனிவாசஐயங்கார், "நான் சீக்கிரம் திரும்பி வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போனபடியால் நாங்கள் அன்றைய ஒத்திகையை முடித்து விட்டு உட்கார்ந்து கொண்டிருந்தோம். அவர் வந்தவுடன் "அவர்கள் மிகவும் சந்தோஷமாய் ஒப்புக்கொண்டார்கள். பிறகு என்ன ஆடுவது என்கிற பேச்சு வந்த பொழுது, உனது அபிப்பிராயம் என்னவென்று என்னைக் கேட்டார்கள். அதற்கு நான், நீங்கள் சொல்லுகிறபடி ஒருமணி நேரத்தில் முடியவேண்டுமென்றால், முழு நாடகம் ஒன்றும் போட முடியாது. ஒரு சோககரமான காட்சியும் ஒரு ஹாஸ்யமான காட்சியும் தான் ஆடமுடியும் என்றேன். அதற்கு அங்கிருந்த பாடம் துரையவர்கள் (Boddam J) உங்கள் சபையார் இரண்டு காட்சிகள் ஆடட்டும், அதில் எது சோககரமானது, எது ஹாஸ்யகரமானது என்று நாங்கள் தீர்மானிக்கின்றோம்! என்றார். (பகிடியாய் பேசிய இவரது அபிப்பிராயம் என்னவென்றால், நீங்கள் ஹாஸ்யம் என்று நினைக்கும் காட்சி எங்களுக்கு துக்கத்தை விளைக்கலாம்; சோகரசம் என்று நீங்கள் நினைப்பது, எங்களை நகைக்கச் செய்யலாம்! என்பதாம்), என்ன நாம் ஆடவேண்டுமென்பதை இப்பொழுதே சொல்லுங்கள்! நாளை அவர்களுக்குத் தெரிவிப்பதாகச் சொல்லிவந்திருக்கிறேன்" என்றார். பிறகு நாங்கள் எல்லோரும் ஆலோசித்து 'விரும்பிய விதமே' என்னும் எனது நாடகத்தினின்றும், குஸ்தி பிடிக்கும் காட்சியில் அநேக ஆக்டர்களுக்குப் பாகம் இருக்கிறது என்று அதை ஒன்றாக ஏற்படுத்தினோம். சோககரமான காட்சி தகுந்ததாக அகப்படவில்லை. அன்றியும், சந்தோஷகரமான காலத்தில், சோகரசம் கூடாதென்று யோசித்து, கவர்னருக்குக் கொடுக்கும் கூட்டத்தில் அநேகம் ஆங்கிலர்கள் வருவார்கள், அவர்களுக்குத் தெரிந்த கதையாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்து, "சகுந்தலை" நாடகத்தில் முக்கியமான காட்சிகளை தோற்றக்காட்சிகளாக (Tableau Vivantes) காட்டுவோம், என்று தீர்மானித்தோம்.

அதன்படியே இவ்வருஷம் பிப்ரவரிமாதம் 8-ஆம் தேதியில், சவுத் இந்தியன் ஆத்லெடிக் அசோசியேஷன் (South Indian Athletic Association) மைதானத்தில் லார்ட் ஆம்டில் அவர்

களுக்கு நடந்த உபசரணைக் கூட்டத்தில், மேற்சொன்ன காட்சிகளை நடத்தினோம். காட்சிகள் முடிந்த உடன் அங்கு நடந்த ஒரு வேடிக்கையைக்கூறுகிறேன். காட்சிகள் நடிக்கப்படும்பொழுது, கவர்னர் அவர்கள் ஸ்திரீ வேடம் பூண்ட ஆக்டர்கள் (அ. கிருஷ்ணசாமி ஐயரும், ரங்கவடிவேலுவும்) ஸ்திரீகளே என்று எண்ணி, இப்பெண்கள் நடிப்பது நன்றாயிருக்கிறதென மெச்சினாராம். அதன் பேரில் பக்கத்திலிருந்தவர்கள், இவர்கள் ஸ்திரீகள் அல்ல ஆடவர் பெண்வேடம் தரித்திருக்கின்றனர் என்று கூறவே, அவர் நகைத்து, ஆனால் அவர்களைத்தான் பார்க்கவேண்டுமென்று சொல்ல, காலஞ்சென்ற ராஜாசர் சவலை ராமசாமி முதலியார் அவர்கள், என்னிடம் வந்து "அப்பன், அந்தப் பெண்டுகளை கவர்னர் பார்க்க வேண்டுமாம். கொஞ்சம் அனுப்பு" என்று நடந்ததைக் கூறி நகைப்புடன் கேட்டார். பிறகு அவர்களுடைய வேஷத்துடன் அவர்களிருவரையும் கவர்னர் அருகில் அழைத்துக்கொண்டுபோய், அவர்களை இன்னாரெனத் தெரிவித்தார்.

இவ்வாறு நாங்கள் கவர்னர் எதிரில் நடித்ததின் பலன் என்னவென்றால், சுகுணவிலாச சபையின் புகழ் பரவி, விரைவில் சென்னையிலுள்ள கனவான்களில் அநேகர் எங்கள் சபையைச் சேர்ந்ததேயாம்; இவ்வொரு வருஷத்தில் 153 அங்கத்தினர் சேர்ந்தனர். இது முதல் பலவருஷங்கள் வரையில், சென்னையில் கவர்னருக்கோ, ராஜப்பிரதிநிதிக்கோ, (Viceroy) அல்லது யாராவது சென்னைக்கு வந்த பெரிய மனிதருக்கோ, உபசரணைக் கூட்டங்கள் நடந்தால் சுகுண விலாசசபையார் ஏதாவது காட்சிகள் நடத்தவேண்டுமென்று கேட்கப்பட்டோம். அடிக்கடி எல்லோரும் இம்மாதிரியாகக் கேட்கிறார்கள், இது என்ன பெரிய கஷ்டமாயிருக்கிறதென, பிறகு சபையின் பொதுஜனக் கூட்டத்தின் (General Body) உத்தரவின்றி இம்மாதிரியான கூட்டங்களில் சபையார் ஆடக்கூடாதென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது!

இனி இக்கிளைக் கதையை இதனுடன் முடித்து, மூலக்கதைக்குப் போகிறேன். இந்த "அமலாதித்யன்" நாடகத்திற்கு ஒத்திகைகள் மிகவும் கண்டிப்பாய் நடத்தியது மன்றி இதற்காகவென்று

புதியபடுதாக்களும் உடுப்புகளும் சித்தம் செய்தோம்; ஒரு நாள் எல்லா உடுப்புகளுடன் மேடையின் மீது ஒத்திகையும் போட்டுப் பார்த்தோம்.

இந்த நாடகமானது 1906ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஆடப்பட்டது. விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஆடப்பட்டது என்கிற மேற்கண்ட வாக்கியத்தை நான் எழுதும் பொழுது, அதைப்பற்றிய ஒரு வேடிக்கையான சமாசாரம் எனக்கு ஞாபகம் வருகிறது. இதை எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் எனக்குத் தெரிவித்தபடி இங்கு எழுதுகிறேன்.

அவர் இந்நாடகத்திற்கு முந்திய தினம், சாயங்காலம், என்னிடம்வந்து, "சம்பந்தம்! ஒரு சமாசாரம் கேட்டாயா? இன்று மத்தியானம், கோர்ட்டில் நடந்தது தெரியாதே உனக்கு? பத்தரை மணிக்கு, சர் சுப்பிரமணிய ஐயர், தன் அறைக்கு கையில் தடியைப் பிடித்துக்கொண்டு, பட்பட்! என்று போய்க் கொண்டிருந்தவர், என்னைப்பார்த்து சற்று நின்று 'ஸ்ரீனிவாச ஐயங்கார், நாளைக்கு நாடகம் என்று சொன்னீர்களே அது எங்கே? மெமோரியல் ஹாலிலே தானே, நடக்கப் போகிறது'? என்று கேட்டார். எனக்கு அடங்காச் சிரிப்பு வந்தது. ஆயினும் அதை அடக்கிக்கொண்டு, மெமோரியல் ஹாலில் அல்ல, விக்டோரியா பப்ளிக்ஹாலில், என்று தெரிவித்து, விக்டோரியா பப்ளிக்ஹால் பீபில்ஸ் பார்க்கில் இன்ன இடத்திலிருக்கிற தென்பதையும் தெரிவித்தேன்! இல்லாவிட்டால் இந்தக் கிழவனர், நாளைக்கு மெமோரியல் ஹாலுக்குப்போய் அங்கு ஒன்று மில்லாததைக்கண்டு, வீட்டுக்குத் திரும்பிப் போயிருப்பார்!" என்று நகைத்துக் கொண்டே தெரிவித்தார்.

இனி மறுநாள் நடந்த இந் நாடகத்தைப்பற்றி எனக்கு ஞாபகம் இருக்கிற சமாசாரங்களை என் நண்பர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அன்று நாடகம் நடந்ததில் எனக்கு முக்கியமாக ஞாபகமிருக்கிற விஷயம் என்னவென்றால், இது எப்படி முடியுமோ,

என்று என் மனதில் பெரும்பயம் குடிகொண்டிருந்ததே! ஷேக்ஸ்பியர் மகா நாடகக் கவியியற்றிய நாடகங்களிலெல்லாம் சிறந்த இந் நாடகத்தை, நான் தமிழில் மொழி பெயர்த்தது, எப்படி இருக்கிற தென சபையார் நினைக்கிறார்களோ, என்று முதல் பயம்; இரண்டாவது ஹாம்லெட் (அமலாதித்யன்) வேடத்தில் மிகவும் கீர்த்தி பெற்ற ஆக்டர்களும் சூட்சும புத்தியுடைய அறிவாளிகளை முற்றிலும் திருப்தி செய்விக்கவில்லையே, நாம் எப்படி கற்றறிந்தவர்கள் கூடிய இச்சபையாரைத் திருப்தி செய்விக்கப் போகிறோம் என்கிற பயம்; மூன்றாவதாக, எனது நண்பர் ரங்கவடிவேலு முதலிய ஆக்டர்களெல்லாம், சரியாக நடிப்பார்களோ இல்லையோ என்கிற பயம்; இவ்வாறு பலவிதமான பீதியினால் கலக்கப்பட்டிருந்தேன் என்பது திண்ணம். நான் பி. ஏ. பி. எல் பரிட்சைக்குப் போன போது கூட அவ்வளவு பயப்படவில்லை.

இப்பயமானது கொஞ்சம் கொஞ்சமாக என்னை விட்டகன்றது அன்றிரவு ஈசன் அருளால் விக்டோரியா பப்ளிக்ஹால் முழுதும் இடமில்லாது நிரம்பியிருந்தது. நான் பேசத் தொடங்கியது முதல் சந்தடியற்றிருந்ததென நான்கூற வேண்டும். நான் நேராகச் சபையோரைப் பார்ப்பதில்லை என்று எனது நண்பர்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். ஆயினும், நான் மேடையிலிருக்கும் பொழுது, என் வார்த்தைகளை எப்படி அவர்கள் கவனிக்கிறார்களென்று அறியும் சிறிது சக்தி எனக்குண்டென நினைக்கிறேன். முதல் காட்சியில், என் கடைசி வார்த்தைகளைப் பேசிவிட்டு நான் ரங்கத்தினின்று போக, திரை விடப்படவே, கரகோஷம் செய்தனர். ஆகவே நன்றாயிராமற் போகாது என்று என் மனதைத் தைரியம் செய்து கொண்டேன். எனது இரண்டாம் காட்சி, அமலாதித்யன் தன் தந்தையின் உருவத்தை சந்திக்கும் காட்சியாகும். அக்காட்சி மிகவும் அழகாய் ஜோடித்திருந்ததினாலோ அல்லது அமலாதித்யனுடைய தந்தையின் அருவமாக நடித்த எம். சுந்தரேச ஐயர் மிகவும் நன்றாய் நடித்ததினாலோ, அல்லது நான் நன்றாய் நடித்ததினாலோ, ஜனங்கள் அதை மிகவும் நன்றாயிருந்ததெனக் கொண்டாடினர் என்று அறிந்தேன். ஆயினும் எனது மூன்றாவது காட்சி அவ்வளவாக எனக்குத் திருப்திகரமாயில்லை. முதலில், அக்காட்சியில்

"பதங்கள், பதங்கள், பதங்கள்!" என்று ஒரு சந்தர்ப்பத்தில் நான் கூறவேண்டியிருக்கிறது. அதை ஒரு நூதனமானபடி நடிக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்து நடிக்க, சபையில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த சர். சுப்பிரமணிய ஐயரோ அல்லது வி. கிருஷ்ணசாமி ஐயரோ 'நன்றாயிருந்தது' எனக் குறிக்கும் பொருட்டு குட் குட் (Good Good) என்று சொன்னது என் செவியிற்பட, எனக்கிருந்த பயமெல்லாம் பெரும்பாலும் போனவனாகி, உற்சாகத்துடன் நடிக்க வாரம்பித்தேன். அது முதல், நாடகம் முடியும் வரையில், எனது முக்கியமான பாகங்கள் வரும்பொழுதெல்லாம் சபையோர் கரகோஷம் செய்தனர்.

இதை வாசிக்கும் எனது நண்பர்கள், இதை நான் ஏதோ தற்புகழ்ச்சியாகக் கூறுகிறேன் என்று எண்ணக்கூடாது. நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் உண்மையாக எழுதவேண்டும் என்று தீர்மானம் பண்ணியிருப்பதால் இதை இங்கு எழுதலானேன். அன்றியும் ஆக்டர்களுக்குத் தக்க புத்திமான்கள் ஏதாவது கொஞ்சம் உற்சாகப்படுத்தினால், அவர்களுக்கு அது அவர்களுடைய பயத்தைப் போக்கி எவ்வளவு நன்றாய் நடிக்கச் செய்யக்கூடுமென்பதைப் பலருக்கும் அறிவிக்கும் பொருட்டாம். இதைக் கருதியே, என்னுடன் மேடையில் புதிய ஆக்டர்கள் யாராவது, முதன் முதல் நடிக்கத் தொடங்கினால் அவர்கள் என்ன தப்பு செய்தபோதிலும், பெரிதல்ல, சுமாரா யிருக்கிறது, என்று சொல்லி அவர்களைத் தட்டிக் கொடுப்பது வழக்கம். இந்தச் சூட்சுமத்தை அறியாத எனது நண்பர்களில் சிலர் "சம்பந்தம் என்ன எல்லோரையும் புகழ்ந்து விடுகிறான்!" என்று தவறாக எண்ணியிருப்பார்கள். இதற்கு முக்கியகாரணம், ரங்க பீதி யடைந்திருக்கும் ஆக்டர்களுக்குச் சிறிது உற்சாகமானது, எவ்வளவு பயன்படுகிறது, என்று நான் சுயானுபவத்திற் கண்டதின் பலனை மற்றவர்கள் பெறும் பொருட்டே, என்பதை என் மீது குறை கூறுபவர்கள் அறிவார்களாக.

அதற்கப்புறம் நான் வருகிற காட்சி தான், இந்நாடகத்தில் ஆக்டர்களுக்கு "வியாச கட்டம்" போன்றது. இதில் தான், "இருப்பதோ இறப்பதோ" (To be or not to be) என்கிற மிகவும் கடினமான அமலாதித்யன் தனிமொழி (Soliloquy) வருகிறது;

அன்றியும் இதில் தான் அமலாதித்யன் அபலையைச்சந்திக்கிறான் இந்நாடகத்தில் முதன் முதல்; இதற்குக் கன்யாமாடக்காட்சி (Nunnery Scene) என்று இங்கிலீஷ்காரர் பெயரிட்டிருக்கின்றனர். இது நடிப்பது மிகவும் கடினம் என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது; இதைத் தெய்வானுகூலத்தினால் சபையோருக்கு மிகவும் திருப்திகரமாய் நடித்தேன் என எண்ணுகிறேன்; ஆயினும் இக்காட்சியில் நான் அபலையை விட்டுப் பிரியும் பொழுது சபையோர் செய்த பெரும் கரகோஷமானது, பாதி எனதாருயிர் நண்பர் சி. ரங்கவடிவேலு அபலையாக நன்றாய் நடித்ததற்காக என்று உறுதியாய் நம்புகிறேன். இக்காட்சியானவுடன், மறு காட்சி, "நாடகத்துள் நாடகம்" (Play within a play) என்பதானபடியால், அதற்காக, ரங்கத்தின் மத்தியில் சிறு ரங்கமொன்று ஏற்படுத்தும்பொருட்டு, ஐந்து நிமிஷம் இடைக்காலம் (Interval) கொடுக்கப்பட்டது. அந்த இடைக்காலத்தில் அதுவரையில் வெளியிலிருந்து நாடகம் என்னமாகப் போகின்றது என்று கவனித்துக் கொண்டிருந்த, எனது நண்பர்களுட் பலர் வேஷம் தரிக்கும் நேபத்யத்திற்கு (Green Room) வந்து, என்னைப் புகழ்ந்து கூறினர். மற்றவர்கள் கூறிய வார்த்தைகளைவிட, "உன்னால் இந்த ஹாம்லெட் வேஷம் சரியாக ஆக்டுசெய்ய முடியா" தென்று, கூறிய, எனது நண்பர் ஆ. வாமன்பாய், கூறியதுதான் எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தந்தது. அவர் என்னைப் புகழ்ந்துரைத்த வார்த்தைகளை நான் இங்குக் கூறவில்லை. கடைசியில் அவர் கூறியது மாத்திரம் எழுதுகிறேன்; அவர் ஆங்கிலத்தில் கூறிய வார்த்தைகளின் மொழி பெயர்ப்பு "சம்பந்தம்! என் தொப்பியைக் கழற்றி உன்னை வணங்குகிறேன்! நீ ஜெயித்தாய்! நான் தோற்றேன்! என்று ஒப்புக் கொள்ளுகிறேன்!" என்பதாம். இவ்வார்த்தைகள் அவர் என்னுடன் போட்ட பந்தயத்தைப் பொருத்தனவாம் என்பதை என் நண்பர்கள் கவனிப்பார்களாக.

எனது நண்பர் இவ்வாறு கூறிவிட்டு இனியும் இரண்டு மூன்று கட்டங்கள் இருக்கின்றன. ஜாக்கிரதையாயிரு" என்று புத்தி சொல்லிவிட்டு வெளியே போனார்.

இப்பொழுது தான் என் பயமெல்லாம் நீங்கி ,மிகவும் திருப்தி யடைந்தேன் என்று நான் கூறவேண்டும். எனது நண்பர்கள் என்னை இவ்வாறு புகழ்ந்ததினாலோ, அல்லது சபையோரெல்லாம், எனது முக்கியமான வார்த்தைகளுக்கெல்லாம் கரகோஷம் செய்ததினாலோ, நாம் இந் நாடகத்திற்காக எடுத்துக்கொண்ட சிரமம் கடவுள் கிருபையால் வியர்த்தமாகவில்லை என்று உந்தப்பட்டவனாய், பிறகு வந்த, நாடகத்துள் நாடகக் காட்சியிலும், அமலாதித்யன் தன் தாயாருடன் பேசுங் காட்சியிலும் எனது முழு உற்சாகத்துடன் நடித்தேன். முக்கியமாக இரண்டாம்முறை இந்நாடகத்தில் அமலாதித்யனுக்கு அருவம் தோன்றும் இந்த இரண்டாவது காட்சியில், நான் அருவம் மறையும்பொழுது ஆச்சரியமும் பயமும் குறிக்கும் மலர்ந்த என் கண்களால், அதைப் பின் தொடர்ந்தது சபையை மிகவும் களிக்கச் செய்தது. இதைச் சாதாரணமாக இங்கிலாந்திலுள்ள ஆக்டர்கள் செய்வதில்லை. முதல் முதல், அமெரிக்கா தேசத்து ஆக்டராகிய எட்வின் பூத் (Booth) என்பவர் தான் இதை ஆரம்பித்தவர்; இதை நான் ஒரு புஸ்தகத்தில் வாசித்து, இப்படித்தானிருக்க வேண்டுமென்று மனதில் தீர்மானித்து, நடித்தேன். இக்காட்சி முடிந்தவுடன், நாங்கள் இரண்டாம் இடைக்காலம் கொடுத்த பொழுது ஆர்தர் டேவிஸ் (Arthur Davies) என்பவர், நேபத்யத்தின் பின் வந்து, இதைப்பற்றி வியந்து பேசி, 'இதை எங்கிருந்து கற்றாய்?' என வினவ, நான் "அமெரிக்கா தேசத்து ஆக்டர் எட்வின்பூத் இவ்வாறு செய்ததாகப் படித்தேன், ஆகவே அவரிடமிருந்து நான் கற்றதாகக் கூறவேண்டு" மென்று விடை கொடுத்தேன்.

இவ்வாறு நான் எல்லோராலும் புகழப்பட்டது எனக்கு ஒரு கெடுதியைப் பயந்தது. நான் அளவிற்கு மிஞ்சிய சந்தோஷத்தை யடைந்தேன் என்று நினைக்கிறேன். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகுமல்லவா? இதை என் அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த என் நண்பர் வாமன்பாய், 'சம்பந்தம்! ஜாக்கிரதையாயிரு, வருகிற ஸ்மசானக்காட்சியில் நீ மிகவும் அமைதியுடையவனாயிருக்கவேண்டும்!' என்று எச்சரிக்கை செய்தார். அவர் இவ்வாறு எச்சரிக்கை செய்தும் பயன்படாமற் போயிற்று. மேற்

இப்பொழுது தான் என் பயமெல்லாம் நீங்கி ,மிகவும் திருப்தி யடைந்தேன் என்று நான் கூறவேண்டும். எனது நண்பர்கள் என்னை இவ்வாறு புகழ்ந்ததினாலோ, அல்லது சபையோரெல்லாம், எனது முக்கியமான வார்த்தைகளுக்கெல்லாம் கரகோஷம் செய்ததி னாலோ, நாம் இந் நாடகத்திற்காக எடுத்துக்கொண்ட சிரமம் கடவுள் கிருபையால் வியர்த்தமாகவில்லை என்று உந்தப்பட்டவனாய், பிறகு வந்த, நாடகத்துள் நாடகக் காட்சியிலும், அமலாதித்யன் தன் தாயாருடன் பேசுங் காட்சியிலும் எனது முழு உற்சாகத் துடன் நடித்தேன். முக்கியமாக இரண்டாம்முறை இந்நாடகத்தில் அமலாதித்யனுக்கு அருவம் தோன்றும் இந்த இரண்டாவது காட் சியில், நான் அருவம் மறையும்பொழுது ஆச்சரியமும் பயமும் குறிக்கும் மலர்ந்த என் கண்களால், அதைப் பின் தொடர்ந்தது சபையை மிகவும் களிக்கச் செய்தது. இதைச் சாதாரணமாக இங்கிலாந்திலுள்ள ஆக்டர்கள் செய்வதில்லை. முதல் முதல், அமெரிக்கா தேசத்து ஆக்டராகிய எட்வின் பூத் (Booth) என்பவர் தான் இதை ஆரம்பித்தவர் ; இதை நான் ஒரு புஸ்தகத்தில் வாசித்து, இப்படித்தானிருக்க வேண்டுமென்று மனதில் தீர்மா னித்து, நடித்தேன். இக்காட்சி முடிந்தவுடன், நாங்கள் இரண்டாம் இடைக்காலம் கொடுத்த பொழுது ஆர்தர் டேவிஸ் (Arthur Davies) என்பவர், நேபத்யத்தின் பின் வந்து, இதைப்பற்றி வியந்து பேசி, 'இதை எங்கிருந்து கற்றாய்?' என வினவ, நான் "அமெரிக்கா தேசத்து ஆக்டர் எட்வின்பூத் இவ்வாறு செய்ததாகப் படித்தேன், ஆகவே அவரிடமிருந்து நான் கற்றதாகக் கூறவேண்டு" மென்று விடை கொடுத்தேன்.

இவ்வாறு நான் எல்லோராலும் புகழப்பட்டது எனக்கு ஒரு கெடுதியைப் பயந்தது. நான் அளவிற்கு மிஞ்சிய சந்தோஷத்தை யடைந்தேன் என்று நினைக்கிறேன். அளவுக்கு மிஞ்சினால் அமுத மும் விஷமாகுமல்லவா ? இதை என் அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த என் நண்பர் வாமன்பாய், 'சம்பந்தம்! ஜாக்கிரதை யாயிரு, வருகிற ஸ்மசானக்காட்சியில் நீ மிகவும் அமைதியுடைய வனாயிருக்கவேண்டும்!' என்று எச்சரிக்கை செய்தார். அவர் இவ் வாறு எச்சரிக்கை செய்தும் பயன்படாமற் போயிற்று. மேற்

சொன்ன காரணத்தினால் அக்காட்சியில் சாந்தத்துடன் நடிக்காது அதைக் கெடுத்து வைத்தேன் என்று எண்ணுகிறேன்.

தவறிழைத்தால் அதற்குப் பிராயச்சித்தம் வேண்டாமா? ஆயினும் அக்காட்சி ஆனவுடன், நான் செய்த தப்பிதத்தை அறிந்தவனாய், என் புத்தியை ஸ்திரப்படுத்திக்கொண்டு மனதைத்திருப்பி, கடைசிக்காட்சியில் சரியாக நடித்தேன் என நம்புகிறேன். நான் இந்நாடகத்தில் நடித்ததைப் பற்றி இவ்வளவு விவரமாய் எழுதுவதற்குக் காரணம் எனது கற்றறிந்த நண்பர்கள் நான் நடித்த நாடகங்களுளெல்லாம் இது தான் மிகச் சிறந்தது என்று கூறுவதேயாம். ஒரு விதத்தில் எனக்கும் அப்படித்தான் கொஞ்சம் தோற்றுகிறது.

இனி மற்ற ஆக்டர்களைப்பற்றி எழுதுகிறேன். எம். சுந்தரேச ஐயர், இந்நாடகத்தில், இரண்டு வேஷங்கள் பூண்டனர், காலதேவனாகவும், அருவமாகவும்; அருவத்தின் பாகம் வேறொருவருக்குக் கொடுத்திருந்தது; ஒத்திகைகளில் அந்த ஆக்டர் நன்றாய் நடிக்காமையால், பிறகு சுந்தரேச ஐயருக்கு மாற்றப்பட்டது. இவர் இந்த இரண்டு வேஷங்களிலும் மிகவும் நன்றாய் நடித்தார். இது தான் எங்கள் சபையில் இவர் கடைசி முறை நடித்தது. சிலமாதங்கள் பொறுத்துத் தனது முப்பத்தைந்தாம் ஆண்டில் இவர் தேக வியோகமானார். இது எங்கள் சபைக்குப்பெரும் தௌர்ப்பாக்கியம் என்று சொல்ல வேண்டும். ஆங்கிலத்தில் இவர் "ஒதெல்லோ" முதலிய நாடக பாத்திரங்களை ஆடுவதில் மிகவும் கியாதிபெற்றிருந்தார். தமிழிலும் காலதேவன் முதலிய பாத்திரங்களில் நல்ல பெயர் பெற்றார். இவரது ஞாபகச் சின்னமாக இவரது படமொன்று எங்கள் சபையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அ. கிருஷ்ணசாமி அய்யர் கௌரீமணியாகச் சபையோர் மெச்சும்படி நடித்தார் என்பதற்கு ஐயமில்லை. இவர் சங்கீதத்தில் மிகுந்த வல்லமைசாலி யாயிருந்தும், இந்நாடகத்தில் இவர் பாடுவதற்கு, ஒரே பாட்டுதான் இருந்தது. இதற்குக் காரணம் முக்கியமாக ஷேக்ஸ்பியர் நாடகங்களில், சங்கீதத்தை நான் குறைக்கவேண்டுமென்று தீர்மானித்ததே; இருந்தும் அந்த ஒரு பாட்டை மிகவும் நன்றாய்ப் பாடிச் சபையோரின் கரகோஷத்தைப் பெற்றனர்.

முன்பே நான் குறித்தபடி எனதாருயிர் நண்பர், சி. ரங்கவடி வேலு, அபலை வேஷம் பூண்டனர். நான் கற்பித்தபடி ஒன்றையும் விடாது, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியாக நடித்து சபையோரின் நன்கு மதிப்பைப் பெற்றார். முக்கியமாக அபலை பைத்தியக்காரியாக வரும் காட்சியில், வெள்ளை வஸ்திரம் உடுத்தி, பைத்தியத்தில் பாடும் பாட்டுகளைப்பாடி, வந்திருந்தவர்கள் மனதைக் கவர்ந்தனர். இவர் இக்காட்சியில் நடித்ததைப் பார்த்து, ஸ்பிளென்டிட் (Splendid) மாக்னிபிசென்ட் (Magnificent) என்று கூறி, சர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கண்ணீர் தாரை தாரையாக விடுத்ததாக அவரருகிலிருந்தவர்கள் என்னிடம் கூறினர். அபலையின் சவத்தைச் சமாதியில் புதைக்கும் காட்சியில், வந்திருந்தமாது சிரோமணிகள் அநேகர் கண்ணீர்விட்டனர் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். எனதுயிர் நண்பர் நடித்த அநேக ஸ்திரீ பாத்திரங்களில் இந்த அபலையாக நடித்தது ஒரு மிகச் சிறந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. இவர் இந்த வேடத்தில் நடித்தபடி எழுதிய படமொன்று, இன்னும் சிந்தாதிரிப்பேட்டையில் இவரது வீட்டில் இருக்கிறது. என்னைப்போல் இவரும் இந் நாடகத்தில் எப்படி நடிக்கப் போகிறோமோ என்று பயந்து கொண்டிருந்தவர், கடைசியில் பயித்தியக்காரக் காட்சியில் மிகவும் நன்றாக நடித்ததாக எங்கள் சபையார் புகழ மிகவும் சந்தோஷப்பட்டார் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. இதை எழுதும்பொழுது, இவர் எனது துர் அதிர்ஷ்டத்தால் சிறுவயதில் மரித்த பொழுது நேர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைப்பற்றி இத்தனை வருஷம் சென்றும், அது எனக்கு அடங்காத் துக்கம் விளைப்பதாயினும், இங்கு எழுத வேண்டியவனா யிருக்கிறேன். இவர் இந் நாடகத்தில் அபலையாக நடித்த பொழுது எப்படி நாடகமேடையில் புஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்டுச் சமாதிக்குக் கொண்டு போனார்களோ, அதே மாதிரியாக, இவர் மரித்தபொழுதும் புஷ்பப் பல்லக்கில் அலங்காரம் செய்து ஸ்மசானத்திற்குக் கொண்டு போனோம்! இதைப்பற்றி அதே மாதிரியாக இருந்ததென எனது நண்பர் ராவ்பஹதூர் கிருஷ்ணராவ் பான்ஸ்லே, ஹிந்துப் பத்திரிகையில் எழுதினார். மேடையில் லீலாதரனாக நடித்து சவத்துடன் சென்றது போல், இவரது மைத்துனர், தாமோதர முதலி

யார், இச்சமயமும் உடன் சென்றனர். ஒரு வித்தியாசம் மாத்திரம் இருந்தது, நாடகமேடையில் அமலாதித்யனுக நடித்த நான் ஒருபுற மாய் நின்றுகொண்டு அபலையைப் பாடைமீது கொண்டு வரும் பொழுது, இதெல்லாம் நாடகந்தானே என்று மனதைத் தேற்றிக் கொண்டிருந்தேன் அச்சமயம்; இச்சமயம், நாடகமாய் நடித்தது வாஸ்தவமாய் முடிந்ததே என்று, இதை எழுதும் பொழுது நான் அழுவதுபோல், அழுதுக் கொண்டு அமலாதித்யனுக நடித்த சம்பந்தம் பாடையின் பக்கத்தில் சென்றுன்!.

தாமோதர முதலியார் லீலாதரனுக நடித்தார். இவருக்கு இந்த வேஷம் முதலில் நான் கொடுத்தபொழுது, இதைச் சரியாக நடிப்பாரோ என்னவோ என்று சந்தேகப் பட்டேன். ஆயினும் ஒத்திகைகளில் மிகவும் கஷ்டப்பட்டுக் கற்று நாடகதினத்தில் நான் எண்ணியதற்கு மேலாக நடித்தார். இவரும் நானும் இந்நாடகத்தில் நடித்ததைப்பற்றி ஒரு சமாசாரம் எனக்கு முக்கியமாக நினைவிற்கு வருகிறது. கடைசி காட்சியில் நாங்களிருவரும், ரேபியர் (Rapier) என்னும் கத்திகளைக் கையில் கொண்டு சண்டை போட வேண்டியிருக்கிறது. இதற்காக ஒத்திகைகளில் பன்முறை, அவர் இப்படி என்னைக்குத்த நான் இப்படித்தடுக்க வேண்டும், நான் அவரை இப்படிக்குத்த, அவர் இன்னபடித் தடுக்கவேண்டும், என்று கத்தி வரிசைகளையெல்லாம் பழகிவைத்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சிறு வயதில் பீபில்ஸ்பார்க் பேரில் (Fair) 1885-86-87ம் வருஷங்களில் பார்த்திருந்த பென்சிங் (Fencing) மிகவும் உபயோகப் பட்டது. பென்சிங் என்றல், தற்காலத்திய கோல்யுத்தம் அல்ல; கூர்மையான இரும்புக் கம்பிகள் போன்று மெல்லிய கத்திகளைக் கையிற் பிடித்து யுத்தம் செய்வதாம். என் முறட்டுத்தனத்தை யறிந்த முதலியார் அவர்கள், 'வாத்தியார்! நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள். உங்களை மறந்து எங்கேயாவது என்னைக் குத்திவிடப் போகிறீர்கள்!' என்று, அப்பொழுதைக்கப்போது எச்சரிக்கை செய்திருந்தார், இந்நாடகம் நடந்த இம்முறையோ அல்லது, ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்திற்காக இதை இரண்டு மாதம் பொறுத்து மறுபடியும் ஆடியபொழுதோ, இக்கடைசி காட்சியில், இவரை என் கையிலிருந்த ரேபியர் (Rapier) கத்தியால் பலமாய்க் குத்திவிட்

டேன். தெய்வாதீனத்தால் அந்தக்குத்து, அவர் அணிந்திருந்த பெல்ட் (Belt) இல் பட்டது; குத்திய வேகத்தினால் பெல்டில் பட்டபொழுது என் கத்தி, அப்படியே "ட" ஆனு மாதிரி வளைந்து விட்டது! அந்த பெல்ட் தடுத்திரா விட்டால், அவரது வயிற்றில் பிரவேசித்திருக்கு மென்பதற்குச் சந்தேகமில்லை; நாடகம் விபரீதமாய் முடிந்திருக்கும்! ஈசன் கருணையானது இவ் வாபத்தினின்றும் என்னைக் காத்தது.

சாராயம் குடிப்பவன், அது தவறு என்று நன்றாய் அறிந்திருந்தும், அந்த வெறி வரும்பொழுது, அதை யெல்லாம் மறந்து குடிப்பது போல், இது தவறு நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று எவ்வளவோ தீர்மானித்திருந்தும், மேடையின் மீது நடிக்கும் பொழுது இந்த தீர்மானங்கள் எல்லாம் எங்கேயோ பறந்தோடிப்போய், என்னை மறந்தவனாகிறேன். இதற்கு இன்னொரு உதாரணம், இதே அமலாதித்டன் நாடகத்தில் நேர்ந்திருக்கிறது. இந்நாடகம் இன்னொரு முறை நாங்கள் நடித்த பொழுது, டாக்டர் ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார் காலதேவனாக நடித்தார். நாடகத்தின் கடைசி காட்சியில் அமலாதித்யன் காலதேவன் சூதினால் தன் மரணம் கிட்டியதெனக் கண்டறிந்தவன், காலதேவன் தன்னைக்கொல்வதற்காகச் சித்தம் செய்துவைத்திருந்த விஷக்குப்பியை எடுத்து அதில், பகாராணி குடித்து மிகுதியாயிருந்த பானத்தை, காலதேவன் குடிக்கும்படிச் செய்கிறான்; இதை நான் நடிக்கும் பொழுது, டாக்டர் ஸ்ரீனிவாசராகவாசாரி உதடு கிழிந்து இரத்தம் பெருகும்படியாக அழுத்தி விட்டேன்! இன்றும் ஏதாவது பேச்சு வரும்பொழுது, என் நண்பராகிய டாக்டர் இதைப் பற்றி என்னை ஏளனம் செய்வார்.

எனது பழைய நண்பராகிய ச. ராஜகணபதி முதலியார் பாலநேசர் வேடம் பூண்டு அதற்கேற்றபடி நடித்தார். இவர் சாதாரணமாக ஹாஸ்யபாகங்கள் நடிப்பவர் இதை நன்றாய் நடித்தது விசேஷமே.

ஹரிஹரனாக நடித்தது ம. ஆநந்தவேலு முதலியார் என்பவர்; இவர் தான் அமலாதித்யனாக நடிக்கவேண்டுமென்று இச்சை

கொண்டார். இதை அறிந்த நான் முன்பு ஹரி ஹரனாக நடியுங்கள், சரியாக யிருந்தால், அப்புறம் பார்ப்போம் என்று சொல்லி இப்பாத்திரத்தைக்கொடுத்தேன். இவரால் அமலாதித்யன் பாகம் நடிக்க முடியாதென்பது என் எண்ணம். இவரிடம் இருந்த ஒரு குறை என்னவென்றால், இவரது முகமானது எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரேமாதிரியாயிருக்கும். ரசபாவங்கள் மாறும் பொழுது இவர் முகபாவம் மாருது! இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். அமலாதித்யன் தன் தந்தையின் அருவத்தைச் சந்திக்கும் பொழுது அவரது தோழனாகிய ஹரி ஹரனும் கூட இருக்கிறான். அருவம் தோன்றிய உடன் இருவரும் பீதி யடைந்த முகத்தையுடையவர்களாய்க் காட்டவேண்டும்; இதற்காக அக் காட்சியை ஒத்திகை செய்யும் பொழுது பன்முறை, இவ்வாறு பயந்தவராய்க் கண் விழித்துக் காட்டவேண்டும் என்று சொல்லிப் பார்த்தேன். அவர் முகமானது இந்த பாவத்தைக் காட்டச் சக்தியற்றதாயிருந்தது. நான் பன்முறை கேட்டும், "இதோ, பயந்தவன் போல் நடிக்கிறேனே" என்று சொல்லுவதே ஒழிய முகத்தில் ஒரு பயச் சின்னமுமிராது! கண்கள் விழித்துக்காட்டுவதை விட்டு, சற்றே சுருக்கிக்கொள்வார்! இப்படிப்பட்டவர் அமலாதித்யனாக நடிப்பதென்றால், நான் அதற்கிசைவதெப்படி? இதை இங்கு நான் எடுத்து எழுதியது, இவர் மீது குற்றம் கூறும்படியல்ல; ஆயினும் ஒவ்வொருவனும், ஏதாவது நாடக பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அதற்குத் தக்கபடி நடிக்க நமக்குச் சக்தியிருக்கிறதா என்று முதலில் யோசித்தே பிறகு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இதை வாசிக்கும் எனது நண்பர்கள் அறியும் பொருட்டே, இதை இங்கு எழுதலானேன். மற்றவர்கள் குறையினை எடுத்துக் கூறுவதென்றால், அவர்களும் மற்றவர்களும் இனி அம்மாதிரியான தவறிழைக்காவண்ணம் எடுத்துக் கூற வேண்டுமேயொழிய, வேறெக் காரணத்தினாலும் கூறக்கூடாதென்னும் நியமமுடையவனாயிருத்தல் நலமெனத் தோன்றுகிறது.

ராஜகாந்தன், கிரிதரன் பாத்திரங்கள் பி. கோபாலசாமி முதலியாரும் சி. பாலசுந்தர முதலியாரும் எடுத்துக்கொண்டனர்.

இந்நாடகத்தில் ஹாஸ்ய பாகம் அவ்வளவாக இல்லாமற் போனாலும் வே. வெங்கடாசல ஐயர், நாடகத்தில் நாடகம் அரசனாக வும், வடிவேலு நாயகர், நாடக அரசியாகவும் நடித்தது சபையோ ருக்குக் களிப்பைத் தந்தது. இக்காட்சியில் ஷேக்ஸ்பியர் மகா நாடகக்கவி, அவர் காலத்தில் வேஷதாரிகள் நாடகமேடையில், பேச்சிலும் நடிப்பதிலும் இழைத்த குற்றங்களை யெல்லாம் எடுத் துக் காட்டியுள்ளார்; அதற்கேற்ப, எனது இந்நாடகத் தமிழ் அமைப் பில், எனது காலத்திய, ஜீவனத்திற்காக நாடக மாடும் வேஷதாரி களுடைய குற்றம் குறைகளையெல்லாம் இவ்விரண்டு ஆக்டர்களைக் கொண்டு, எடுத்துக்காட்டியுள்ளேன். வே. வெங்கடாசல ஐயர், நாடக அரசனாய் நடித்தது மன்றி, இந்நாடகத்தின் கடைசி அங்கத் திய வெட்டியானாகவும், மிகவும் நன்றாய் நடித்தார்.

இந்நாடகம் ஒன்பது மணிக்கு ஆரம்பித்து சற்றேறக்குறைய 5 மணி நேரத்திற்கு மேல் பிடித்தது முற்றுப்பெற. இதற்குப் பிறகு இதை ஆடும்பொழுது மிகவும் நீடித்திருக்கிறது என்று சில பாகங்களாகக் குறைத்தேன்.

நாடகத்திற்கு அத்யட்சராக விஜயம் செய்த சர் சுப்பிரமணிய ஐயர் என்பவர் ஒன்பது மணிக்கெல்லாம் வந்தவர், தனக்கு வயதான படியாலும், நித்திரையின்றி அதிக காலம் இரவில் கழித்தால் தன் உடம்பிற்கு ஒத்துக்கொள்வதில்லை யென்றும் சொல்லி, எங்கள் சபை பிரசிடெண்டாகிய வி. கிருஷ்ணசாமி ஐயரிடம், " ஒரு அரை மணி நேரம் பார்த்து விட்டுப்போவேன்! என்னைப் மன்னிக்கவேண் டும்," என்று சொன்னாராம். அதற்குக் கிருஷ்ணசாமி ஐயர், உங் கள் இஷ்டப்படிச் செய்யலாமென்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னாராம். பிறகு நாடகம் ஆரம்பித்த பிறகு ஒரு மணிநேரம் ஆகியும் சர் சுப்பிரமணிய ஐயர் இடம் விட்டுப் பெயராது மேடை யின் மீதே கண்ணுயிருப்பதைக் கண்டவராய், கிருஷ்ணசாமி ஐயர் அவரைப் பார்த்து ஒருமுறைக்கு இரண்டு முறை, 'ஐயரவாள், சீக் கிரம் போக வேண்டுமென்று சொன்னாற்போலிருக்கிறது" என்று ஞாபகப்படுத்தினாராம்; அதற்கு சர் சுப்பிரமணிய ஐயர், "அதெல் லாம் உதவாது கிருஷ்ணசாமி ஐயர், கடைசி வரையில் பார்த்து

விட்டுதான் போகவேண்டும்!" என்று சொன்னாராம். இதையெல்லாம் அருகிலிருந்த ஒருவர் எனக்கு அன்றிரவே தெரிவித்தார்.

இவ்வாறு அரைமணி நேரத்துக்கு மேல் இருக்க முடியாதென்று தெரிவித்தவர் 5 மணிக்குமேல் இருந்தது மன்றி நாடகம் முடிந்தவுடன், தானாக, தன்னை யொருவரும் கேளாமலிருக்கும் பொழுதே, சபையோர் அறிய, கால் மணி சாவகாசத்திற்குமேல், நாடகத்தையும் நாடகத்தில் நடித்தவர்களையும் புழ்ந்து பேசினார். என்னைப்பற்றியும் கொஞ்சம் புகழ்ந்தார் என்பது என் ஞாபகம். முக்கியமாக, எங்கள் சபை இம் மஹானால் புகழப்பட்டதே என்று சந்தோஷப்பட்டேன். நான் அன்றிரவு வீட்டிற்குப்போய், "தெய்வத் தாலாகாதெனினும் முயற்சி மெய்வருந்தக்கூலிதரும்!" என்னும் திருக்குறளை நினைத்துக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் உறங்கினேன்.

மறுநாள் காலை, டாக்கர் தோட்டத்தில் (Taukers gardens) குளும்பெட்டு ஜமீன்தார் முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் சர் வி. சி. தேசிகாசாரியாருக்கு ஒரு விருந்தளித்தனர். அதற்கு நானும் வரவழைக்கப்பட்டுப் போக, அங்கு என்னைப் பார்த்தவர்கள் அநேகர் முன்னாள் நடந்த நாடகத்தைப் பற்றியும் எங்கள் சபையைப் பற்றியும் மிகவும் கொண்டாடிப் பேசினர். நான் ஆடியதையும் புகழ்ந்தனர் என்பது என் ஞாபகம். முக்கியமாக சர் வி. சி. தேசிகாசாரியார் கூறிய வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. 'என்ன சம்பந்த முதலியார்! நேற்றிராத்திரி, சுகுணவிலாச சபை நாடகம் மிகவும் நன்றாயிருந்ததாமே! காலை மணி அய்யர் அவர்களைப் பார்த்தேன். அவர் நேற்றிரவு தான் பார்த்த நாடகத்தைப்பற்றி அரை மணி சாவகாசம் பேசினார். உங்களை மிகவும் புகழ்ந்தார். "என்ன சார்! இர்விங் கிர்விங் (Sir Henry Irving) என்று சொல்லுகிறார்கள்; அவர் கூட இம்மாதிரியாக நடிப்பார்களோ என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது!" என்று ஆங்கிலத்தில் தன்னிடம் கூறியதாகத் தெரிவித்தார். இதை இங்கு எழுதுவதற்காக என் நண்பர்கள் என்னை மன்னிப்பார்களாக. ஆயினும் தற்புகழ்ச்சியாக இதை வெளியிட்டேன் என்று எண்ணுதிருப்பார்களாக. சர்

ஹென்றி இர்விங்குடன், ஒப்பிட்டுக் கூறும்படியான அவ்வளவு பெருமை எனக்கு இல்லை என்பதை உறுதியாய் நம்புகிறேன். இவ் விடம் இதை எழுதியதற்குக் காரணம், எங்கள் சுகுண விலாச சபை நடத்திய நாடகத்தை, சிறந்த கல்விமான்களும், புத்திமான் களும் கொண்டாடினார்கள் என்று கூறும்பொருட்டேயாம்.

சர் சுப்பிரமணிய ஐயர் இவ்வாறு புகழ்வதுடன் நில்லாது இன் னொரு காரியமும் செய்தார். அதைப்பற்றி அக்காலத்தில் மறுபடி யும் எங்கள் சபை பிரசுரம் செய்த "தமிழ் நாடகமேடை" (Indian Stage) என்னும் மாதாந்தர பத்திரிகையில் எனது பால்ய நண்பர், வி. வி ஸ்ரீனிவாச ஐயங்கார் "ஒரு பெரும் தயாளமான கொடை" என்கிற தலைப் பெயர் வைத்து, எழுதியுள்ளார். தான் பார்த்த அமலாதித்யன் நாடகத்தை மெச்சி, எங்கள் சபையை வாழ்த்தி, அதற்கு நன்கொடையாக ரூபாய் 250 க்கு செக்கை அனுப்பினார் மறுதினம்! அக்கடிதம் இன்னும் எங்கள் சபையோரால் போற்றப் பட்டுப் பாதுகாத்து வரப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் எனது இளைய நண்பர்களுக்கு எப்பொழுதாவது சாவகாசமிருந்தால், எங்கள் சபைக்கு வந்து காரியதரிசியிடமிருந்து உத்தரவு பெற்று, இக்கடிதத்தைக் கண்ணுறும்படி வேண்டுவேன். எங்கள் சபையைப் பற்றி இப்பெரியார் புகழ்ந்ததை அவர்கள் அறிய வேண்டுமென்று நான் இதைக் கேட்கவில்லை; அக் கடிதத்தின் கடைசியில் போஸ்ட் ஸ்கிரிப்ட் (Post script) டாக இப்பெரியார் எழுதியதை அவர்கள் கவனிக்கும் பொருட்டே நான் கேட்பது. கடிதத்தை யெல்லாம் எழுதி முடித்த பிறகு கடைசியில், "நான் இந்த ரூபாய் கொடுத் ததை, மற்றவர்கள் அறிய வேண்டியதில்லை!" என்று பொருட்பட ஆங்கிலத்தில் அவர் எழுதியுள்ளதை அவர்கள் கவனிக்கும் பொருட்டே. "வலது கை செய்யும் தானத்தை இடது கையறிய லாகாது!" என்னும் பழமொழியை உண்மை மொழியாக இப்பெரி யார்பால் அவர்கள் கண்டு களிக்கவேண்டுமென்பதே என் வேண்டு கோள்.

என் பால்ய நண்பரும், இந்நாடகத்தை நான் எழுதுவதில் எனக்கு நன் முன்புமாதிரி மிகவும் உதவி செய்தவருமான

வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார், மறுநாள் என்னைச் சந்தித்த பொழுது, "நீ இந் நாடகத்தில், நன்றாய் நடிப்பாய் என்பதைப்பற்றி நான் எப்பொழுதும் சந்தேகப்பட்டவனன்று; ஆயினும், இவ்வளவு நன்றாய் நடிப்பாயென்று, நான் நினைக்கவில்லை" என்றார். எனக்கு மார்க்கும் (Mark) அதிகமாய்க் கொடுத்தார் என்று நினைக்கிறேன். எவ்வளவு என்பது எனக்கு ஞாபகமில்லை.

இந்த "அமலாதித்ய நாடக" மானது, எஸ். பி. சி. ஏ. என்று சொல்லப்பட்ட, பிராணிகளுக்கு ஹிம்சையில்லாமல் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சபையாரின் உதவிக்காகக் கொடுக்கப்பட்டது. இதற்கு மொத்தவசூல் 685 ரூபாய் வந்தது அதில் எங்கள் செலவு போக மிருந்த தொகை, ரூபாய் 261-4-6 அந்தச் சபையாருக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த நாடகத்தைப் பலவிதத்தில் எங்கள் சபையின் ஒரு முக்கியமான நாடகமென எண்ண வேண்டியிருக்கிறது. இதனால் எங்கள் சபைக்குப் பெரும்புகழ் கிடைத்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இதற்கு முன்பு 15 வருடங்களாக நடத்திவந்த நாடகங்களைப் பார்க்கிலும் இதற்குத் தான் அதிகப் பணம் வசூலாயது. அன்றியும் நாளது வரையில் கணக்கிட்ட போதிலும், இந் நாடகத்தில்தான் எங்கள் சபைக்கு அதிகப் பணம் வசூலாயிருக்கிறது; கொழும்பில் நாங்கள் இந் நாடகம் ஆடியபொழுது ரூபாய் 1792 வசூலாச்சுது; இதற்கு அதிமாக இன்னும் எந்த நாடகத்திலும் எங்களுக்கு வசூலாக வில்லை. அன்றியும் இதுவரையில் எங்கள் சபை ஆடிய நாடகங்களிலெல்லாம், இதுதான் மிகச் சிறந்தது என்று என் பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் எழுதியிருக்கிறார். மேலும் எங்கள் சபையில் நூற்றுவது நாடகமாக இது 1908 வருஷம் ஆடப்பட்டது. கடைசியாக, இது வரையில் எங்கள் சபை ஆடிய நாடகங்களைப் பார்க்கிலும் இதில்தான் ரங்கத்தின் காட்சிகளை ஏற்படுத்துவதில், அதிக சிரமம் எடுத்துக்கொண்டோம். இதற்காக இவ் வருஷத்திய சபை அறிக்கை (Report) யில் எனதாருயிர் நண்பராகிய சி. ரங்கவடிவேலுவுக்கு, அவர் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக, சபையார் வந்தனம் அளித்தனர்.

இந்த அமலாதித்ய நாடகமானது இதுவரையில் எங்கள் சபையோரால் 12 முறைதான் ஆடப்பட்டிருக்கிறது. இதை ஆடுவது கஷ்டமான படியால் இதை அடிக்கடி ஆடுவதில்லை. அக்காரணம் பற்றியே இதர சபையார் இந்நாடகத்தை அதிகமாய் ஆடினதில்லை; மற்றவர்கள் இதை இதுவரையில் ஒன்பது தரம்தான் ஆடியிருக்கிறார்கள்.

இவ்வருஷம் ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்திற்காக இந்நாடகம் எங்களால் மறுபடியும் ஆடப்பட்டது. இம்முறை இந்நாடகம் ஆடினதைப்பற்றி ஒரு முக்கியமான விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. இதற்கு முன்பாக எனக்குக் கொஞ்சம் உடம்பு அசௌகர்யமாயிருந்ததினாலோ, அல்லது எக்காரணத்தினாலோ, என் மனம் இந்நாடகத்தின் மீதில்லை. நான் இதை இம்முறை நடித்தது எனக்கே திர்ப்தி கரமாயில்லை; வந்திருந்தவர்களில் அநேகர் நன்றாயிருந்ததெனக் கூறியபோதிலும், எனது கற்றறிந்த நண்பர்களிற் பலர், நான் முன்பு நடித்ததுபோலில்லை என்றே கூறினார்கள். முக்கியமாக எனது நண்பர்; அ. வாமன்பாய் என்பவர், நான் இம்முறை ஆடியது தனக்குத் திர்ப்திகரமாயில்லை என்று கூறி என்னைச் சந்தித்து, 'என்னகாரணம்?' என்று கேட்டார். அதற்கு நான், இதை ஆடியபோது என் தேகத்திலும் உற்சாகமில்லை, ஏதோ காரணத்தினால் என் மனதிலும் உற்சாகமில்லை, என்று ஒப்புக்கொண்டேன். அதன்மீதவர், "இம் மாதிரியான முக்கியமான பாத்திரங்களாடும் பொழுது, இதை ஆடுவதில் நாம் சரியாக ஆடுவோம் என்று உன் மனதில் திடமாய்த் தோன்றா விட்டால், ஆடாதே!" என்று புத்திமதி கூறினார். அவர் கூறியதை ஒப்புக்கொண்டு, அமலாதித்யன் முதலிய கஷ்டமான நாடகங்களில், என் மனதில் பூர்ண உவகையும் திடமும் இல்லாவிட்டால், ஆடாது தவிர்த்து வந்திருக்கிறேன். இதை வாசிக்கும் என் இளைய நண்பர்களும், கடினமான நாடகங்களில் ஆடவேண்டி வந்தால், தங்கள் முழு மனதுடனும், உற்சாகத்துடனும் ஆட, ஏதாவது தடையேற் பட்டால் அவற்றை ஆடாதிருப்பார்களாக. அச்சமயத்தில் இதற்கு நிதர்சனம் இம்முறை ஆடிய இந்நாடகத்தி லிருந்தே எடுத்துக் கூறக் கூடும். அமலாதித்யன் தன் தந்தையின் அருவத்தை முதன்முறை

சந்திக்கும் காட்சியில், முதன்முறை ஆடியபொழுது, அந்த பயத்தை மனதில் வகித்தவனாய் உடம் பெல்லாம் வியர்த்தது; இம்முறை, மேற்சொன்னபடி, அந்தக்கஷ்டம் எடுத்துக்கொள்ள அசக்தனாகி, இதைச் சபையோர் கவனிக்கப்போகிறார்களா என்று எண்ணினவனாய், முகத்தைச்சற்றே திருப்பிக்கொண்டு, நான் பேசவேண்டிய வார்த்தைகளைப் பேசினேன். பலன்? உடனே ஹாலிலிருந்து இந் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த கற்றறிந்த எனது நண்பர்கள் இதைக் கண்டுபிடித்து விட்டனர்; முன்புபோலில்லை! ஏதோ குறையிருக்கிறது, என்று அவர்கள் மனதில் பட்டுவிட்டது. இவ்விதமாக அநேக விஷயங்களில், நமது குறை மற்றவர்களுக்குத் தெரியாது என்று எண்ணி, நமது மனதை நாமே மோசம்செய்து கொள்ளுகிறோம்.

இவ்வருஷம் (1906) எங்கள் சபை நீலகிரிக்குப்போய், உதகமண்டலத்தில், 3 நாடகங்கள் ஆடியது. 1897 பெங்களூருக்குப் போய், நஷ்டமடைந்துவந்தபிறகு, இந்த ஒன்பது வருடங்களாக, வெளியே போகிற எண்ணத்தை விட்டோம். இனி வெளியிற் போவதில்லை என்று தீர்மானித்தோம் என்றே சொல்லவேண்டும். அத்தீர்மானத்தினின்றும் இவ்வருஷம் மாறியதற்கு ஒரு காரணமுண்டு. எங்கள் சபையில் தெலுங்கு ஆக்டராகச் சேர்ந்த பி. ராமமூர்த்தி பந்துலு நீலகிரிக்கு, ஓவர்சியராக, மாற்றப்பட்டார்; மற்ற இரண்டு ஆக்டர்களாகிய அ. கிருஷ்ணசாமி ஐயரும், சி. பாலசுந்தர முதலியாரும் கவர்ன்மெண்டு செக்ரடேரியட் (Secretariat) ஆபீசில் இருந்தபடியால், கோடை காலத்தில், அந்த ஆபீசுடன், நீலகிரிக்குப்போக நேர்ந்தது; உதகமண்டலத்தில் ஒரு சிறு நாடகசாலையுமிருந்தது; இந்த ஹேதுக்களெல்லாம் இவ்வருஷம் ஒருங்கு சேரவே, அவ்விடமிருந்து எங்கள் சபை அங்கத்தினராகிய மேற்சொன்ன மூவர்களும், சபையானது, அவ்விடம் வந்து நாடகமாடினால் நன்றாயிருக்கும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நாங்கள் செய்கிறோம், நஷ்டம் வராமற்படி பார்த்துக் கொள்ளுகிறோம், என்று எழுதினார்கள். எங்கள் சபை ஆக்டர்களுக்கும் (நான் உட்பட) நீலகிரிக்குப்போக வேண்டும் என்னும் ஆசை பிறந்தது. எங்கள் சபையின் நிர்வாக சபையாரும் ஒப்புக் கொண்டனர். அதன்

பேரில் உதகமண்டலம் போய், மூன்று நாடகங்கள் கொடுக்கவேண்டுமென்றும், அங்கு போகிறவர்களெல்லாம் ஆக்டர்கள் உட்பட, ரெயில் சார்ஜ் தாங்களே போட்டுக் கொள்ளவேண்டும் என்றும் தீர்மானித்தோம்; ரெயில்வேக் காரர்கள், முன்பிரண்டு முறைபோலவே எங்கள் சபைக்கு, இரண்டாவது வகுப்பில், பாதி சார்ஜில் போய் வரலாமென்று அனுமதி கொடுத்தனர். அதன்பேரில் சென்னையிலிருந்து மே மாதம் 24-ந் தேதி புறப்பட்டுப் போய், அவ்விடம், இரண்டு தமிழ்நாடகங்களும் ஒரு தெலுங்கு நாடகமும் கொடுத்து ஜூன்மாதம் இரண்டாம் தேதி வரை அவ்விடமிருந்து 3-ம்தேதி புறப்பட்டு பட்டணம் வந்து சேர்ந்தோம். இப்படிப்போய் வந்தவர்கள் ஆக்டர்களல்லாதார் உட்பட, 31 பெயர். இதைப்பற்றி எனக்கு ஞாபகம் இருக்கும் சில முக்கிய விஷயங்களை இனி எழுதுகிறேன்.

இதைப்பற்றி நான் இப்பொழுது எழுதும்பொழுது அநேக வருஷங்களுக்குமுன் முன்னால் நான் குறிப்பிட்டிருக்கும் எங்கள் சபை நடத்திவந்த "இந்தியா நாடகமேடை" (Indian stage) என்னும் பத்திரிகையில் நான் ஆங்கிலத்தில் எழுதிய விவரங்கள் எனக்கு மிகவும் உபயோகப்படுகின்றன. அவ்வியாசங்களை நான் பாதுகாத்து வைத்தது எனக்குப் பெரும் உதவியாயிற்று.

இம்முறை நாங்கள் வெளியூருக்குப் போகத் தீர்மானித்ததற்குக் கொஞ்சம் ஆட்சேபனை இருந்தது. முக்கியமாக எங்கள் சபையின் அங்கத்தினர் ஒருவர் ஆட்சேபனை செய்தார் என்பது என் ஞாபகம்; அவர் ஆட்சேபனை செய்தது எனக்குச் சந்தோஷத்தைத் தந்தது இரண்டு முக்கிய காரணங்களினால்; முதலாவது நான் சபையின் சார்பாக ஆரம்பிக்கும் அதன் விஷயங்களிலெல்லாம், ஆட்சேபனை யாதேனும் இருந்தால்தான் சரியாக ஈடேறும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன். இரண்டாவதாக முக்கியமாக இந்த அங்கத்தினர் ஆட்சேபித்தால்தான், எதுவும் மிகவும் நன்றாய் முடியும் என்பது என் அனுபவம். அவர் மீது குற்றங்கூறவில்லை நான். அவர் வந்த ராசி அது!

நாங்கள் சென்னையை விட்டு உதகமண்டலம் போகும்பொழுது, எங்களில் பெரும்பாலர் மலை ரெயிலில் அது வரையில் போயறியாத வர்களாயிருந்தபடியால், அந்தப் பிரயாணம், எங்களுக்கு மிகவும் களிப்பைத் தந்தது. உதகமண்டலம் அல்லது 'ஒத்தியில்' (Ooty) எங்கள் சபை நண்பர்கள் எங்களுக்காகத் தக்க ஏற்பாடுகளெல்லாம் செய்திருந்தனர். ஆயினும் முதலிலேயே எங்களுக்கு ஒரு பெருங் கஷ்டம் நேரிட்டது. போன மறுநாள், "விரும்பிய விதமே." என் னும் நாடகம் வைத்துக்கொண்டோம். அன்று சாயங்காலம் 7½-மணி வரையில் எங்கள் உடுப்புகள் வந்து சேரவில்லை! நாடக உடுப்புகள் இல்லாமல் எப்படி நாங்கள் நாடகமாடுவது? நந்தனை ரைப்போன்ற நாடகமாயிருந்தால் ஆடிவிடலாம்; ஷேக்ஸ்பியர் நாடகத்தைத் தக்க உடைகளில்லாமல் எப்படி நடிப்பது? நாடக சாலையில் எல்லா ஏற்பாடுகளும் செய்தாயது. முன்னாலே நாங்கள் அனுப்பிய திரைகளும் கட்டியாயது. உடைகள் மாத்திரம் இல்லை! இந்தக் கஷ்டத்தில் இன்னது செய்வதென்றறியாது திகைத்து நிற் கையில், தெய்வாதீனத்தால், மேட்டுப்பாளையத்திலிருந்த கட்டை வண்டிகளில் அனுப்பிய எங்கள் உடுப்புப் பெட்டிகள் 7½ மணிக்கு வந்து சேர்ந்தன! அதன்மீது, துரிதப்பட்டு, இந்நாடகத்துக்கு வேண்டிய அத்தனை ஆக்டர்களும் ஒரு மணி சாவகாசத்திற்குள்ளா கச் சித்தமானோம்! சாதாரணமாக எங்களுக்கு இதற்கு நான்கு மணி சாவகாசம் வேண்டும். விளம்பரங்களில் குறித்தபடி சரியாக ஒன்பது மணிக்கு நாடகத்தை ஆரம்பித்து விட்டோம். நாங்கள் ஆடிய நாடகக் கொட்டகைக்கு ஆர்மரிஹால் (Armoury Hall) என்று பெயர். அது அவ்வளவாகப் பெரிய இடம் அல்ல. அன்று நாடகம் பார்க்கவந்த ஜனத்தொகை, அதிகமாயும் இல்லை; கொஞ்ச மாகவும் இல்லை; இது எங்கள் சபையின் குற்றமல்ல. எனது நண் பர் ராமமூர்த்தி பந்துலு, விளம்பரங்கள் மூலமாக 'ஒத்தி' வாசி களுக்கு எவ்வளவு தெரியப்படுத்தக்கூடுமோ அவ்வளவு தெரியப் படுத்தினர். ஆயினும் அவ்விடம் தமிழ் அறிந்தவர்கள் அவ்வளவு அதிகமில்லாதபடியால், நாடகம் பார்க்கவந்த ஜனத்தொகை அதிக மாயில்லை. இச்சந்தர்ப்பத்தில் எனது நண்பர் ராமமூர்த்தி பந்துலு செய்த ஒரு யுக்தியை இங்கு எனது நண்பர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

'ஒத்தி' (Ooty) என்பது ஒரு சிறிய ஊர். அதில் அக்காலம் வாரத்துக்கு ஒரு முறைதான் 'சந்தை' கூடுவதுண்டு. அங்கிருப்பவர்கள், வாரத்திற்குத் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளை மொத்தமாக வாங்கி வைத்துக்கொள்வார்கள். எனது நண்பர், எங்கள் சபை அங்கு போயிறங்கின தினத்தில் காலையில், அச்சந்தைக்குப் போய் அதிகாலையிலேயே, அங்கு கடைகளிலிருந்த வாழை இலைகளையெல்லாம், எங்களுக்கு ஒரு வாரத்திற்கு ஆகும்படி வாங்கிவிட்டார்! பிறகு அச்சந்தையில் வாழை இலை வாங்க வந்தவர்களுக்கெல்லாம் ஒருவருக்காவது, ஒரு வாழையிலையாவது கிடைக்காமற் போச்சுது! வாழை இலைக்காகக் கேட்பவர்களுக்கெல்லாம், கடைக்காரர்கள் பட்டணத்திலிருந்து ஏதோ ஒரு சபை வந்திருக்கிறதாம், அதற்காக, சந்தையிலுள்ள வாழை இலைகளையெல்லாம் வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள், என்று பதில் உரைத்தனர். அச்சமயம் ஒத்தியில் தங்கள் பரிவாரங்களுடன் வந்திருந்த இரண்டொரு மஹாராஜாக்கள் வீட்டிற்குக்கூட, வாழை இலை இல்லாமற் போயிற்று! இந்த யுக்தியின் மூலமாக, எல்லோரும், யாரடா இந்த சபை? என்று கேட்க நேரிட்டு, எங்கள் சபை ஒத்திக்குவந்த சமாசாரம் நன்றாய் பரவியது!

நாங்கள் ஆடிய முதல் நாடகத்தைப்பற்றி இங்கெழுதத்தக்க விசேஷம் ஒன்றும் அவ்வளவாக எனக்கு ஞாபகமில்லை. வழக்கம் போல் இந்நாடகத்தில் அ. கிருஷ்ணசாமி ஐயரும், சி. ரங்கவடிவேலுவும், நல்லபெயர் எடுத்தனர் என்பது தவிர வேறொன்றும் என் நினைவுக்கு வரவில்லை. இந்நாடகம் ஆடி முடிந்தும், நாங்கள் அதுவரையில் தங்கியிருந்த ஒரு நண்பருடைய பங்களா, எங்களுக்குச் சௌகர்யக் குறைவாயிருந்தபடியால், விஜயநகரம் மகாராஜாவின் பெரிய பங்களா அச்சமயம் காலியாயிருந்தபடியால் அதை ஐந்து நாளைக்கு 200 ரூபாய்க்கு, வாடகை பேசிக்கொண்டு, அங்கு போய்ச் சேர்ந்தோம்.

நாங்கள் இங்காடிய இரண்டாவது நாடகம் தெலுங்கில் "வரூதினி". என்பதாம் இந்நாடகத்தை எழுதியவர் எனது நண்பர் ராமமூர்த்தி பந்துலு. இதில் முக்கியமான கதாநாயகனுக் அவர் மிகு

வும் நன்றாய் நடிப்பார். இந்நாடகமானது, சில வருஷங்களாக சென்னையில் அடிக்கடி போடுவதுண்டு. எங்கள் சபையார், இதைப் பற்றி, சற்று விகடமாய்ப்பேசும் போது எனது நண்பர் ராம கிருஷ்ண ஐயர், "வருஷா வருஷம் சிராத்தம் வருவதுபோல் இது வந்து கொண்டிருக்கிறதே!" என்று வேடிக்கையாய்ச் சொல்வார். இந்த நாடகத்தை எப்படியாவது இவ்விடம் நடத்த வேண்டு மென்று இச்சைகொண்டவராய் இவர் ஒத்தியில் தெலுங்கு தெரிந் தவர்கள் அநேகம் பெயர் இருக்கின்றனர், தெலுங்கு நாடகமும் போடலாம், என்று வற்புறுத்தினர். எனக்கு மாத்திரம் சந்தேக மாயிருந்தபோதிலும் இவ்வளவு தூரம் சொல்லுகிறாரே பார்ப்போம் என்று ஆட்சேபிக்காது விட்டேன். இந்நாடகம் இங்கு ஆடிய பொழுது நாடகம் நன்றாயிருந்தது; ஜனங்கள் தானில்லை! முன்னால் கொடுத்த தமிழ் நாடகத்திற்கு வந்ததில் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லை! என்ன செய்வது? கொண்டபின் குலம் பேசி என்ன பிர யோஜனம்? ராம மூர்த்தி பந்துலுவின் மீதும் நான் குறைகூறுவதற் கில்லை. நானும் அந்தக்கிரந்தகர்த்தாவாயிருந்தால் அப்படியே செய்திருப்பேனோ என்னவோ? ஆங்கிலத்திலே "The wish is father to the thought" என்று ஒரு பழமொழியுண்டு அதைத் தமிழில், "விருப்பமானது, எண்ணத்திற்குத் தந்தையாயிருந்தது" என்று ஒருவாறு கூறலாம். பந்துலு அவர்களின் செய்கையும் அவ் வாறு இருந்தது போலும்!

இந்தத் தெலுங்கு நாடகத்தினால் எங்கள் சபாவுக்கு நேரிட்ட நஷ்டத்தை யெல்லாம், இவ்விடத்தில் நாங்கள் கொடுத்த கடைசி தமிழ் நாடகமாகிய "சாரங்கதரன்" சரிப்படுத்திவிட்டது. சாரங் கதரன் நாடகமாடிய தினம் சாயங்காலம் மழை பெய்ய ஆரம்பித்து ஏறக்குறைய இருட்டும் வரையில் பெரும் மழை பெய்தது. ஒத்தி யில் மழை பெய்வதை அனுபவித்தவர்கள் அன்றிரவு எப்படி இருந்திருக்கவேண்டுமென்று அறிவார்கள். மழை ஆரம்பித்தால் தாரை தாரையாகக் கொட்டும். விஜயநகரம் மகாராஜாவின் பங்களா விலிருந்து நாடகசாலைக்கு வர ஏறக்குறைய இரண்டு மைல் நாங் கள் நடந்துவர வேண்டியிருந்தது; வரும் வழியில் ஆக்டர்களாகிய நாங்கள் முழங்காலளவு ஜலத்தில் நடந்து வரவேண்டி வந்தது சில

இடங்களில். முந்திய நாடகமே நஷ்டத்தில் முடிந்ததே, இதுவும் நஷ்டத்தில் முடிந்தால் என்ன செய்வது, என்று மனதில் துயரத்துடனே நாடக சாலைக்குப் போய்ச் சேர்ந்தோம். ஸ்வாமி இருக்கிறுரென்று என் மனதை நான் தைரியம் செய்துகொண்டு, வேஷம் பூண ஆரம்பித்தேன்.

கருணைக் கடவுளின் கிருபையால் 8 மணிக்கெல்லாம் மழை நின்றுவிட்டது. மழை நின்றதும், வெளியில் வந்து பார்த்தால், எங்கும் ஓர் வித மூடுபனி சூழ்ந்திருந்தது. இதென்ன இப்படியிருக்கிறதே என்று நான் பயந்த பொழுது, எனது நண்பர் சி. பாலசுந்தர முதலியார் "நீங்கள் பயப்படாதீர்கள் வாத்தியார், இனி மழைவராது, அன்றியும் ஒத்திவாசிகளெல்லாம், இம்மாதிரியான மூடு பனிக்கு அஞ்சமாட்டார்கள்! இப்பனியில் நடப்பது தான் இங்குள்ளவர்களுக்கு ஒரு விநோதமாகும்!" என்று தைரியம் சொன்னுர். அவர் சொன்னதற்கேற்ப, மழை நின்ற ஒரு மணி அவகாசத்திற்கெல்லாம், நாடகசாலை ஜனங்களால் நிரம்பிவிட்டது! அந்த நாடகசாலை எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு டிக்கட்டுகள் விற்றுப் பிறகு வருபவர்களுக்கு இடம் இல்லாமல், நிறுத்தி விட்டோம். இச்சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு சிறு விஷயம் ஞாபகம் வருகிறது. நாடகம் ஆரம்பிக்க அரைமணி நேரம் இருக்கும் பொழுது, டிக்கட்டுகள் விற்கும் இடத்தில், எனது நண்பர் சபையின் பொக்கிஷதாரராகிய வி. ரங்கசாமி ஐயங்கார், யாருடனே உரத்த சப்தமாய்ச் சச்சரவிட்டுக்கொண்டிருந்தார். அவர் ரகசியம் பேசினுலே பக்கத்து வீட்டிற்குக் கேட்கும்! சண்டை போட ஆரம்பித்தால்! வேஷம் போட்டுக்கொண்டிருந்த நான் பாதிவேஷத்துடன் அவ்வறைக்குப் போய்க்கேட்க, நடந்த செய்தியைத் தெரிவித்தார்; அவருடன் வாதாடிக் கொண்டிருந்த மனிதன், அரைமணி நேரத்துக்கு முன் ஒரு எட்டு அணு டிக்கட்டு கேட்டானும்; 'எட்டணு வகுப்பில் இடமில்லை! இனி எட்டணு டிக்கட்டு விற்க முடியாது!' என்று சொல்லி அனுப்பிவிட்டாராம். அந்த மனிதன் ஒரு மைல் தூரம் திரும்பிப்போய்த் தனக்குத்தெரிந்தவர்களிடமிருந்து, இன்னெரு எட்டணு வாங்கிக்கொண்டு வந்து ஒரு ரூபாய் டிக்கட்டு கேட்டானும்; இதற்குள்ளாக ஒரு ரூபாய் வகுப்பும் நிரம்பி விட்

டது "ஆகவே, நான் என்ன செய்வது? ஒரு ரூபாய் டிக்கட்டு இல்லை. இனி இரண்டு ரூபாய் டிக்கட்டு தான் இருக்கிறது என்று நான் சொன்னால், இவன் என்னோடு சண்டை போடுகிறான்! இவன் ஒரு மைல் தூரம் நடந்து போய் வந்து ஒரு ரூபாய் கொண்டு வந்தால் எனக்கென்ன? நான் என்ன செய்யக்கூடும்? 'நீங்கள் தானே ஒரு ரூபாய் கொண்டு வந்தால் டிக்கட்டு தருகிறேன் என்று சொன்னீர்கள்?' என்று என்னுடன் சண்டை பிடிக்கிறான் நான் என்ன செய்வது இப்பொழுது?" என்று என்னிடம் தன் மெல்லிய குரலுடன் தெரிவித்தார். "ஐயோ பாவம்! அம்மனிதன் (அவன் யாரோ எனக்குத் தெரியாது) இந்நாடகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒரு மைல் தூரம் நடந்து போய் வந்திருக்கிறானே! ஒரு ரூபாய் கொண்டு வர!" என்று எண்ணினவனாய், 'அந்த மிகுதி ரூபாயை நான் கொடுக்கிறேன்! என் கணக்கில் போட்டுக்கொள்!' என்று சொல்லி, அம்மனிதனுக்கு இரண்டு ரூபாய் டிக்கட்டைக் கொடுக்கச் செய்தேன். இதை நான் எழுதியது, எங்கள் பொக்கிஷதார், எவ்வளவு கண்டிப்பானவர் என்று மற்றவர்கள் அறியும் பொருட்டும், அன்றியும் என்றும் சுயநலத்தையே நாடும் என் ஜன்மத்தில்கூடக் கோடை காலத்தில் எப்போதாவது மழை நீர் துளிப்பதுபோல், இம்மாதிரியான அற்ப விஷயங்களிலாவது கொஞ்சம் மற்றவர்களுக்கு நம்மாலியன்ற அளவு உதவி செய்யவேண்டும் என்னும் குணம் சிறிது இருக்கிறதுபோல எனக்குத் தோன்றுகிறதென என் இளைய நண்பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டே! இதை வாசிக்கும் எனது இளைய நண்பர்கள், இம்மாதிரியான சந்தர்ப்பங்கள், தங்களுக்கு நேருமானால், மற்றவர்களுக்கு உதவிசெய்து, அதனால் பெரும் மனோசந்துஷ்டியை அடைவார்களாக!

இந்நாடகத்தில் முதற்காட்சியில் மதுரகவி மரத்தின்கிளையினின்றும் கீழே விழுந்தது முதல், கடைசி வரைக்கும் ஒவ்வொரு முக்கியமான சந்தர்ப்பமும் வந்திருந்த சபையோரால், கிரஹிக்கப்பட்டு அவர்களுக்குச் சந்தோஷத்தைத்தந்தது. நான் எழுதியுள்ள ஒவ்வொரு நாடகத்திலும், இன்னின்ன இடத்தில் ஜனங்கள் கரகோஷம் செய்வார்கள், இன்னின்ன இடத்தில் நகைப்பார்கள், இன்

னின்ன இடத்தில் துக்கப்படுவார்கள், இன்னின்ன இடத்தில் நிசப்தமாய்க் கவனிப்பார்கள் என்று அனுபவத்தினால் எனக்கு ஒரு கணக்குண்டு. இதன்பிரகாரம் யோசிக்குமிடத்து இந்நாடகம் ஜனங்களை மிகவும் திருப்தி செய்ததென்றே நான் கூறவேண்டும் மேற்சொன்ன சந்தர்ப்பங்களில் சபையோர், நான் எண்ணியபடி செய்யாவிட்டால், ஆக்டர்கள் சரியாக நடிக்காமலாவதிருக்க வேண்டும், அல்லது நாடகம் பார்க்க வந்திருப்பவர்கள் அவ்வளவாக நாடகரசிகர்களாக இல்லாமலிருக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். இம்முறை எனது நண்பர்கள் அ. கிருஷ்ணசாமி ஐயர் ரத்னாங்கியாகவும், சி. ரங்கவடிவேலு சித்ராங்கியாகவும் சென்னையில் நடித்ததை விட அதிக விமரிசையாக நடித்தனர் என்றே கூறவேண்டும். எந்தச் சபையிலும், அதை அறிந்து அனுபவிக்கத்தக்க ரசிகர்கள் எதிரில் இருக்கிறார்கள் என்று பட்டால், அந்தக்கலைஞனுக்கு உற்சாகம் உண்டாகி, தன் முழு சாமர்த்தியத்தையும், தன்னையுமறியாதபடிச் சிலசமயங்களில் காட்டுகிறான்; எதிரிலிருப்பவர்கள் மண்டுக்களாகி, மௌனமாயிருந்தால், எப்படிப்பட்டவனுக்கும் உற்சாகம் சிறிது குறைந்து தான் தீரும். இவ்வாறு வெகு விமரிசையாய் நடத்தப்பட்ட இன்றிரவு நாடகத்தில், ஒரு சந்தர்ப்பம் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. இதை அன்றிரவே எனது நண்பர் ரங்கசாமி ஐயங்கார் என்னிடம் வந்து தெரிவித்தார். அன்று பந்தோபஸ்துக்காக வந்திருந்த போலீஸ்காரன் ஒருவன், அவர் உத்தரவு பெற்று ஒருபுறமாக வந்து, சுவரின் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தவன், சாரங்கதரன் தன் அன்னையைவிட்டுப் பிரிந்து கொலைக்களம் கொண்டு போகப்படும் காட்சியில், கிருஷ்ணசாமி ஐயரும் நானும், மேடையின் மீது நடித்துக்கொண்டிருந்த பொழுது, தண்ணீர் தாரை தாரையாக விட்டழ ஆரம்பித்தானாம். எனது நண்பர், ரங்கசாமி ஐயங்கார், அவன் மீது பரிதாபங் கொண்டவராய் அவனைத் தேற்றுமாறு, "ஏனடா அப்பா அழுகிறாய்? இதெல்லாம் நாடகந்தானே!" என்று கூற, அந்தக்கான்ஸ்டபில் "இருங்க சார்! இருங்க சார்! என்னை அலட்டாதீர்கள்! என்ன நன்றாயிருக்கிறது!" என்று பதில் உரைத்து, காட்சியின் கடைசி வரையில் அழுது கொண்டேயிருந்தானாம்! காட்சியைகண்டு கண்ணீர் விட்டழும் சுகத்தினின்றும் அவன் கலைக்கப்பட இஷ்டப்படவில்லை!

ஒத்தியில் (Ooty) நாங்கள் ஆடிய நாடகத்தைப்பற்றி இன்ஞெரு விஷயம் எழுத விரும்புகிறேன். இங்கு ஒவ்வொரு இரவும் சுமார் 5 மணிநேரம் நாடகமாடியும் கொஞ்சமாவது எங்களுக்கு வியர்க்க வில்லை; சிரமம் என்பதே தோன்ற வில்லை; ஆரம்பத்தில் எவ்வளவு உற்சாகத்துடன் இருந்தோமோ அவ்வளவு உற்சாகத்துடன் இருந்தோம் நாடக முடிவில் "கல்லார்க்கும் கற்றவர்க்கும்," பாடும்பொழுதும். இதற்கு முக்கிய காரணம் இவ்விடம் உஷ்ணம் என்பது சிறிது மின்றி, குளிர்ச்சியாயிருந்ததே என்பதற்குச் சந்தேகமில்லை. இக்காரணம் தான் போலும், இங்கிலாந்து முதலிய தேசங்களில், ஆக்டர்கள் வருஷம் முழுவதும், ஒரு நாள் கூட விடாது இரவில் நாடகமாடுவதற்கு இடங்கொடுப்பது. அவர்கள், நமது தேசத்துக்கு வந்து, திருநெல்வேலி போன்ற ஜில்லாவில், மே ஜூன் மாதத்தில் இரண்டு இராத்திரி ஒன்ருய் நடித்தால் நாம் இங்கு படும் கஷ்டம் அவர்களுக்குத் தெரியும்.

கடைசி தினம் சாரங்கதர நாடகம் ஆடினவுடன் நாடகசாலையில் வெந்நீர் கிடைக்காமல், ஆக்டர்களெல்லாம் அங்கிருந்து நாங்கள் தங்கியிருந்த பங்களாவிற்கு எங்கள் வேஷத்துடன், ஒவ்வொருவரும் ஒரு போர்வையைப் போர்த்துக்கொண்டு, நிலவு வெளிச்சத்தில் வேடிக்கையாய்ச் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு நடந்து சென்ஞேம். இவ்வாறு அன்று நாங்கள் சந்தோஷமுள்ள மனமுடையவர்களாயிருந்ததற்கு முக்கிய காரணம், சபைக்கு நஷ்டமில்லாதபடி, தெலுங்கு நாடகத்திஞலுண்டான நஷ்டத்தையும் நீக்கிச் செலவுக்கும் வரவுக்கும் சரியாகப் போகும்படி அன்று நல்ல தொகை வசூலானதுதான் என்பதற்குச் சந்தேகமில்லை.

மறுநாள் காலை எங்கள் சபைக்குப் பிரசிடெண்டாயிருந்த வி. கிருஷ்ணசாமி ஐயர், நாங்களிருந்த பங்களாவிற்கு வந்தார். இவர் இச்சமயம் ஒத்தியில் இருந்தும், முதல் இரண்டு நாடகங்களுக்கு ஏதோ அசந்தர்ப்பத்தால் வரமுடியாமற் போயிற்று. கடைசி நாடகத்திற்கு வந்திருந்தார். தான் முன்ஞளிரவு பார்த்த நாடகத்தைப்பற்றிச் சிலாகித்துக்கூறவேண்டிய இடங்களில் சிலாகித்துக் கூறி, குறையாயிருந்த இடங்களிற் குறைகளை எடுத்துக் கூறிஞர்.

இவரது சுபாவும் குறைகளை மறைக்காது, எதற்கும் அஞ்சாது எடுத்துக்கூறும் சுபாவம் என்பதை இவரைத் தெரிந்த அனைவரும் அறிவார்கள். குறையாகக் கூறிய ஒரு விஷயம் எனக்கு ஞாபகமிருக்கிறது. சாரங்கதர நாடகத்தில் நான் எழுதியபடி, சித்ராங்கியானவள், சாரங்கதரன் தன் அறைக்கு வரப்போகிறான் என்று அறிந்தவுடன், அங்கிருந்த கண்ணாடியின் எதிராகப்போய் நின்று, தன் அலங்காரம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு, "நான் அழகாயிருக்கிறேனா?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ளுகிறாள். "இவ்வாறு ஒரு ஸ்திரீயும் தன்னைத்தானே கேட்டுக்கொள்ள மாட்டாள், இது தவறு!" என்று வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் வாதித்தார். நான் இதற்கு எத்தனையோ எனக்குத் தோன்றிய நியாயங்கள் எடுத்துக் கூறியும், தான் சொன்னது தான் சரி யென்று பிடிவாதமாகச் சொன்னார். அதன் மீது சர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்னும் கிரந்த கர்த்தா கெனில்வொர்த் (Kenilworth) என்னும் நவீனத்தில் (Novel) கதாநாயகி, இவ்வாறு சொன்னதாக எழுதியிருக்கிறார் என்று எடுத்துக் கூறினேன். அதன் பேரில் கொஞ்சம் யோசித்துவிட்டு, "நீ சொல்வது சரிதான்!" என்று ஒப்புக்கொண்டார்.

இதை நான் இங்கு எழுதியதன் காரணம், அவருடன் வாதாடி வென்றேன் என்னும் கர்வத்தினாலன்று. சிறந்த புத்திமானாயிருந்தும், உன்னத பதவியை வஹித்தவராயிருந்தும், தான் கூறியது தவறு என்று பட்டவுடன், அதை ஒப்புக்கொள்ளும்படியான சிறந்த குணம் இவரிடமிருந்தது என்பதை எனது இளைய நண்பர்கள் அறியும் பொருட்டே இதை இங்கு எடுத்தெழுதலுற்றேன். அதுவரையில் நாம் கூறியதை எப்படியாவது ஸ்தாபிக்க வேண்டும் என்னும் பிடிவாத குண முடையவனாயிருந்த நான், இதன் பிறகு, இப் பெரியாருடைய இச் சிறந்த குணத்தைக் கடைப்பிடித்து நடக்கத் தீர்மானித்து, அது முதல் இது வரையில், அதன்படி நடக்க முயன்று வருகிறேன் என்பதை என்னுடன் நெருக்கமாய் பழகிய நண்பர்கள் அறிவார்களென நினைக்கிறேன். இதனால் நான் மிகவும் பயனடைந்தேன். ஆகவே இந்த வாசிக்கும் என் இளைய நண்பர்

களும் இதைக் கைப்பற்றி நடப்பார்களாக என்று கருதி இதை எழுதலானேன்.

எல்லாம் பேசி முடித்தான பிறகு, அவர் எங்களிடம் விடை பெற்றுத் தான் இருந்த வீட்டிற்குப் போகப் புறப்பட்ட பொழுது, பங்களாவின் கேட் (Gate) வரையில் அவரை வழி விட்டு வர அவருடன் நான் போனபொழுது, தெலுங்கு நாடகத்தினால் சபைக்கு அதிக நஷ்டம் உண்டானதென்பதைக் கேட்டறிந்த அவர், மொத்தத்தில் எப்படி யிருக்குமென என்னைக் கேட்க, "எல்லாம் சரியாகி விடும்; நேற்று வந்த தொகையானது அந்த நஷ்டதை யெல்லாம் அடைத்துவிடும்—ஒரு முப்பது நாற்பது ரூபாய் தான் குறையும் போலிருக்கிறது. அது ஒரு பெரிதல்ல." என்று பதில் உரைத்தேன். அவர் ஒன்றும்பேசாது புறப்பட்டுப் போய்விட்டார். அவர் போன ஒரு மணி நேரத்திற்கெல்லாம் அவரிடமிருந்து எங்கள் சபைக் காரியதரிசிக்கு ஒரு நிருபம் வந்தது. அதில் ஒரு 50 ரூபாய்க்கு ஒரு செக்கை வைத்து "சபைக்கு நேரிட்ட நஷ்டத்தை அடைக்க" என்று ஆங்கிலத்தில் ஒரு துணுக்கு எழுதியிருந்தது. "தினைத்துணை நன்றி செய்யினும், பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்" என்ற திருக்குறளின்படி, அந்நன்றியை நாங்கள் அனைவரும் மிகவும் பாராட்டினோம். அவர் அனுப்பிய ரூபாய் 50, அவருக்கு ஒரு பெரிதல்ல; எங்கள் சபைக்கும் அது ஒன்றும் அதிகமில்லை; அவர் அதை உதவிய விதமும், அதன் பின் இருந்த ஹிருதயமும் எங்களைப் பூரிக்கச் செய்தது.

அவரைப்பற்றி இன்னொரு விஷயம் இங்கு எழுதவேண்டியவனாயிருக்கிறேன். இதை வாசிக்கும் எனது நண்பர்கள், அவரை ஏதோ முகஸ்துதி செய்கிறேன் என்று எண்ணாதிருக்கும்படி வேண்டுகிறேன். அனேகம் வருடங்களுக்கு முன் இறந்தவரை இப்பொழுது முகஸ்துதி செய்து நான் அடையப்போகிற பலன் என்ன? ஆயினும் அப்பெரியாருடைய அரிய பெரிய குணங்களுக்கு ஈடுபட்ட மனத்தினாய் அவருக்கு நான் செலுத்த வேண்டிய கடமையைக் கொஞ்சம் கழிக்க முயலுகிறேன்.

காலையில் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது தான் இருக்குமிடத்தில் எங்களையெல்லாம் சாயங்காலம் டீ (Tea) சாப்பிட அழைத்தார். நாங்கள் அப்படி அழைத்ததற்காக அவருக்கு வந்தனம் செய்து, 'நாங்கள் வருவதற்கில்லை; எங்களையெல்லாம் இன்று சாயங்காலம் செக்ரடேரியட் ஆபீசில் இருக்கும் எங்கள் சிநேகிதர்கள் டீ (Tea) சாப்பிடச் சாயங்காலம் அழைத்திருக்கிறார்கள்; அங்கு போவதாக ஒப்புக்கொண்டோம்.' என்று பதில் உரைக்க, "நமது சபையை யெல்லாம் அவர்கள் வரும்படிக் கேட்டிருந்தால், நீ எனக்கேன் தெரிவிக்கவில்லை? அப்படித் தெரிவிக்காதது தவறு! நான் சபையின் பிரெசிடென்ட், என்பதை மறந்தீர்கள்போலும்!" என்று சிரித்துக்கொண்டே, எங்கள் மீது கோபித்து மொழிந்து, அன்று சாயங்காலம் பார்ட்டி (party) க்குத் தானும் வருவதாகத் தெரிவித்து, "நீங்கள் எல்லாம் அங்கு வருமுன் நான் அங்குபோய்ச் சேரப்போகிறேன். அப்பொழுதுதான் உங்களுக்கெல்லாம் புத்தி வரும்!" என்று சொல்லி, அப்படியே அங்கு வந்து சேர்ந்தார். வந்ததுமன்றி, எல்லோருடனும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, எங்களுக்கு விருந்தளித்த செக்ரடேரியேட் நண்பர்களுக்கு எங்கள் சபையின் சார்பாக வந்தனம் அளித்தார். நான் எப்பொழுதாவது, என் இளைய நண்பர்களுடன் இம்மாதிரிக் கலக்கவேண்டி வந்தால், நாம் மூத்தவன், அவர்களைவிட அந்தஸ்துடையவன், அவர்களுடன் சரிசமானமாகக் கலப்பதா என்னும் துர் எண்ணம் எனக்குத் தோன்றினால், இப்பெரியார் நடத்தை என்னும் பெருந்தடி கொண்டு, அதன் மண்டையில் அது தலையெடுக்கவொட்டாமல் போடுவது வழக்கம்; பெரியோருடன் நாம் பழகுவதினால், நாம் பெறும் முக்கியமான நலம் இத்தகைய புத்திமதிகளை அவர்கள் சொல்லாமற் சொல்வதே யாம்.

அன்று சாயங்காலம், ஒத்தியில், எங்கள் நண்பர்கள் எங்களுக்கு, அவர்களுடைய டெனிஸ் கோர்ட்டில் (Tennis court) கதிரவன் குடதிசையில் மூழ்குமுன் தன் ஒள்ளிய கிரணங்களால், மலைப்பிரதேசமெங்கும் அழகுறச் செய்யும், சாயங்காலத்தில், கொடுத்த சிற்றுண்டி உபசாரணையும், நாங்கள் இரண்டுமணி நேரம் வேடிக்கையாய்ப்பேசிக்காலங்கழித்ததும், முடிவில் வி. கிருஷ்ணசாமி

ஐயர், எங்கள் சபையின் சார்பாகப் பேசிய வார்த்தைகளும், என் மனதில் இன்னும் குடிகொண்டிருக்கின்றன. இந்த வி. கிருஷ்ண சாமி ஐயர் அவர்கள் 'கடினசித்த முடையவர்' என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். அக்கடினமான வார்த்தைகளுக்குப்பின் இருந்த வெண்ணெயைப் போல் இளகிய சுத்தமான ஹிருதயத்தை அவர்கள் அறியவில்லை போலும்!

எங்கள் சபை ஒத்திக்குப் போயிருந்த கதையை முடிக்கு முன், அன்றிரவு நடந்த ஒரு சிறு கதையைக் கூறுகிறேன். அன்றிரவு நாங்கள் எல்லாம் போஜனங் கொள்வதற்கு வெகு நாழிகையாய் விட்டது. நாங்கள் உடனே புறப்பட்டு மாட்டு வண்டிகளில் ஏறி (அக்காலத்தில் மோட்டார் வண்டிகள் அதிகமாய்க்கிடையாது) மேட்டுப் பாளையம் வரையில் வந்து ரெயில் ஏற வேண்டியவர்களா யிருந்தோம். அதற்காக 16 வண்டிகளோ அதிகமோ, உத்தரவு செய்திருந்தோம், எங்களையும் எங்கள் சாமான்களையும் கொண்டு போக. நாழிகையாய் விட்டது சீக்கிரம் புறப்பட வேண்டுமென்று, வண்டிகளைக் கட்டச்சொன்னால், அத்தனை வண்டிக்காரர்களும், (எந்த மதுவிலக்குச் சங்கத்திலும் அங்கத்தினராய்ச் சேராதவர்களா னபடியினால்) நன்றாய்க் குடித்து விட்டு, படுக்கையை விட்டெழுந் திருக்கவில்லை. நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம்! அதட்டிப் பார்த்தோம்! ஒன்றும் பயன்படவில்லை! இதென்ன கஷ்ட காலம், என்று நாங்கள் எல்லோரும் திகைத்து நிற்கையில், எங்கள் பிரயாண ஏற்பாடுகளை யெல்லாம் பார்த்து வந்த எனது நண்பர் பி. எஸ். தமோதர முதலியார், ஒரு யுக்தி செய்தார்; அவர் சாதாரணமாக ஆங்கில உடையே அப்பொழுது அணிவது வழக்கம்; அதன் பேரில், ஒரு வெள்ளைக்காரர்கள் அணியும் தொப்பியை மாட்டிக்கொண்டு, கையில் ஒரு சவுக்கை (Riding whip) எடுத்துக் கொண்டு, அந்த வண்டிக்காரர்கள் உறங்கிக்கொண்டிருக்கு மிடம் போய், வெள்ளைக்காரர்கள் பேசுவது போல் தன் குரலை மாற்றி "ஏ! கள்தைங்கோ! என்ந்தி கீரைங்களா இல்லியா?" என்று கூவித்தன் சவுக்கினால் இரண்டு மூன்று பெயர் முதுகில் வைத்தார் நன்றாக! உடனே அடிபட்டவர்களெல்லாம் தங்கள் முதுகையும், கண்ணையும் துடைத்துக்கொண்டு, விரைவில் எழுந்து,

'அரேரேரே! தொர்ரே ஓச்சிஞர்ரா! (துரை வந்து விட்டாரடா!) என்று கூவிக்கொண்டு மற்றவர்களையும் எழுப்பி ஐந்து நிமிஷத்திற்குள், மாடுகளை யெல்லாம் வண்டிகளில் பூட்டி நிறுத்தி விட்டார்கள்! அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்பதினுண்மையும், வெள்ளைக்காரத் தொப்பிக்கு இவ்வளவு மகிமை இருக்கிற தென்பதையும் அன்று கண்டேன்!

இன்னொரு சிறுகதை! மறுநாட் காலை எங்கள் 16 வண்டிகளும் வரிசையாக மேட்டுப்பாளையம் வரும்பொழுது அங்கிருந்த நாட்டுப்புறத்தார், 'இது யாரடா இத்தனை வண்டிகளில் வருகிறது!' என்று வியந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன், "இது யாரடா இத்தனை வண்டிகளில் வருவது?" என்று கேட்டான். அதன்மீது, எனது நண்பர் சி. ரங்கவடிவேலுடன் ஒரு வண்டியில் உறங்கிக்கொண்டிருந்த நான், இக்கேள்விக்கு என்னபதில் கிடைக்கிறது கேட்போம் என்று, தலையை நிமிர்த்திக் கேட்டேன். அக்கேள்விக்கு மற்ெருருவன், "யாரோ, மகாராஜாவின் அரண்மனையைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும்!" என்று பதில் உரைத்தான் உடனே என் மனமெனும் தர்மாமி (Thermometer) டர் மூன்று டிக்கிரி (degree) மேலே போச்சுது! உடனே பக்கத்திலிருந்த இன்னொருவன், "இல்லையடா! இவர்கள் யாரோ கூத்தாடிகள்!" என்று சொன்னான். உடனே என் தர்மாமிடர், பத்து டிக்ரி, திடீரென்று இறங்கி விட்டது!

இந்த 1906ம் வருஷத்தில்தான் எங்கள் சபையார் சாயங்காலத்தில் நாடகமாடுவதை ஆரம்பித்தனர். இதற்கு முன்பெல்லாம், இரவில் 9 மணிக்கு ஆரம்பித்து, மறு நாட்காலை சுமார் இரண்டு மணி வரையில் ஆடுவது வழக்கமாயிருந்தது. இராத்திரி ஆடுவதினால் ஆக்டர்களுக்கும் கஷ்டம்; நாடகம் பார்க்கவரும் ஜனங்களுக்கும் கஷ்டமாயிருந்தது. ஆக்டர்கள் 9-மணிக்கு நாடகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், 5 மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டு வேஷம்பூண ஆரம்பித்து, 9-மணிக்குமேல் 4 அல்லது 5-மணி சாவகாசம் மேடையின்மீது ஆடிவிட்டு, பிறகு வேஷத்தைக் களைய ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்ள வேண்டிவந்தது. அன்றியும் 3

மணிக்குமேல் வீட்டிற்குப்போனால் சரியாகத் தூக்கம் வருவதில்லை. இப்படி விழிப்பதினால், மறுநாள் எல்லாம் உடம்பு மிகவும் ஓய்ச்சலாயிருக்கும்; நாடகம் பார்க்க வருபவர்களுக்கு இவ்வளவு கஷ்டமில்லாவிட்டாலும், அவர்களும் இரவில் நித்திரை நீக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்; இரண்டு மணி வரையில் நாடகம் பார்த்துவிட்டு வீட்டிற்குப்போனால் அவர்களுக்கும் உடனே தூக்கம் வருவது கடினம். இத்தகைய கஷ்டங்களையெல்லாம் கருதி இதற்கு ஏதாவது யுக்தி செய்யவேண்டுமென்று ஸ்ரீனிவாச ஐயங்காரும் நானும் பலமுறை யோசித்ததுண்டு. இரவு இரண்டு மூன்று மணி வரையில் நடக்கும் நாடகங்களைக் குறுக்கி ஒரு மணிக்கெல்லாம் முடிக்கும்படிப் பிரயத்னம் செய்து பார்த்தோம்; அதிலும் பயன்படவில்லை; சாயங்காலங்களில், இங்கிலாந்து முதலிய தேசங்களில் மேடினீ (Matinee) என்று நாடகங்கள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டிருந்தோம்; ஆயினும் அதன்படி இந்தியாவில் வைத்துக்கொண்டால், ஜனங்கள் வருவார்களோ என்பது பெரும் சந்தேகமாயிருந்தது. இப்படியிருக்கும் தருவாயில், பாரசீகக் கம்பெனியார் ஞாயிற்றுக்கிழமைகளில் சாயங்காலத்தில் சில நாடகங்கள் ஆடினார்கள். அதற்குச் சாதாரணமாக ஜனங்கள் வரத் தலைப்பட்டதைக் கண்டோம். அவர்களுக்குச் சாயங்காலங்களில் வரும் ஜனங்கள், நமக்கு ஏன் வரக்கூடாது என்று தைரியமடைந்தவர்களாய், இவ்வருஷம் ஒரு நாடகம் சாயங்காலத்தில் ஆடிப்பார்ப்போம் என்று யோசித்தோம். இதை நாங்கள் எங்கள் நிர்வாக சபையில் முதலில் பிரேரேபணை செய்த பொழுது, அவர்களில் பெரும்பாலோர் ஆட்சேபித்தனர். மெல்ல அவர்களுடன் பேசி, ஒரு முறை முயன்று பார்ப்போம் சரிவராவிட்டால் விட்டு விடுவோம் என்று சொல்லி, இவ்வருஷம் அக்டோபர் மாதம் 21 ஆம் தேதி எனது "காதலர் கண்கள்" என்னும் நாடகத்தை, 6 மணி முதல் 9 மணி வரையில் ஆடுவதாகப் பிரசுரம் செய்து அப்படியே நடத்தினோம். இப்புது வழக்கம் நாடகாபிமானிகளுக்கு முதலில் ஏதோ ஒரு மாதிரியாகத தோன்றியபோதிலும், வந்தவர்களெல்லாம் இதனாலுண்டான சவுகரியத்தைக் கண்டு; இதுவே நல்ல மாதிரி என்று ஒப்புக்கொண்டனர். முன்பு ஆட்சேபித்த ஆக்டர்களும், இதனால் தங்களுக்குண்டான சிரமக்குறைவை அனுபவித்தவர்களாய், இப்புதிய வழக்கத்திற்கு

இணங்கினர். இம்மாதிரி நாங்கள் இரண்டு மூன்று நாடகங்களை சாயங்காலத்தில் நடத்தின பிறகு இராக்காலத்தில் வரும் ஜனங்களை விட சாயங்கால நாடகங்களுக்கு ஜனங்கள் அதிகமாய் வர ஆரம்பித்தனர்! இதற்கு முக்கிய காரணம், எங்கள் சபையின் நாடகங்களுக்கு வருபவர்கள் கற்றறிந்த உத்யோகஸ்தர்கள் முதலியோரே, பகலெல்லாம் வேலை செய்து விட்டு, இராத்திரி ஒன்பது பத்து மணிக்கு மேல் தெருக்கூத்துப் பார்க்கப் போய் அக்கூத்தை விடிய விடியக் காணும் பாமர ஜனங்களல்ல. ஆகவே, உத்தியோகஸ்தர்கள் முதலியோர், சாயங்கால ஆட்டத்தை ஒன்பது மணி வரையில் பார்த்துவிட்டு, வீட்டிற்குப் போய் 10 மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு, உறங்குவதினாலுண்டான சவுகர்யத்தை அறிந்தவர்கள், பிறகு இராத்திரி நாடகங்களென்றால் வெறுக்க ஆரம்பித்தனர். இதன் பிறகு சீக்கிரத்தில் நாங்கள் இரவு நாடகமென்பதையே அடியுடன் விட்டு, இத்தனை வருஷ காலமாக, சாயங்காலத்தில் தான் ஆடி வருகிறோம். இதர்காக முக்கோடி ஏகாதசி அல்லது சிவராத்திரியில் நாடகம் வைத்துக் கொண்டால் மாத்திரம், இராத்திரியில் இப்பொழுது நாடக மாடுகிறோம். சென்னையிலுள்ள கற்றறிந்த நாடகாபிமானிகளுக்கு இவ்வழக்கத்தை நாங்கள் சகஜப்படுத்திய போதிலும், வெளியூர்களில் நாங்கள் போய் ஆடும்பொழுது, இந்த ஜபம் அங்கு சாயவில்லை! அங்கெல்லாம், "சாயங்காலத்தில் நாடகமாடுவதாவது! நாடகம் என்றால் இராத்திரியில்தான் ஆடவேண்டும்!" என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். அவர்களும் மெல்ல மெல்ல, நாளாவர்த்தத்தில் இவ்வழியைக் கடைபிடிப்பார்களென்று நம்புகிறேன்.

இவ்வருஷம் நான் "சபாபதி" என்னும் ஒரு சிறு நாடகத்தை எழுதினேன். இதை நான் எழுத நேர்ந்த விதம் என் நண்பர்களுக்குக் கொஞ்சம் நகைப்பை யுண்டாக்கு மாதலால், அதை இங்கெழுதுகிறேன். எனது பால்ய நண்பருக்கு, "சபாபதி" என்று ஒரு கோச்மான் இருந்தான். அவனை அவர் கூப்பிடும் போதெல்லாம், "சபாபதி" என்று அந்த ப என்னும் அட்சரத்தை அதிகமாய் தொனித்துக் கூப்பிடுவார். "சபாபதி" என்று, அவரை ஏளனம் செய்யும் பொருட்டு, நானும் அவரைப்போல் 'சப்பாபதி'

என்று கூப்பிடுவேன். நான் இவ்வாறு அழைக்கும் போதெல்லாம், அவர் வீட்டிலிருப்பவர்களெல்லாம், குழந்தைகள் வேலைக்காரர்கள் உட்பட, நகைப்பார்கள் ; எனது நண்பரும் சிரிப்பார். ஆகட்டும், இப்பெயர் வைத்து ஒரு நாடகம் எழுதுகிறேன் பார், என்று சொல்லி, சபாபதி என்ற ஒரு வேலைக்காரனுடைய நாடகத்தை எழுதத் தலைப்பட்டேன். அன்றியும் எனது நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரிடம் நரசிம்மன், என்ற ஒரு ஐயங்கார் பிள்ளை வேலையாளாக இருந்தான். அவன் வாஸ்தவத்தில் கொஞ்சம் புத்திசாலியாக இருந்த போதிலும், மேற்பார்வைக்கு மட்டியைப் போல் தோற்றுவான். (இவன் இன்னும் உயிருடன் இருக்கிறானென நம்புகிறேன். அவனைப் பற்றி இவ்வாறு நான் எழுதுவதற்காக அவன் மன்னிப்பைக் கேட்டுக் கொள்ளுகிறேன்) நானும் எனது நண்பரும் சீவரம் முதலிய ஊர்களுக்குப் போகும் போதெல்லாம் இவனை அவர் அழைத்துக்கொண்டு வருவார். இவனது செய்கைகள் எங்களுக்குப் பன்முறை நகைப்பை விளைத்திருக்கிறது. இவனது செய்கைகள்தான், நான் எழுதிய சபாபதி நாடகத்தில், வேலைக்கார சபாபதியின் பாத்திரத்திற்கு அஸ்திபாரமாயது. அன்றியும் செர்வான்டிஸ் (Cervantes) என்னும் ஸ்பெயின் தேசத்து ஆசிரியர் எழுதிய டான் குவிக் சோட் (Don Quixote) என்னும் கதையில், கதாநாயகனுக்கு சான்கோ பான்சா (Sancho Panza) என்னும் விகடனான ஒரு வேஷக்காரனைப் பற்றி இதை வாசிக்கும் எனது நண்பர்களில் பலர் படித்திருக்கலாம்.

இது போலவே ஒரு ஆங்கில நவீனத்தில் ஹான்டி ஆண்டி என்னும் மூடவேலையாளைப் பற்றியும் எனது நண்பர்கள் படித்திருக்கலாம். இவைகளை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து, 'சபாபதி' வேலையாளை சிருஷ்டித்தேன். மெனும், நகைப்பு உண்டாக்கத்தக்க, வேலைக்காரர்கள் செய்யும் தப்பிதங்களை யெல்லாம் கவனித்து, இந்த 'சபாபதி'யின் தலையில் சுமத்தினேன். இவ்வாறே படிப்பில்லாத வாலிபர்கள் செய்யும் குற்றங்களையும் குறும்புகளையும் சேர்த்து, சபாபதி முதலியாரை உண்டாக்கினேன். சில முதலியார் பிள்ளைகள் சரியாகப் படிக்காதபடி, தங்கள் வீட்டில் தாய் தந்தையர்களை ஏமாற்றும் விதத்தையும் கவனித்து, இதையெல்லாம் சேர்த்து, 'சபாபதி' என்

னும் ஒரு சிறு பிரஹஸனமாக (Farce) எழுதினேன். இதைப்பற்றி நான் இவ்வளவு விவரமாக எழுதுவதற்கு முக்கிய காரணம் என்ன வென்றால், இந்தப் பிரஹஸனத்தை வரவேற்று எனது நண்பர்களில் அநேகர், 'இந்த சபாபதியை எங்கே பிடித்தாய்?' என்று என்னைப் பன்முறை கேட்டிருக்கின்றனர். அன்றியும் இச்சிறு நாடகத்தைப் பார்த்துச் சிரித்தவர்களெல்லாம், யாராவது வேலைக்காரன் தவறிழைத்தால் இவன் என்ன சபாபதியோ என்றும், இங்கிலீஷ் பேசுவதில் யாராவது தவறாகப்பேசினால், இவர் என்ன சபாபதி முதலியாரோ என்றும் கேட்பது சகஜமாய்விட்டது. தமிழ்நாட்டில், கற்றறிந்த இல்லங்களில் சபாபதியை அறியாதார் இல்லையென்று நான் ஒருவாறு கூறலாம். இது தான் நான் முதன் முதல் எழுதிய பிரஹஸனம். இது எல்லோருக்கும் மிடா நகைப்பைத்தந்து, களிக்கச் செய்ததையால், சபாபதி இரண்டாம் பாகமென்றும், சபாபதி மூன்றாம் பாகமென் றும் பிறகு எழுதினேன். தற்காலம் நான்காம் பாகமென்றும் அச்சிட்டிருக்கிறேன். இந்த சபாபதி, ஒரு சிறு பிரஹஸனமாயிருந்த போதிலும், 120 முறைக்கு மேல், என் அனுமதியின் மீது ஆடப்பட்டிருக்கிறது. என் அனுமதியின்றியும் சில முறை ஆடப்பட்டிருக்க வேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்த சபாபதி நாடகத்தில் வேலைக்கார சபாபதியின் பாகத்தை எனது பழய நண்பர் தாமோதர முதலியார் தான் இந்திய நாடக மேடையை விட்டு நீங்குமளவும், மிகவும் விமரிசையாக ஆடிவந்தார். இந்தப் பாகத்தை ஆடுவதில் முக்கியமான கஷ்டம் என்ன வென்றால், முகத்தில் கொஞ்சமாவது புத்தியிருப்பதாகப் பிறர் அறியக் கூடாததேயாம்; கொஞ்சமாவது புத்தியுடையவன்போல் நடித்தாலும் இப்பாத்திரம் ரசாபாசமாகும். தாமோதர முதலியாருக்குப் பிறகு எனது நண்பர் சி. பாலசுந்தர முதலியார் இதை நன்றாக நடித்துவந்தார். சபாபதி முதலியாரின் பாகத்தை அநேக வருஷங்களாக நான் நடித்து வருகிறேன். நான் எனது சிற்றறிவைக்கொண்டு சிருஷ்டித்த அநேக பாத்திரங்களில், மனோஹரனைப்போல், சபாபதி பாத்திரமும் நெடுநாள் ஜீவித்திருக்குமென நினைக்கிறேன்.

# 18 ஆவது அத்தியாயம்

1907 வருஷத்தின் முதலில், இலங்கையிலிருந்து ஆனரபில், பி. ராமநாதம் என்பவர் சென்னைக்குவர அவரது வரவேற்கையாக விக்டோரியா ஹாலில், 'அமலாதித்யன்' நாடகத்திலிருந்து சில காட்சிகளும், "விரும்பியவிதமே' என்பதினின்றும் சில காட்சிகளும், சகுந்தலை நாடகத்தைத் தோற்றக் காட்சிகளாகவும் ஆடினோம். தமிழில் மிகுந்த விர்பத்தியுடைய அச்சீமான் நாடகத்தின் முடிவில், மேடையின் பேரில் வந்து, ஆக்டர்களையெல்லாம் மிகவும் புகழ்ந்து, எங்கள் சபையை, லங்கைக்கு வரும்படியாகக் கோரினார்.

அன்றியும் இவ்வருஷ முதலில் சென்னையின் பழய கவர்னராகிய லார்ட் வென்லாக் என்பவர், சென்னைக்கு மறுபடியும் வர, சென்னை வாசிகள் ராவ்பகதூர் அநந்தாசார்லு தோட்டத்தில் அவருக்கு ஒரு உபசார விருந்தளிக்க, அச்சமயம் அக்கமிட்டியார் வேண்டு கோளின்படி எங்கள் சபையார், 'விரும்பிய விதமே' நாடகத்திலிருந்து சில காட்சிகளையாடி, நந்தனர் சரித்திரத்தைத் தோற்றக் காட்சிகளாகக் காட்டினோம். நாடக முடிவில், எங்கள் சபையின் பேட்ரன் (Patron) ஆகவிருந்த சர். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஆக்டர்களாகிய எங்களை யெல்லாம் இன்னின்னாரென லார்ட் வென்லாக்குக்குத் தெரியப்படுத்தினார். அச்சமயம் என்னைப் பற்றியும், ஷேக்ஸ்பியர் நாடகங்களை நான் தமிழில் அமைத்ததைப் பற்றியும் அவரிடம் புகழ்ந்து பேசினார். அப்போது லார்ட் வென்லாக்குடன் நான் சம்பாஷித்த பொழுது நடந்த ஒரு சிறு விஷயம் எனக்கு ஞாபகமிருக்கிறது; எங்கள் சபையைப்பற்றிப் பலவிஷயங்கள் கேட்டுவரும்பொழுது, முடிவில், 'உங்கள் சபையில் எத்தனை அங்கத்தினர் இருக்கிறார்கள்?' என்று (இங்கிலீஷில்) கேட்டார். அதற்கு நான் 'முன்னூறு பெயரிருக்கிறோம்!' என்று பதில் சொல்ல, 'ஒரு நாடக சபைக்கு இத்தனை அங்கத்தினரா?' என்று ஆச்சர்யப் பட்டவராய், "முன்னூறுமெம்பர்களா? முன்னூறுமெம்பர்களா?" என்று பன்னிக் கேட்டார். சில வருஷங்களுக்குப் பின் எங்கள்

சபையில் 2100 மெம்பர்களிருந்தபொழுது, அதை அறிந்திருப்பா ராயின் இவர் என்ன சொல்லியிருப்பாரோ?

இவ்வருஷக் கடைசியில், சென்னைக்கு அச்சமயம் விஜயம் செய்த மைசூர் மகாராஜா அவர்கள் முன்னிலையில் எங்கள் சபை யார், தெலுங்கில் ஹரிச்சந்திர நாடகத்தை நடத்தினார்கள்.

இவ்வருஷம் நான் ஒரு நூதன நாடகமும் எழுதியதாக ஞாபக மில்லை. ஆயினும் எனது நண்பர் அ. கிருஷ்ணசாமி ஐயர் 'சபலை' என்னும் ஒரு நாடகத்தை எழுதினார். இது ஆங்கிலத்தில் ஹென்ரி உட் (Henry Wood) துரைசானி அவர்கள், ஈஸ்ட்லின் (East Lynne) என்னும் பெயர் வைத்து எழுதிய நவீனத்தின் தமிழ் நாடக அமைப்பாகும். இது எங்கள் சபையோரால் இவ்வருஷம் ஆடப்பட்டது. கிரந்தகர்த்தாவாகிய கிருஷ்ணசாமி ஐயர், நாடகத் தலைவியாகிய சபலை வேடம் பூண்டு, மிகவும் நன்றாய் நடித்தார். இது ஒரு துக்ககரமான நாடகம்; இதில் வந்திருந்தவர்களின் மனதையெல்லாம் உருக்கும் படி மிகவும் விமரிசையாக நடித்தார். இவர் நடித்திருக்கும் பெண் வேடங்களில் இது ஒரு முக்கியமான தாகும். இம்முறை இந் நாடகத்தில், எனதாருயிர் நண்பரும் சி ரங்கவடிவேலுவும், நானும், ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆயி னும் இதே நாடகம் பிறகு ஆடியபொழுது, ரங்கவடிவேலு, வேலைக் காரியாகிய விஜயையாக நடித்திருக்கிறார், நானும் பன்முறை இந் நாடகத்தில் சுவர்ணகிரி ஜமீன்தாராக நடித்திருக்கிறேன்.

இவ் வருஷக் கடைசியில் எங்கள் சபையின் மற்றொரு அங்கத் தினராகிய சரசலோசன செட்டியார் என்பவர் எழுதிய "சரசாங்கி" என்னும் நாடகமும் ஆடப்பட்டது. இது ஷேக்ஸ்பியர் மகா நாட கக்கவி ஆங்கிலத்தில் எழுதிய சிம்பலீன் (Cymbeline) என்னும் நாடகத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது. இந்நூலாசிரியர் கதையைக் கொஞ்சம் மாற்றியும் எழுதியுள்ளார்; இவர் தமிழ் நன் றாகப் படித்தவர், கவனம் செய்யும் சக்தியும் இவருக்குண்டு. இவர் இரண்டொரு வருஷத்திற்குள்ளாக மிகவும் சிறு வயதில் மரித்தது எல்லோரும் விசனிக்கத் தக்க விஷயம்.

1908-ம் வருஷத்தில், சென்ற வருஷம் அ. கிருஷ்ணசாமி ஐயர் தமிழ் சப் கண்டக்டராகயிருந்தது மாறி, சி. ரங்கவடிவேலு தமிழ் சப் கண்டக்டராக நியமிக்கப்பட்டார். இவ்வருஷத்தில் நடந்தேறிய பல விஷயங்களை நான் குறிக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

இவ்வருஷம் எங்கள் சபையின் நூற்றுவது நாடகம் நடத்தப்பட்டது. இந்த நூறுவது நாடகம் நடத்த 17 வருஷங்கள் பிடித்தன. நூறுவது நாடகமாக 'அமலாதித்யன்' நாடகத்தை நடத்தினோம். அதனால் வந்த மொத்த வரும்படி 652 ரூபாயை விக்டோரியா பப்ளிக் ஹால் என்கிற பெயரை உடைய இடத்தில் விக்டோரியா மகாராணியின் படமில்லாதிருந்த குறையைத் தீர்க்கச் செலவழித்து அப்படத்தை ஹாலில் ஸ்தாபித்தோம்.

இவ்வருஷம் என்னால் எழுதப்பட்ட இரண்டு புதிய தமிழ் நாடகங்கள் ஆடப்பட்டன. முதலாவது 'சிம்ஹளநாதன்' என்பதாம். இது ஷேக்ஸ்பியர் மகாநாடகக்கவி ஆங்கிலத்தில் சிம்பலின் எனும் பெயர் வைத்து எழுதிய நாடகத்தின் தமிழ் அமைப்பாம். இதற்கு முன் வருஷம் இக்கதையை "சாசாங்கி" என்னும் பெயர் வைத்து நாடகரூபமாய் எழுதினதை எங்கள் சபையார் ஆடினபொழுது, ஷேக்ஸ்பியர் மகாகவி எழுதியதை மிகவும் மாற்றி எழுதியது என் மனதிற்குப் பிடிக்கவில்லை. சாதாரணக் கதைகளை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றி நாடகரூபமாய் எழுதி விடலாம்; பெரியோர்கள் கையாண்ட கதைகளை அவ்வாறு மாற்றுவது உசிதமன்று என்பது என் துணிவு. என்னுருயிர் நண்பர் சி. ரங்கவடிவேலுவும், அக்கதையில் தான் கதாநாயகியின் பாகத்தை ஆடவிரும்புவதாகத் தெரிவிக்கவே, சரிதான் என்று ஒப்புக்கொண்டு இதை விரைவில் எழுதி முடித்தேன், இந்நாடகமானது இவ்வருஷம் எங்கள் சபையோரால் ஆகஸ்டு மாதம் 28 ஆம் தேதி ஆடப்பட்டது. இதில் எனதாருயிர் நண்பர், கதாநாயகியாகிய மோகினி (Imogen) வேடம் பூண்டனர், அதன்பேரில் மோகினியின் கணவனாகிய பாசதாமன் (Posthumus) வேடம் நான் பூண நேரிட்டது. இப்பாசதாமன் பாத்திரம் முக்கியமானதாயில்லாவிட்டாலும், எனது நண்பர் மற்

றெவருடனும் நாடகமேடையில் ஆடமாட்டேன் என்கிற கொள்கை யுடையவராயிருந்தபடியால், இதை நான் எடுத்துக்கொள்ள வேண் டியதாயிற்று. இக்கொள்கையினின்றும் எனதாருயிர் நண்பர் எங் கள் சபையைச் சேர்ந்த 1895 ஆம் வருடம் முதல் 1923 ஆம் வரு ஷம் அவர் தேக வியோகமான வரையில் மாறவில்லை என்று எனது நண்பர்கள் அனைவரும் அறிந்த விஷயமே. இந்நாடகத்தில் மோகி னியின் சகோதரர்களான, கிரிதரன், ஆர்வராகன், என்னும் இரண்டு பாத்திரங்கள் எங்கள் சபையைப் புதிதாய்ச்சேர்ந்த டி. சி. வடிவேலு நாயகரும், ம. ராமகிருஷ்ண ஐயரும் எடுத்துக்கொண்டு மிகவும் நன்றாய் நடித்தார்கள். இவர்களிருவரையும் பற்றி இங்கு சற்று விவ ரமாய் எழுதவிரும்புகிறேன். இவர்கள் இருவரும் பால்ய சினேகிதர் கள். இருவரும் இதற்கு முன்பாக ஏதோ ஒரு சபையில் கொஞ்சம் ஆடிப்பழகினவர்கள். இருவரும் எங்கள் சபையில் ஒன்றாய்ச் சேர்ந் தார்கள். தற்காலம் ராமகிருஷ்ண ஐயர் சற்று பருமனாக விருந்த போதிலும், அக்காலத்தில் வடிவேலு நாயகரைப்போலவே, ஒல்லியா யிருந்தார். இவர்களிருவரும் ஏறக்குறைய ரங்கவடிவேலுவின் உயர மிருந்தபடியால் இம்மூவரும், அண்ணன், தம்பி, தங்கையாக நடித் தது அழகாயிருந்தது. இவர்களிருவரும் இந்த ஆண்வேடங்களில் நன்றாய் நடித்தபோதிலும் இவர்கள் ஸ்திரீவேடங்களுக்கே ஏற்றவர் கள் என்று கண்டவனாய், பெரும்பாலும் இவர்களுக்கு ஸ்திரீ வேடமே கொடுத்து வந்தேன். இவர்களிருவரிடமும் சில முக்கிய மான நற்குணங்கள் இருந்தன, இருவரும் எந்த வேஷத்தை எடுத் துக்கொள்ளச்சொன்னபோதிலும், மனம் கோணாது எடுத்துக்கொள் வார்கள்; அது தான் வேண்டும் இதுதான் வேண்டும், என்று கண் டக்டர்களுக்குச் சிரமம் கொடுப்பதில்லை; இருவர்களும் தங்கள் பாடங்களைச் சரியாகச் சடுதியில் படித்து விடுவார்கள்; இருவருக் கும் நல்ல ஞாபகசக்தியுண்டு; நாடகமேடையின்மீது கைசரக்கு அதிகமாக உபயோகிக்க மாட்டார்கள்; இது ஆக்டர்களுக்குரிய ஒரு முக்கியமான குணமாம். அன்றியும் இவ்விருவர்களும், ஒத்தி கைகளுக்குச் சரியாக வந்து தங்கள் பாடங்களை ஒப்புவிப்பார்கள். இத்தனை பொருத்தங்கள் இவ்விருவருக்கும் இருந்தபோதிலும், சில வித்யாசங்களும் இருந்தன. அவற்றுள் முக்கியமானது, வடிவேலு

நாயகர் நன்றாய்ப்பாடுவார். ராமகிருஷ்ண ஐயருக்கும் சங்கீதத்திற்கும், எயிரோபிளேனி (aeroplane) னுலும் ஒரு நாளில் கடக்கக் கூடாத தூரம்! ராமகிருஷ்ண ஐயர் சிவப்பாயிருப்பார், வடிவேலு நாயகர் கருநிறமுடையவர். கருநிறமுடையவராயினும், ஸ்திரீவேஷம் தரித்தால் அழகாய்த் தோற்றுவார்.

வடிவேலு நாயகர், அ. கிருஷ்ணசாமி ஐயர் கொஞ்சம் வயோதிகரான பிறகு, அவர் ஆடிவந்த பாகங்களில் அநேகம் ஆடியிருக்கிருர். லீலாவதி, சந்திரியாவளி, சௌமாலினி, ரத்னங்கி முதலிய முக்கியமான ஸ்திரீ வேடங்களில், அவருக்குப் பிறகு, மிகவும் நன்ருய் நடித்துப் பெயரெடுத்திருக்கிருர். தற்காலம் லீலாவதி வேஷத்தில் இவருக்கு நிகரில்லையென்றே நான் கூறவேண்டும். கிருஷ்ணசாமி ஐயரைப்போல் அவ்வளவு திவ்யமான சாரீரமுடையவராயில்லாவிட்டாலும், குறைவில்லாச் சாதகத்தினுல் தன் குரலைச் சரிபடுத்தி, சபையோர் மெச்சும்படியாகப் பாடுபவர். மேற்குறித்த நாடகப் பாத்திரங்களன்றி, எனது மனோஹரன் நாடகத்தில் இவருக்குச் சமானமாக வசந்தசேனையாக யாரும் நடித்ததிலர் என்று நான் உறுதியாய்க் கூறக்கூடும். அன்றியும் சோகபாகங்களில், கிருஷ்ணசாமி ஐயருக்குப் பிறகு, இவர்தான் தற்காலம் சிறந்த ஆக்டர் என்று சொல்லவேண்டும். தற்காலம் ஹரிச்சந்திர நாடகம் எங்கள் சபையில் போடும்போதெல்லாம் இவர்தான் சந்திரமதியாக வெகு விமரிசையாக நடித்து வருகிருர். அன்றியும் கிருஷ்ணசாமி ஐயரைப் போல் தெலுங்கு நாடகங்களிலும் சிலவற்றுள் இவர் முக்கிய ஸ்திரீ வேஷம் பூண்டிருக்கிருர். மேலும் இவரிடமுள்ள இன்னொரு முக்கியமான சிறப்பு என்னவென்றுல், அழகிய ராஜஸ்திரீகள் வேடம் பூணுவதை விட்டுச் சாதாரண ஸ்திரீகளின் வேஷம் பூணுவதிலும் இவர் மிகவும் சமர்த்தர். சிறுத்தொண்டர் நாடகத்தில் சந்தன நங்கையாகவும், புத்தசரித்திரத்தில் கிருசகௌதமியாகவும், சபாபதியில் சபாபதி முதலியாரின் தாயாராகவும், இன்னும் இப்படிப்பட்ட பல வேடங்களில் பெயர் பெற்றிருக்கிருர். எந்த வேடத்தில் வந்தாலும் சரிகைப் புடவையும், ரவை அட்டிகையும் கட்டிக்கொள்ள வேண்டுமென்று விரும்பும் சில ஆக்டர்களைப் போலல்லாமல், அந்தந்த வேஷத்திற்குத் தக்கபடியே ஆடையாபர

ணங்களை அணிவார். தெற்கத்திய ஸ்திரீயாக வந்தாலும், இடைச்சியாக வந்தாலும் தாய்க்கிழவியாக வந்தாலும், கிறிஸ்தவப் பெண்ணாக வந்தாலும் தத்ரூபமாயிருக்கும்.

இவர் தமிழ் நன்ருய்க் கற்றுணர்ந்தவர் ; தமிழில் வள்ளிமணம் என்கிற ஒரு நாடகத்தையும் எழுதியிருக்கிருர். அது எங்கள் சபையோரால் ஒரு முறை ஆடவும் பட்டிருக்கிறது. அன்றியும் தமிழ் பாட்டுகள் எழுதுவதில் மிகவும் வல்லமை வாய்ந்தவர். தனக்கு வேண்டிய வர்ணமெட்டுகளிலெல்லாம் தானுகப் பாட்டுகள் கட்டிக்கொள்வார்; பிறருக்கும் கட்டிக்கொடுப்பார்.

இவரது நண்பராகிய ராமகிருஷ்ண ஐயர் சில சமயங்களில் வசந்தசேனை, ரத்னுவளி, முதலிய உயர்குல ஸ்திரீவேடங்கள் தரித்த போதிலும், இவர் முக்கியமாக நாடக மேடையில் பெயர் பெற்றது "சில்லரை" வேஷங்கள் என்று சொல்லப்பட்ட தாழ்குலத்து ஸ்திரீ வேடங்களிலேயாம். வடிவேலு நாயகரைப் போலவே இவரும் இப்படிப்பட்ட வேஷங்கள் தரிக்கும்பொழுது, அவ்வேஷங்களுக்குத் தக்கபடியே ஆடை ஆபரணங்கள் அணிவார். இவர் வண்ணுத்தியாக வேடம் பூண்டால், அச்சம் வண்ணுத்தியைப் போலவே நடிப்பார்; ஆதிதிராவிட ஸ்திரீயாக வேடம் பூண்டால் எல்லோரும் ஆதிதிராவிட மாதுதான் என்று சொல்வார்கள் ; குயத்தியாக வேடம், பூண்டால், வாஸ்தவமாகிய ஸ்திரீகளுக்கும் இவருக்கும் வித்யாசம் கண்டுபிடிப்பது கடினமாம். எந்த வேடம் பூண்டாலும் அதற்கிசைய நடிப்பதுதான் மேன்மை என்று அர்த்தம் கொள்ளும்படியாக ஒரு ஆங்கிலக்கவி எழுதியிருக்கிருர். அதற்கிசைய நடிப்பவர் இவராவர். 'பொன் விலங்குகள்' என்னும் எனது நாடகத்தில் மங்கைத் தாயாகவும், இடைச்சுவர் இருபுறமும், என்னும் தமிழ் நாடகத்தில் அம்மாயி என்னும் வேலைக்காரியாகவும் இவர் நடித்தது சபையோரால் மெச்சப்பட்டதை நான் மறக்கற்பாலதன்று. இவ்வாறு தாழ்குல ஸ்திரீகள் வேஷங்களில் பெயர் பெற்றும், அரிச்சந்திர விலாசத்தில் காலகண்டியாகவோ, அல்லது நந்தனர் சரித்திரத்தில் வேதியர் மனைவியாகவோ, பிராம்மணஸ்திரீயாக வரும் பொழுது அசல் பிராம்மண ஸ்திரீயைப்போலவே இருப்பார். இது நாடகமேடையில் ஒரு மிகவும் மெச்சத்தக்க குணமாம்.

இவரைப்பற்றி இன்னொரு விஷயம் இங்கு எழுத விரும்புகி றேன். இவர் என்னிடம் "என்ன வாத்தியார்! எப்பொழுது பார்த் தாலும், மங்கைத்தாய் வேஷமும், அலமேலு வேஷமும்தான் எனக் குக் கொடுக்கிறீர்கள்? பெரிய நாடகப் பாத்திரமாக நடிக்கவேண்டு மென்று எனக்கு ஒரு விருப்பமிருக்கிறது. ஏதாவது ஒன்றைக் கொடுத்து, என்னைப்பாருங்கள்"! என்று பன்முறை கேட்டிருந்தார். அதன் மீது ஒரு முறை மனோஹரன் நாடகம் எங்கள் சபையார் ஆடத்தீர்மானித்திருந்த பொழுது இவருக்குப் பத்மாவதி பாத்திரம் கொடுத்தேன். மற்ற ஆக்டர்களெல்லாம் இவரால் பத்மாவதி சரி யாக ஆடமுடியாதென்று கூறினர்; ஆயினும் பார்ப்போம் என்று, என்னாலியன்ற அளவு அவருக்கு அப்பாத்திரத்தை இப்படி இப்படி ஆட வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தேன்; அவரும் மிகுந்த சிரமத்தையெடுத்துக் கொண்டு கற்று வந்தார். இவருக்கோ கிருஷ்ணசாமி ஐயரைப்போல் பாடத்தெரியாது, பத்மநாபராவைப் போல் கம்பீரமான உருவமும் கிடையாது, மிகவும் குட்டையான உருவம் உடையவர் இப்படி இருந்தும் நாடகதினம், பத்மாவதியாக நடித்தபொழுது முன்பு ஏளனம் செய்த அநேகர், இவ்வளவு நன் ருக நடிப்பார் என்று நாங்கள் நினைக்கவேயில்லை என்று ஒப்புக் கொண்டனர். எனக்கும் இவர் என்னுடன் நடித்தது திருப்திகர மாயிருந்தது. இதை இவ்விடம் ஏன் எடுத்துக் கூறுகிறேன் என் ருல், நம்மால் அசாத்தியமான காரியமான போதிலும், மனமார முயற்சி செய்தால் அதன் பலன் நமக்குக் கிட்டாமற் போகாது என் தாம்; இதைப்பற்றித் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறியதை எனது நண்பர்கள் கவனிப்பார்களாக.

அன்றியும் இவ்வருஷம் நாங்கள் நடத்திய இந்தச் சிம்ஹளநா தன் நாடகத்தில் எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், டி. வி. கோபாலசாமி முதலியார் என்பார் முதன் முறை வேடம் தரித்த னர். இவர் தற்காலம் சென்னை கவர்ன்மெண்ட் மந்திரிகளில் ஒரு வராயிருக்கும் ஆனரபில் ராஜன் என்பவரின் மாமனர்; எனக்கு இது முதல் தன் ஆயுசுபர்யந்தம் அத்யந்த நண்பராயிருந்தவர். இவர் தான் நாடகமேடையில் வரவேண்டுமென்று இச்சையிருப்ப தாக எனக்குத் தெரிவிக்க, அவர் உருவத்திற்குத் தக்க வேடம்

கொடுக்க வேண்டுமென்று யோசித்தவனாய்; மோகினி, ஆர்வராகன் கிரிதரன் இவர்களுடைய வளர்ப்புத் தந்தையாகிய பாலராயன் (Balarius) பாத்திரம் இவருக்குக் கொடுத்தேன். இவர் எங்கள் நாடகமேடையில் வருவது இதுதான் முதன் முறையாயிருந்த போதிலும், கொஞ்சமும் கூச்சமின்றி மிகவும் நன்றாய் நடித்தார், இவரிடமிருந்த மற்ற அரிய குணங்களுடன், நாடகமேடையைச் சேர்ந்த ஒரு அரிய குணம் என்ன வென்றால், தனக்குரிய பாடத்தில், தானும் ஒரு எழுத்து விடமாட்டார், தன்னுடன் வரும் இதர நாடகப்பாத்திரங்களும் ஒரு எழுத்து விட்டு விடச் சம்மதியார்; ஒத்திகைகளில் தன்னுடன் வரும் யாராவது ஆக்டர், எதை விட்ட போதிலும், அதை அவருக்கு ஞாபகப்படுத்தி, அவர் அதைச் சரியாக ஒப்புவிக்கும் வரையில் விடமாட்டார்! இவ்வாறு தான் பாடத்தைப்படிப்பது மன்றித் தன்னுடன் வரும் மற்ற ஆக்டர்களின் பாடத்தையும் படித்துவைப்பார்! இவர் எங்கள் சபையில், இது முதல் பன்முறை வேடங்கள் தரித்து ஆடியிருக்கின்றனர். இவருக்கு 'பிஸ்தாக்கொட்டை சாமியார்' என்று எங்கள் சபையில் பெயர் வந்ததற்குக் காரணம் பிறகு எழுதுகிறேன்.

இவர், படித்தவர்கள் அநேகரை கொள்ளை கொள்ளும் நீர் வியாதியால், நடுவயதில் அகால மரண மடைந்தனர். இவர் மரணத்தினால் எங்கள் சபை ஒரு நல்ல ஆக்டரையும், நான் எனது அத்யந்த நண்பர்களில் ஒருவரையும் இழந்தேன். எங்கள் நட்பைப்பற்றி ஒரு சிறு விஷயம் இங்கெழுத அனுமதி கேட்கிறேன். இவரை நான் அறிவதன் முன்னர், சிற்றுண்டிக்காவது, விருந்திற்காவது, எங்கு சென்ற போதிலும், நானும் எனதாருயிர் நண்பர் சி. ரங்கவடிவேலுவும் ஒன்றாய் உட்கார்ந்து உண்போம். இவரைத் தெரிந்த பிறகு, நாங்கள் மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்துண்பவர்களானோம். எந்தப்பார்ட்டிக்காவது விருந்துக்காவது போனபோதிலும், நாங்கள் எங்கிருக்கிறோமென்று அவர் எங்களைத் தேடிவந்து எங்களுடன் உட்காருவார்; நாங்களும் அவர் எங்கிருக்கிறார் என்று தேடி அவரிடம் செல்வோம். இத்தகைய நண்பனைச் சில வருடங்களுக்குள் இழந்தது எனது பூர்வ பாபவியாகம் என்றே கருதுகிறேன்.

இந் நாடகத்தில் டாக்டர் டி. ஸ்ரீனிவாசராகவாசாரி சயாக்ரமன் (Iachimo) வேடம் பூண்டனர். இவர் 12 வருடங்களுக்கு முன் இரண்டு நண்பர்கள் எனும் நாடகத்தில் கமலினி வேஷம் தரித்த பிறகு, இடைக்காலத்தில் எங்கள் சபையைவிட்டு நீங்கியிருந்து, மறுபடியும் இச்சமயம் வந்து சேர்ந்தார். இந் நாடகத்தில் நடித்த மற்ற ஆக்டர்களைப்பற்றி நான் இங்கெழுதத்தக்க விசேஷம் ஒன்றுங் கொன்றும் ஞாபகமில்லை.

இந் நாடகமானது, இச்சமயம், சீக்கிரம் ஆடவேண்டுமென்று ஒருவாறு அவசரத்தில் எழுதி முடிக்கப்பட்டது. பிறகு சாவகாசமாக முற்றிலும் திருத்தி எழுதி 1914 ஆம் வருஷம்தான் இதை அச்சிட்டேன். அச்சிடும்பொழுது, ஷேக்ஸ்பியர் காலத்தில் அநுசிதமாக மதிக்கப்படாவிட்டாலும், தற்காலம் அவ்வாறு மதிக்கப்படும் என்று நான் எண்ணிய சில வாக்கியங்களை மாற்றியுள்ளேன். அன்றியும் இதில் 5-ஆம் அங்கத்தில், பாசதாமனது காட்சியில், அம் மகா நாடகக்கவி எழுதாது மற்றவர்களால் கோர்க்கப்பட்டது என்று அறிஞர்களால் மதிக்கப்படும் பாகத்தையெல்லாம், நான் அச்சிட்டிருக்கும் புஸ்தகத்தில் அகற்றியுள்ளேன்.

இந்நாடகமானது எங்கள் சபையால் இரண்டு மூன்று முறை தான் ஆடப்பட்டது; இலங்கை சுபோத விலாச சபையாரால் நான்கைந்து முறை ஆடப்பட்டிருக்கிறது; மற்ற சபையார் இதை எக்காரணத்தினலோ அதிகமாக ஆடவில்லை.

இந்தச் சிம்ஹளநாதன் அன்றி, இவ்வருஷம் எங்கள் சபையார் நடித்த எனது மற்றொரு நாடகம் "வேதாள உலகம்" என்பதாம். இந்நாடகத்தை இதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பாகவே நான் எழுதி முடித்தபோதிலும் இவ்வருஷம்தான் எங்கள் சபையோரால் ஆடப்பட்டது. இவ்வாறு இந்நாடகம் ஒரு வருஷமாய் ஆடாமல் நின்றதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. இந்நாடகத்தில் கதாநாயகன் ராஜஸிம்ஹன் எனும் அரசகுமாரனுயினும், அவனைவிட முக்கியமான பாத்திரம் 'தத்தன்' என்னும் அவனுடைய தோழனுடையதாம். இதை இந்நாடகத்தை வாசித்திருக்கும் என் நண்பர்கள் நன்குயறிவார்கள். ஒரு விதத்தில் இந்

தத் தத்தனையே கதா நாயகனெனவும் கூறலாம். அவ்வளவு முக்கியமான பாத்திரம் அது ; இதை எனது நண்பர் எஸ். ராஜகணபதி முதலியாருக்கென்றே எழுதினேன். நான் இதை எழுதி முடித்து, அவர் தன் பாகத்தையெல்லாம் எழுதிக்கொண்டவுடன், (அப்பொழுது இந்நாடகம் அச்சிடப்படவில்லை) அவருடைய ஆபீசுக்காரர்கள் அவரை திடீரென்று ரங்கூனுக்கு மாற்றி விட்டார்கள். அதன் பேரில் அவர் திரும்பிப் பட்டணம் வந்து சேர்ந்து இந்நாடகத்தில் நடிக்கும் வரையில், வேறு மற்றவர்களைக் கொண்டு இந்நாடகத்தை நடிப்பதில்லை என்று தீர்மானித்தவனாய், ஒரு வருஷ காலத்துக்கு மேல் அவர் வரவை எதிர்பார்த்து, இதை ஆடாது விட்டுவைத்தேன். இவ்வாறு அவருக்காக இதை நிறுத்திவைத்ததற்காக என்னைக் கடிந்து கொண்ட எனது நண்பர்களும், அவர் திரும்பி வந்து இவ்வருஷம் இந்நாடகத்தில் தத்தனாக நடித்ததைக் கண்ட பிறகு, நான் செய்தது சரியென ஒப்புக்கொண்டனர். அவ்வளவு நன்றாக நடித்தார் அவர். இந்நாகடமானது, அதே சபையாரால் (பால நாடக சபைகள் உள்பட) பன்முறை ஆடப்பட்டிருப்பதாலும், நான் எழுதிய நாடகங்களைப் படிப்பவர்களால் அதிகமாகக் கொண்டாடப் பட்டிருப்பதாலும், இந்நாடகக் கதையைப் பற்றிச் சில விஷயங்கள் இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நாடகக்கதை என்மனதில் உதிக்குமுன், இதன் பெயர், 'வேதாள உலகம்' என்பது என் மனதில் உதித்தது! சாதாரணமாக, ஒரு நாடகத்தை எழுதி முடித்த பிறகுதான் அதற்கு என்ன ஏற்ற பெயர் வைக்கலாம் என்று பெரும்பாலும் நாடகாசிரியர்கள் யோசிப்பது வழக்கமாம். இதிலோ பெயரை முன்பு தீர்மானித்து, அப்பெயருக்கேற்றபடி, நாடகக் கதையை எழுதலானேன் ! இப்பெயர் என் மனதில் உதித்ததற்கு ஒரு விநோதமான காரணம் உண்டு. இதற்கு முன்னால் சென்னைக்கு ஒரு புதிய பாரசீகக் கம்பெனியார் வந்து, இந்துஸ்தானி பாஷையில் பல நாடகங்களை ஆடியதைப்பற்றி எனது நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். அவர்கள் முதன் முதல் ஆடிய நாடகத்திற்கு 'பஹாரி பரிஸ்தான்" (Bahri Paristan) என்று பெயர். எப்படி எங்கள் சுகுண விலாச சபையார், மற்ற

ஊர்களுக்குப் போகும் பொழுதெல்லாம், "லீலாவதி சுலோசனை"யை முதல் நாடகமாகப் பல வருஷங்கள் நடத்தி வந்தார்களோ அப்படியே இப்பாரசீகக் கம்பெனியார், எந்த ஊரில் போய் ஆட ஆரம்பித்த போதிலும், இந்த "பஹாரி பரிஸ்தான்" என்பதையே தங்கள் முதல் நாடகமாக ஆடுவதாக வழக்க முடையவராயிருந்தனர்.

இவர்கள் முதன்முறை இதை ஆடியபொழுது நான் போய்ப் பார்க்கவில்லை. இரண்டாம் முறை ஆடியபொழுது இதைப்போய்ப் பார்த்தேன். இதில் முக்கியமாக விநோதமாக ஜோடிக்கப்பட்ட காட்சிகள் பல இருந்தனவேயொழிய, ஆக்ட் செய்வதில் அத்தனை விசேஷமாக இல்லை என்று என் புத்தியிற் பட்டபோதிலும், ஒரு காட்சி மாத்திரம் என் மனதில் நன்றாய் வேர்கொண்டது. அதாவது, கதா நாயகனை ஒரு வாலிப ராஜகுமாரன், தன்தோழனுடன் காட்டில் உழன்றபொழுது, ஒரு குளிகையைப்பெற்று, அங்கு தோன்றிய ஒரு குகைக்கெதிரில்போய் அக்குளிகையைக் காண்பிக்க, அக்குகை வெடித்து, தான் நெடுநாளாகப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்த பரிஸ்தான், அல்லது பரிகள் உலகம் என்பதைக் காண்கிறான். பரிஸ்தான் என்பதற்குப் பரிகள் அல்லது அப்சரக் கன்னிகைகள் வசிக்கும் உலகம் என்று பொருள் கூறலாம். இக் காட்சியை அமைத்துத் தமிழில் ஒரு நாடகம் நாம் எழுதவேண்டும் என்றுமனதிற்பட்டது. உடனே, மந்திரத்தைச் சரியாக உச்சரிக்க குகை வெடித்து ராஜகுமாரனை அப்சரக்கன்னிகைகள் அப்சர லோகத்துக் கழைத்துக்கொண்டு போவது போலவும், அக்குகை மூடிக்கொள்ள மந்திரத்தைச் சரியாக உச்சரிக்காது தவறாகச் சொல்ல, அவன் தோழனை, குகை வெடித்துவந்த வேதாளங்கள் தூக்கிக்கொண்டு போவதுபோலவும் எழுதினால் மிகவும் வேடிக்கையாயிருக்குமென்று என் புத்தியிற்பட்டது. உடனே நான் எழுதப் போகிற நாடகத்திற்கு "வேதாள உலகம்" என்று பெயர் வைத்தால் நலமாயிருக்குமெனத் தீர்மானித்தேன். இவ்வாறு நாடகத்தின் பெயரை முன்பு தீர்மானித்து, பிறகு அதற்கேற்றபடி நாடகக்கதையைக் கோர்த்துக் கொண்டேன். அரண்மனையில் இரகசியமாய் வைத்திருந்த ஒரு சித்திரப்படத்தைக் கண்டு கதாநாயகியின் மீது ராஜகுமாரன் காதல் கொண்டதற்கு அஸ்திவாரமாயிருந்தது நான் சிறுவயதில் படித்த தக்காரணத்துப் பூர்வகதைகளுள் ஒன்றாம்.

தத்தனுடைய பாத்திரம் என் மனதில் உதித்ததற்கு, ஷேக்ஸ்பியர் மஹா நாடக கவி எழுதிய பால்ஸ்டாப் (Falstaff) பாத்திரமென்று ஒருவாறு கூறலாம். ஆயினும் உருவத்திலும், அகட விகடத்திலும், அந்த பால்ஸ்டாப்பை தத்தர் ஒத்திருந்த போதிலும், இந்நாடகத்தின் முதற்காட்சி, ஷேக்ஸ்பியர் நான்காம் ஹென்றி (Henry IV) என்னும் நாடகத்தில் எழுதியுள்ள ஒரு காட்சியை ஒத்திருந்த போதிலும், பிறகு வரும் காட்சிகளில் அவரெழுதியுள்ள நாடகத்திற்கும் நான் எழுதியுள்ள நாடகத்திற்கும் சிறிதும் சம்பந்த மில்லை. மேலுக்கு விகடனாகத் தோன்றியபோதிலும், இத் தத்தனிடம், அவனது நண்பனாகிய ராஜகுமாரன்மேல் அவன் பொருட்டுத் தன் உயிரையும் கொடுக்கத் துணியும்படியான பேரன்புண்டு என்பதை, இதை வாசிப்பவர்கள் கவனிப்பார்களாக. நான் எனது சிற்றறிவைக் கொண்டு நிர்மித்த நாடக பாத்திரங்களுக்குள் இந்தத் தத்தன் பாத்திரம் ஒரு முக்கியமானது என்று நினைக்கிறேன். இந்நாடகமானது நடிக்கப் படும்பொழுது பார்த்த, அல்லது இதை வாசித்துப்பார்த்த, அநேகம் ஆக்டர்கள், தாங்களும் இந்தத் தத்தன் வேடம் பூண வேண்டுமென்று விரும்பி எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இது தான், நான் எழுதியுள்ள எல்லா நாடகங்களைப் பார்க்கிலும், மற்ற அநேக சபையார்களால் இந்நாடகம் அதிகமாக ஆடப்பட்டதற்குக் காரணம் என்று தோற்றுகிறது; ஹாஸ்யபாகத்தில் நான் எழுதியவற்றுள் இது மிகச்சிறந்தது என்று எனது நண்பர்கள் பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

இந்தத் தத்தன்பாகம், அவருக்கென்றே எழுதப்பட்டபடியால் எனது நண்பர் எஸ். ராஜகணபதி முதலியார் இதில் எளிதில் பெரும் பெயர் பெற்றார். இவருக்குப் பிறகு இப்பாத்திரத்தில் பெயர் பெற்றவர் எனது நண்பர் எம். துரைசாமி ஐயங்காரே. இந்தப் பாத்திரத்தை எங்கள் சபையில் ஆக்ட் செய்த மற்ற ஆக்டர்கள், தாமோதர முதலியார், கே. வரதாசாரியார் முதலியோர். இன்னும் நான் மேலே குறித்தபடி இதர சபைகளில் அநேகர் இதை நடித்ததைப் பார்த்திருக்கிறேன். இதை நடிக்க விரும்பும் என் இளைய நண்பர்களுக்கு ஒன்று கூறவிரும்புகிறேன். இந்தப் பாகத்தை நடிக்க விரும்புவோர் எஸ். ராஜகணபதி முதலியாரைப் போல் பெரும்

உடலை உடையவராயிருத்தல் வேண்டும்; அல்லது, அப்படி இயற்கையில் இல்லாவிட்டால் செயற்கையினாலாவது பெருத்த உடலை உடையவராகத் தோன்றவேண்டும். எங்கள் சபையில் எம். துரைசாமி ஐயங்கார் இதை நடித்தபொழுது, அவர் தேகம் அதிக ஸ்தூலமாயில்லாதபடியால், அவருக்குச்சற்று, ஸ்தூலதேக முடையவராய் நாடகமேடையில் தோன்றும்படியாக, பஞ்சுவைத்து மெத்தையைப் போன்ற உள்ளே தரிக்கும்படியான சட்டை, நிஜார் எல்லாம் தைத்து, அதன்மீது தொப்பைக்காக ஒரு ஏற்பாடு செய்து, அதன்மீது அவர் அணிய வேண்டிய உடையை அணியச்செய்தோம். மெல்லிய தேக முடையவர்கள் இவ்வாறு செய்தாலொழிய இப்பாத்திரத்தை ஆடுவது ரசாபாசமாம். இதற்கொரு உதாரணத்தை என் கண்ணாரக் கண்டேன். ஒரு சபையார் (அவர்களின் பெயரை இங்கெழுத எனக்கிஷ்டமில்லை) இந்நாடகத்தை நடித்த பொழுது, என்னை வரும்படியாகக் கேட்டிருந்தனர்; அதன்படி நான் போய்ப்பார்க்க, முதல் காட்சியானவுடன், என் பக்கத்திலிருந்த நண்பரை, இந்தக் காட்சியில் ஆடியவர்களில் 'யார் தத்தன், யார் ராஜசிம்ஹன்? என்று வேடிக்கையாய்க் கேட்டேன்; ஏனெனில் தத்தன் இருக்கவேண்டியதைப்போல் ராஜசிம்ஹன் வேஷம் பூண்டவர், மிகவும் பெருத்த சரீரமும் வயிறும் உடையவராயிருந்தார். தத்தன் வேடம்பூண்டவர், உடலில் எலும்புகளெல்லாம் வெளியில் தோன்றக்கூடிய ஸ்திதியிலிருந்தார்! இந்நாடகத்தை ஆட விரும்பும் ஆக்டர்கள் இதை முக்கியமாகக் கவனிப்பார்களாக. அன்றியும் ஸ்தூல தேகமில்லாதவர் இந்தத் தத்தன் வேடம் பூணுவதென்றால், வயிற்றிற்கு மாத்திரம் தொப்பையைப்போல், துணியைக் கட்டிக்கொண்டு வருவதைக் கண்டிருக்கிறேன். இதைப் பார்க்கும் பொழுது சூறை வயறு என்னும் வியாதியையுடையவன் போல் தோன்றுகிறது; ஆகவே மெல்லிய தேகமுடையவர்கள் இப்பாத்திரத்தை ஆட விரும்பினால், உடல் முழுவதும் பெருத்திருப்பது போல் காட்டும்படியான (எம். துரைசாமி ஐயங்கார் செய்தபடி) ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்நாடகமானது இது வரையில் என் அனுமதியின் மீது, என்னிடமுள்ள கணக்கின்படி 257 முறை ஆடப்பட்டிருக்கிறது. இந்த நாடகத்தை ஆடுவது அவ்வளவு கஷ்டமில்லை. ஆகவே புதிதாய் நிய

மிக்கப்பட்ட சபைகள் இதை எளிதில் ஆடலாம். இதை நடிக்கக் கற்பதும் கஷ்டமல்ல. எழுதியுள்ள வார்த்தைகளைச் சரியாகச் சொன்னாலே போதுமானது. நகைப்பை யுண்டாக்கத்தக்க பல சந்தர்ப்பங்கள் இதில் இருப்பதால், எளிதில் சபையோரைச் சந்தோஷப்படச் செய்யக்கூடும். இந்நாடகத்தில் சில இடங்களில், ஜனங்கள் கைகொட்டிச் சிரிக்கும் பொழுது எனது நண்பர் தாமோதர முதலியார், 'இந்தக்கரகோஷம் உங்களுடையது என்று நினைத்து விடாதீர்கள். இது வேறொருவருக்குச் சார்ந்தது' என்று வேடிக்கையாகச் சொல்லுவார்.

இந்நாடகத்தில் மூன்றாம் அங்கத்தில் மூன்றாம் காட்சியை நடிக்கும்பொழுது அநேகம் சபையோர்கள் ஒரு தப்பிதம் செய்கிறார்கள். அன்றியும் அநேகம் பேர்கள் இதை எப்படி நடிப்பது என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி இங்கு தெளிவாய் எழுதுகிறேன். இக்காட்சியில், இரண்டு குகைகள் இருக்கின்றன. வலது புறம் குகையில் ராஜ குமாரன் அடைபட்டிருக்கிறான்; இடது புறம் குகையில் தத்தன் அடைக்கப்பட்டிருக்கிறான். மோகனவல்லியை மோசம் செய்யும் பொருட்டு, ராஜிவாட்சி, குகைக்குத் தன் முதுகைக் காட்டி நின்று, வலதுபுறம் குகையில் ராஜகுமார னிருப்பதாகவும், இடது புறம் குகையில் தத்தனிருப்பதாகவும் சொல்லுகிறாள். இவளுக்கு எதிராக நிற்கும் மோகனவல்லிக்கு வலதுபுறம், ராஜகுமாரிக்கு இடதுபுறமாகும். அவளது இடதுபுறம், இவளுக்கு வலது புறமாகும். ஆகவே இக்காட்சியில் இவர்கள் இருவரும் பேசும் பொழுது, ராஜிவாட்சி குகைக்குத் தன் முதுகைக் காட்டி நிற்கவேண்டும்; மோகனவல்லி, சபையோருக்குச் சற்று முதுகைக் காட்டி நிற்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் சபையோருக்கு இந்த சூட்சுமம் அர்த்தமாகாது.

இவ் வருஷம் எங்கள் சபைக்கு ஒரு புஸ்தகசாலை (Library) ஏற்படுத்தினோம்; நான் அது வரையில் சேகரித்து வைத்த தமிழ் நாடகப் புஸ்தகங்களை யெல்லாம் கொடுத்து, மற்ற அங்கத்தினர்களிடமிருந்தும், இலவசமாக, அநேக நாடக புஸ்தகங்களைச் சேர்த்து, ஒரு சிறு புஸ்தகசாலையாக்கி, இவ் வருஷம் தசராக்

கொண்டாட்டத்தின் கடைசியில், விஜயதசமியன்று, இதை வி. கிருஷ்ணசாமி ஐயரைக் கொண்டு திறந்து வைத்தோம். அப்பொழுது 180 புஸ்தகங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது தற்காலம் 1670 புஸ்தகங்கள் அடங்கியதாயிருக்கிறது. தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் என்னும் நான்கு திராவிட பாஷைகளிலு முள்ள நாடகங்களை யெல்லாம் இதில் சேர்த்து வைக்கவேண்டு மென்பது எங்கள் கருத்து. இதை வாசிக்கும் எனது நண்பர்களிடம் அப்படிப்பட்ட புஸ்தகங்களிருக்கு மாயின், அவற்றை அவர்கள் இப் புஸ்தக சபைக்கு உதவுவார்களானால் எங்கள் சபை அவர்களுக்கு நன்றி பாராட்டும்.

அன்றியும் இவ் வருஷம் எங்கள் சபையின் அங்கத்தினர் 500 பெயர் ஆனார்கள். 500 ஆவது அங்கத்தினர் ஹைகோர்ட்டில் அட்வகேட் ஜெனரலாயிருந்த, எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள். அவர் எங்கள் சபையின் வழக்கப்படி, இவ் வருஷம் நவம்பர் மாசம் 15-ம் தேதி ஒரு பெரும் விருந்தளித்தார். அதில் சபையின் சரித்திரத்தைச் சார்ந்த துணுக்குகளை (Tit-bits) யெல்லாம் சேர்த்து ஒரு காட்சியாகக் காட்டினேன். சபை ஆரம்பித்து, 17 வருஷங்கள் பொறுத்துத்தான் 500 அங்கத்தினர்களானோம்.

மேற் கூறிய இரண்டு நாடகங்களன்றி, நான் இவ் வருஷம் தசராவின் முதல் நாள் ஆட வேண்டியதற்காக, "காமோத்யானம்" (The Garden of Love) என்கிற ஒரு சிறு நாடிகையை எழுதினேன். அதை இன்னும் நான் அச்சிடவில்லை. இவ் வருஷம் அதையும் நான் பிறகு எழுதியுள்ள இன்னும் சில சிறு காட்சிகளையும் சேர்த்து, "விடுதிப் புஷ்பங்கள்" என்று பெயர் வைத்து அச்சிடலாமென்றிருக்கிறேன், அன்றியும் 'சபாபதி முதலியார், ஒரு வருடம் பொறுத்து' என்று ஒரு காட்சி தசராவுக்காக எழுதினேன். இதையும் சென்ற வருஷம் நடத்திய 'சபாபதி காட்சியையும் சேர்த்து "சபாபதி" முதல் பாகம் என்று அச்சிட்டிருக்கிறேன்.

# 19 ஆவது அத்தியாயம்

இனி 1909 ஆம் வருஷத்தில் நடந்த விஷயங்களைப் பற்றி எழுதுகிறேன்.

இவ் வருஷம் எங்கள் சபை அங்கத்தினராயிருந்த பி. எஸ். துரைசாமி ஐயங்காரால் எழுதப்பட்ட 'ஜவலிதா—ரமணன்' என்னும் தமிழ் நாடகம் ஆடப்பட்டது. இது ஷேக்ஸ்பியர் மகாகவி எழுதிய, "ரோமியோ—ஜூலியைட்" (Romeo-Juliet) என்னும் நாடகத்தின் மொழி பெயர்ப்பாம். இவர் இதற்கப்புறம் யுத்த லோலன், பிரஹ்லாதன், வள்ளித்திருமணம், முதலிய நாடகங்களைத் தமிழில் எழுதியிருக்கிறார். இவர் நாடகங்களை எழுதுவது மன்றி, அவைகளில் நடிக்கும் திறமையும் வாய்ந்தவர். அப்படியிருந்தும் தனது நாடகத்தில் என்னைக் கதாநாயகனுன ரமணன் (Romeo) பாத்திரத்தை எடுத்துக் கொள்ளும்படிக் கேட்க, நானும் இசைந்தேன். அதன்பேரில் ஜவலிதை (Juliet) பாத்திரம் எனதாருயிர் நண்பர் சி. ரங்கவடிவேலுவுக்கே கொடுக்கப் பட்டது. இந் நாடகம் நாங்கள் விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடித்த பொழுது, முக்கியமான ஒரு சமாசாரம்தான் எனக்கு ஞாபகமிருக்கிறது. சாதாரணமாக நான் மேடையின்மீது தோன்றும்பொழுது ஏதாவதிருந்த முக்கியமான சந்தர்ப்பங்களில் தான் சபையோர் கரகோஷம் செய்வார்கள்; இந்நாடகத்தில் நான் முதற் காட்சியில் தோன்றியவுடன் கரகோஷம் செய்யவே, 'இதென்ன விந்தை! இப்படி எப்பொழுதும் நடந்ததில்லையே! இதற்குக் காரணம் என்ன' வென்று எனது நண்பர்களைக் கேட்க, அவர்கள், "இதுவரையில் மற்றவர்களுடைய நாடகங்களில் ஆடுவதில்லை யென்று தீர்மானித்த நீ இதில் அத் தீர்மானத்தினின்றும் பிறழும்படி நேரிட்டதே எனக்கைகொட்டினேம்!' என்று தெரிவித்தார்கள். இந்தத் தர்மசங்கட சந்தர்ப்பத்திற்கு நான் என்ன சொல்வது? நான் அவ்வாறு மற்றவர்களுடைய நாடகங்களில் ஆடக்கூடாது என்று எப்பொழுதும் தீர்மானம் செய்துகொண்டவனல்லன். எனதுயிர் நண்பர் என்னுடனன்றி

மற்றவர்களுடன் நாடகமேடையில் ஆடுவதற்குத் தனக்கு இஷ்டமில்லை என்று எனக்குத் தெரிவித்த பிறகு, நானும் அவருடனன்றி மற்றவர்களுடன் அரங்கில் ஆடுவதில்லையென்று தீர்மானித்த தன்றி வேறொன்றும் கிடையாது. ஆகவே, இதற்குமுன் எங்கள் சபையோரால் ஆடப்பட்ட மற்றவர்கள் எழுதிய இரண்டொரு நாடகங்களில், நாங்களிருவரும் ஒன்றாய் ஆடக்கூடிய தக்க பாத்திரங்கள் கிடைக்காமையால், அப்படிச் செய்யவில்லை. இது தான் உண்மை. இது இப்படியிருக்க நான் இதரர்களுடைய நாடகங்களில் ஆடக்கூடாது என்கிற கொள்கையுடையவனாயிருந்தேன் என்று வீண் அபவாதம் மற்றவர்களுடைய மனதில் இருந்தால் இதற்கு நான் என் செய்வது? இதற்குப்பிறகு நானும் என்னுயிர் நண்பரும் மற்ற நூலாசிரியர்கள் எழுதிய நாடகங்களில் பலவற்றை ஆடியிருக்கிறோம். உலகில் இத்தகைய தவறான எண்ணங்கள் உண்டாவதைத் தடுக்க யாரால் முடியும்?

இவ்வருஷம் நடந்த மற்றொரு கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், எங்கள் சபையார் ராஜப்பிரதிநிதி (Viceroy) லார்ட் மின்டோ (Lord Minto) சென்னைக்கு விஜயம் செய்த பொழுது, காஸ்மாபாலிடன் கிளப்பில், அவருக்குப் பெரும் விருந்தொன்று அளித்த காலையில் அவர் முன்னிலையில் நடித்ததேயாம். இராஜப்பிரதிநிதிக்கு மேற்சொன்ன கிளப்பார் உபசரணை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தவுடன், எங்கள் குடும்ப சிநேகிதராகிய காலஞ்சென்ற பிட்டி தியாகராய செட்டியார் அவர்கள், என்னை அழைத்து "சுகுண விலாச சபையார் ஒரு மணி நேரத்திற்கு ஏதாவது காட்சிகள் ஆடவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நீ செய்து விடு" என்று சொன்னார். 'ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டு அநேகம் ஆக்டர்கள் வரக்கூடியதாகிய 'மனோஹரன்' நாடகத்தில் முதல் அங்கம் நான்காவது காட்சியை ஆடத் தீர்மானித்தோம்.

அன்றியும் ஹரிச்சந்திர நாடகத்திலிருந்து சில தோற்றக் காட்சிகளைக் காட்ட வேண்டும் என்று நிச்சயித்தோம். எல்லாம் தீர்மானித்தான பிறகு நாடகத்திற்கு இரண்டு நாள் முன்னதாக பிட்டி

தியாகராய செட்டியார் என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினர்; என்னவென்று போய்க் கேட்க "ரங்கவடிவேலுக்கு நாட்டியம் ஆடத் தெரியுமாமே, எப்படியாவது அதையும் காண்பிக்கவேண்டும்!" என்று வற்புறுத்தினர். காட்சியின் மத்தியில் அது வர இடமில்லையே என்று நான் எவ்வளவு ஆட்சேபித்தும் "அதெல்லாம் உதவாது. எப்படியாவது அதை நீ ஏற்பாடு செய்து தான் தீரவேண்டும்" என்று பிடிவாதம் பிடித்தார். அதன்பேரில் சபைக்கு வந்து எனதுயிர் நண்பனுடன் கலந்து பேசியபொழுது, அவரும் அவர்களுக்கெதிரில் ஆடவேண்டுமென்று இச்சை கொண்டிருப்பதை அறிந்தேன். அதன் மீது, சரியென்று ஒப்புக்கொண்டு, நான் எழுதிய நாடகத்திலில்லாத ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் காட்சியின் முடிவில் அவரை நாட்டியம் செய்யும் படி ஏற்பாடு செய்தேன். ஏறக்குறைய ஆறு மாதம் கஷ்டப்பட்டு, நாட்டியமாடுவதை எனதுயிர் நண்பர் கற்றுக்கொண்டு, இரண்டொரு முறை சபையில் ஆடியதைப் பார்த்தவர்களெல்லாம் மெச்சியது, எப்படியோ பிட்டி தியாகராய செட்டியார் செவிக்கு எட்டி இவ்வாறு அவர் பலாத்காரம் செய்யும்படி நேரிட்டது போலும்.

அன்றைத்தினம் காட்சியின் கடைசியில் எனதுயிர் நண்பர் நாட்டியம் ஆடியது எல்லோருடைய மனதையும் கவர்ந்ததெனச் சொல்வது அதிகமாகாது. இவருக்கு முன் ஆமெடூர் (Amateur) நாடகமேடையில் இப்பரத சாஸ்திரம் கற்றவர்கள் இல்லையென்றே சொல்லவேண்டும். ஆடவன் ஸ்திரீ வேஷம் பூணுவதே கடினம்; அதுவும் ஸ்திரீயைப் போல் நர்த்தனம் செய்வதென்றால் அதிலும் கடினம்; எனதுயிர் நண்பர் இக்கலையைக்கற்க ஆரம்பித்தபோது, சில மாதங்கள், தான் தக்க தேர்ச்சியடையும் வரையில், எனக்குக் கூடத்தெரியாதபடி ரகசியமாய் வைத்திருந்தார். பிறகு தக்கபடிக் கற்றபின் என்னை மாத்திரம் தனியாக வரவழைத்து, ஆடிக் காண்பித்தார். நான் மிகவும் நன்றாயிருக்கிறதென ஒப்புக்கொண்ட பின்பு தான் எங்கள் சபையில் ஆட ஆரம்பித்தார். இவருக்குப் பிறகு, எனது நண்பர்களில் அனேகர் இக்கடினமான பரதசாஸ்திரத்தைக் கற்று ஆடியதை நான் பார்த்திருக்கிறேன். ஆயினும் என் உள்ளத்து உண்மை உணர்ச்சியை நான் உரைக்கவேண்டின்,

அவரைப்போல், விநயத்துடன் அழகுற ஆடும்படியானவர்களைக் கண்டிலன் என்றே கூறவேண்டும். இச்சபையில் இவருக்குச் சற்று அருகில் வந்தவர், கே. நாகரத்தினம் ஐயரே என்பது என் துணிபு. நாட்டியம் ஆடுவதென்றால் அதற்குரிய அங்கலட்சணங்களெல்லாம் அமைந்திருக்க வேண்டும்; தேகம் அதிஸ்தூலமாயுமிருக்கக் கூடாது, அதிக மெலிவடைந்துமிருக்கலாகாது; அதிக உயரமாயும் இருக்கலாகாது, அதிகக் குட்டையாயுமிருக்கலாகாது; முகத்தில் மிகுந்த சௌந்தர்யமிருக்க வேண்டும்; ஹஸ்தங்கள் பிடிப்பதில் அழகுறச் செய்ய வேண்டும்; பாதங்களினால் தாளம் போடும்போது துமுக்குவது போலிருக்கலாகாது; இவைகளெல்லாம் ஒருங்கு சேர்வது கடினம் போனுர்.

எனதுயிர் நண்பர் அன்று ஆடியதைக் கண்ட அநேகர், கவர்னர் ஜெனரலுக்காக, அதை சீக்கிரம் முடிக்க வேண்டி வந்தது, அதை இன்னும் சவிஸ்தாரமாகக்காணவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, தியாகராய செட்டியார், மறு நாளும் கிளப்பில் ஏற்படுத்திய ரங்கத்தில், இதைப்பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அதன் பேரில், "மாதர் மகாஜன சபா" என்று ஒரு சிறு காட்சியை ஏற்படுத்தி, அதில் சி. ரங்கவடிவேலு மறுநாளும் நர்த்தனம் செய்யும்படி, ஏற்படுத்தினோம். அதனுடன் கூட "சபாபதி" யிலிருந்து ஒரு காட்சியும் ஆடினோம்.

முன்னாள் இங்கு நான் மனோஹரனாக நடித்த பொழுது நேரிட்ட ஒரு அசந்தர்ப்பத்தை எழுத விரும்புகிறேன். இக் காட்சியில் நான் விரைந்து வரவேண்டி யிருக்கிறது. அப்படி விரைந்து வரும்பொழுது, நான் அணிந்திருந்த பீதாம்பரத்தின் மூல கச்சம் அவிழ்ந்து விட்டது. அதை அறிந்தவனாய் ஒரு கரத்தால் கீழே அவிழ்ந்து விழாமலிருக்க அதைப்பிடித்துக்கொண்டு, அங்கிருந்த ஆசனத்தில் பத்மாவதிக்கும் விஜையாளுக்கும் இடையில் உட்கார்ந்து கொண்டேன். பிறகு நான் விஜயாளுடன் எழுந்திருந்து பேசவேண்டிய வார்த்தைகளை எல்லாம் அவ்விடமே உட்கார்ந்து பேசி முடித்தேன். இதைக் கண்டு கோபித்து எனதுயிர் நண்பர் "இதென்ன அங்கிருந்தே பேசுகிறீர்களே!" என்று மெல்ல கேட்

டார். 'பிறகு அதற்கு பதில் சொல்லுகிறேன், காட்சி முடியட்டும்,' என்று சமாதானம் சொல்லி காட்சியெல்லாம் ஆடி முடிந்தவுடன், நான் உட்கார்ந்தே பேசியதின் காரணத்தை அவருக்கும், என்னுடன் நடித்த மற்றவர்களுக்கும் எடுத்துக் கூற, எல்லோரும் நகைத்தனர். இதை நான் இங்கெடுத்தெழுதியதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. இம்மாதிரியான அசந்தர்ப்பங்கள் சில முறை நாடகமேடையில் நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். ஒரு முறை எங்கள் சபையிலேயே ஒரு ஆக்டருடைய ஆடையவ்வளவும் நெகிழ்ந்து கீழே விழுந்து விட்டது! தெய்வாதீனமாக, அவர் உள்ளே சிறு நிஜார் ஒன்று அணிந்திருந்தார்! ஆகவே ஆக்டர்களெல்லாம் இதைக்கவனித்து, வேகமாக ஏதாவது நடிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தால் அச்சந்தர்ப்பங்களில் தாங்கள் அணிந்திருக்கும் ஆடை அலங்கோலமாகாதபடி, முன்பே அதைச் சரிபடுத்திக்கொள்ள வேண்டும் என்பது அதி அவசியம். அது முதல் இது வரையில் நான் மனோஹரன் முதலிய வேஷங்கள் தரிக்கும் போதெல்லாம், நாடக ஆரம்பத்திற்கு முன், கீழே விழுந்தோ ஓடியோ ஆடை அலங்கோலமாகப் போகத்தக்க சந்தர்ப்பமிருந்தால், அதைத்திரைக்குப் பின் நடித்துப் பார்த்து, நான் அணியும் உடை நெகிழாமலிருக்கிறதா என்று பார்த்துக் கொள்வது வழக்கமாய் விட்டது; எனது இளய நண்பர்கள் இதைக்கொஞ்சம் கவனிப்பார்களென்றே இதை எழுதலானேன்.

இனி 1910-ஆம் வருஷம் எங்கள் சபையில் நிகழ்ந்த முக்கியக் காரியங்களை யெழுதுகிறேன். இவ்வருஷம் எங்கள் சபையோரால் விக்டோரியா பப்ளிக் ஹாலுக்குக் கொடுக்கப்பட்ட, காலஞ்சென்ற மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியின் படமானது சென்னை கவர்னர், சர் ஆர்தர்லாலி (Sir Arthur Lawley) என்பவரால் திறக்கப்பட்டது. அச்சமயம் வேதம் வெங்கடாசல ஐயரவர்கள் எழுதிய ராணியின் சொப்பனம் என்னும் ஒரு சிறு நாடிகை ஆடப்பட்டது; சில தோற்றக் காட்சிகளையும் காட்டினோம். கவர்னர் அவர்கள் சபையை மிகவும் சிலாகித்துப் பேசினார்.

இவ்வருஷம் சபையின் ஆரம்ப முதல் கண்டக்டராயிருந்த வி. திருமலைபிள்ளையவர்கள், வயது மேலிட்டபடியால் அவ்வேலை

யைக் கவனிக்கக்கூடாமற் போகவே, பொதுவாகக் கண்டக்டர் என்கிற பெயரை மாற்றி, தமிழ் கண்டக்டர், தெலுங்கு கண்டக்டர் என்று இரு பிரிவாக்கப்பட்டது. அதன்பேரில் பொது சபைக் கூட்டத்தில் என்னை தமிழ் கண்டக்டராக நியமித்தார்கள்.

இவ்வருஷம் ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்திற்காக விக்டோரியா பப்ளிக் ஹாலுக்குப் பின்புறம் இருக்கும், நாங்கள் டென்னிஸ் விளையாடும் இடத்தில், ஒரு சிறுமேடை ஏற்படுத்தி, அதில் ஷேக்ஸ்பியர் மஹாநாடகக் கவியின் நாடகங்களினின்றும், என்னால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட சில காட்சிகளை ஆடினோம்.

இவ்வருஷம் எங்கள் சபையின் சரித்திரத்தில் நடந்த முக்கியமான நிகழ்ச்சி யென்ன வென்றால், இதுவரையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில், மேற்குப் புறமுள்ள ஒரு சிறு அறையில் இருந்த நாங்கள், விக்டோரியா ஹாலின் கீழ்ப்பாகம் முழுவதும் வாடகைக் கெடுத்துக்கொண்டு, இப்பொழுது இருக்கும் இடத்திற்கு நாங்கள் குடிபுகுந்ததே யாம். இவ்வருஷம் செப்டம்பர் மாதம் வரையில் அவ்விடம் மர்க்கென்டைல் அண்டு மெரீன் கிளப் (Mercantile & Marine Club) என்று ஒரு கிளப் இருந்தது; அந்த கிளப் க்ஷீணித்துப்போய், அவர்களிருந்த இடத்தை ஒழித்து விட்டனர். அதன் பேரில் விக்டோரியா பப்ளிக் ஹால் டிரஸ்டிகளின் அனுமதியின் பேரில், அவ்விடத்தை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 125 வாடகைக்குப் பேசிக்கொண்டு குடிபுகுந்தோம். இப்படி நாங்கள் அவ்விடம் போகப்போகிறோம் என்கிற சங்கதியைக்கேள்வியுற்ற காலஞ்சென்ற சர் வி. சி. தேசிகாசாரியார் அவர்கள் என்னை அழைத்து, "என்ன சம்பந்த முதலியார், இது வரையில் அவ்விடமிருந்த அநேக கிளப்புகள் முன்னுக்கு வரவில்லையே! உங்கள் சபை இதுவரையில் விருத்தியடைந்து கொண்டே வந்திருக்கிறதே, நீங்கள் அவ்விடம்போனால் எப்படி யிருக்குமோ?" என்று சொன்னார். அவர் எங்கள் சபையின் நன்மையையே கோரி இவ்வாறு எச்சரித்தார் என்பதற்கு ஐயமில்லை. அதன்மீது நான், "எக்காரியத்தை நான் தொடங்கினாலும், ஸ்வாமியின் பாரம் என்று அவர்மீது பாரத்தைச் சுமத்தி ஆரம்பிக்கிறேன். அவர் எங்கள் சபையைக் காப்பாற்றுவார் என்று நம்பு

கிறேன்." என்று விடைபகர்ந்தேன். ஆயினும் நாங்கள் இவ்வாறு இடம் பெயர்ந்தது இடையூறுகள் இன்றியன்று; பல ஆட்சேபங்கள் நேரிட்டன. முக்கியமாக, இங்கு செல்வதென்றால் 125 ரூபாய் மாதம் வாடகை கொடுக்க வேண்டுமே என்பதாம். இதுவரையில் கேவலம் நாடக சபையா யிருந்ததை, ஒரு கிளப்பாக ஆக்கவேண்டியிருந்தபடியால் பில்லியர்ட்ஸ் (Billiards) முதலிய ஆட்டங்களுக்குரிய செலவையும் ஏற்கவேண்டி வந்தபடியால், இதுவரையில் அங்கத்தினருக்கு மாதச்சந்தா கட்டணம் 8 அணாவாக விருந்ததை ஒரு ரூபாயாக அதிகப்படுத்த வேண்டியதாயிற்று. இதற்காகச் சபையின் பொது ஜனக்கூட்டம் கூடி அவர்கள் சம்மதியைப்பெற வேண்டியதாயிருந்தது. இதற்குப் பலர் ஆட்சேபித்தனர். அவர்களுடைய ஆட்சேபணையை யெல்லாம், எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீநிவாச ஐயங்காரும் நானுமாக, மெல்லச் சமாதானப்படுத்தினோம் ஆயினும் அச்சமயம் ஆட்சேபித்தவர்களுள், ஒருவராகிய, பி. எஸ். துரைசாமி ஐயங்கார் அவர்கள் கூறிய வார்த்தை மாத்திரம் எனக்கு மனதில் மிகவும் உறுத்தியது. அதை இங்கு நான் எழுதக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் அன்றைத் தினம் பொதுக் கூட்டத்தில் கூறிய வார்த்தைகளாவது, "இதுவரையில் நாடக சபையா யிருந்த இதை ஒரு கிளப்பாக மாற்றுவீர்களானால், பிறகு, வெறுங் கிளப்பாக மாறிவிடுமே யொழிய, நாடக சபை என்கிற பெயர் அழிந்துவிடும், இப்பொழுதே சொன்னேன்!' என்பதேயாம். இதை எனது பழய நண்பர்களும் நானும் இந்த இருபத்தொரு வருடங்களாகக் கவனித்து அப்படிக் கெடுதி ஒன்றும் நேரிடா வண்ணம், எங்கள் சபையைக் காத்துவந்தோம். இனிச் சபையின் பாரத்தைத் தோள்மீது ஏற்றுக்கொண்ட எங்கள் சபையின் இளைய அங்கத்தினரும், அப்படியே, சுகுண விலாச சபை, முக்கியமாக நாடக சபை யென்னும் பெயர் அழியாது நீடூழி காலம் காப்பார்களாக!

இவ்வாறு சபையை ஒரு கிளப்பாக மாற்ற வேண்டியதற்காக, பில்லியர்ட் டேபில் முதலிய செலவுகளன்றி, மின்சார விளக்குகள் போடுவதற்காகவும், நாற்காலிகள் முதலிய சாமான்கள் வாங்குவதற்காகவும், அதிகசெலவு பிடித்த போதிலும், இவ்வருஷம் எங்கள் சபைக்கு 191 அங்கத்தினர் புதிதாகச் சேர்ந்தபடியால் சபைக்குப்

பொருள் நஷ்டமின்றிச் சமாளித்தோம். மாதாந்தரக் கட்டணத்தை அதிகப்படுத்தினால் எங்கு அங்கத்தினர் குறைந்து போவார்களோ என்று நான் பயந்திருந்ததற்கு இது வரையில் எந்தவருஷமும் இல்லாதபடி, அதிகமாகப் புதிய அங்கத்தினர்கள் சேர்ந்தனர்! இது எங்கள் சபையின் அதிர்ஷ்டமென்றேனும், தெய்வ கடாட்சமென்றேனும், அவரவர்கள் இஷ்டப்படி எண்ணிக்கொள்ளலாம். இது முதல் எல்லா விஷயங்களிலும் சபையானது அபிவிர்த்தியடைய ஆரம்பித்தது என்றே கூறவேண்டும். ஒரு டென்னிஸ் கோர்ட்டாயிருந்ததை, இரண்டாக்கி, பிறகு மூன்றும் ஆக்கினோம்; இது முதல் வருஷத்திற்கு இருபத்தைந்து முப்பது நாடகங்கள் கொடுக்கத் தலைப்பட்டோம். இது முதல் சபாதினக் கொண்டாட்டமும், தசராக்கொண்டாட்டமும் மிகவும் பலப்பட்டன; சபை தினக் கொண்டாட்டத்தைச்சார்ந்த வனபோஜனத்திற்கு (Picnic) இவ்வருஷம் 200 பெயர் வந்திருந்தனர். தசராக் கொண்டாட்டத்தில், விக்டோரியா ஹால் கீழ்ப்பாகம் முழுவதும் சிற்றுண்டிக்காக ஏற்படுத்தி, மேல் மாடியில் நாடகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்குமிடத்து, இவ்வருஷம், எங்கள் சபையின் சரித்திரத்தில் ஒரு மிகவும் முக்கியமான தென்றே கருதல் வேண்டும்.

இவ்வருஷம் நான் எழுதிய புதிய நாடகம் "பொன் விலங்குகள்" என்பதாம். இதுதான் நான் முதல் முதல் எழுதிய சோஷல் நாடகம். (Social drama) சோஷல் டிராமா, என்பதைச் சரியாகத் தமிழ்ப்படுத்த அசக்தனாயிருக்கிறேன்; ஒருவாறு ஜன சமூக நாடகம் அல்லது பொதுஜன நாடகம் என்று கூறலாம்; ஆயினும் அவ்விரண்டு பதங்களும் எனக்குத் திருப்திகரமாயில்லை. இதை வாசிக்கும் நண்பர் யாராவது இந்தச் சோஷல் என்கிற பதத்திற்குச் சரியான தமிழ்ப்பதம் கூறுவார்களாயின் அவர்களுக்கு நன்றியறிதலுடையவனா யிருப்பேன். இத்தகைய நாடகங்கள், ராஜாக்கள் தேவதைகள் முதலியவர்களைப் பற்றிக்கூறாது, பொது ஜனங்கள் அல்லது தற்கால ஜனங்களைப்பற்றிக் கூறுவதாகும். இதை நான் எழுத நேரிட்ட காரணம் அடியில் வருமாறு; சென்ற வருஷத்தின் கடைசியில், எங்கள் சபையார் தற்காலத் தமிழ் நாடக மேடையில்,

இப்படிப்பட்ட நாடகங்களில்லாத குறையைத் தீர்க்கவேண்டு மென்று தீர்மானித்து இத்தகைய நாடகங்களுள் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு தமிழ் நாடகத்திற்கு ஒரு பொன் பதக்கமும் (Medal) தெலுங்கு நாடகத்திற்கு ஒருபொன் பதக்கமும் அளிப்பதாக விளம் பரம் செய்தனர். அதற்காகச் சில நிபந்தனைகளும் ஏற்படுத்தினர். அவையாவன: கதை புதிதாக இருக்கவேண்டும்; தற்காலத்திய ஜனசமூகத்தைச் சேர்ந்ததாயிருக்க வேண்டும்; நாடகாசாரியன் பரி சோதகர்கள் தீர்மானிக்கும் வரையில் தன் பெயரை வெளியிடக் கூடாது; மற்றவர்கள் உதவியைக்கொண்டு எழுதலாகாது, தானாக எழுதியதாயிருக்க வேண்டும், என்பவையாம். சபையிலுள்ள அங் கத்தினர் மாத்திரமின்றி, மற்றவர்களும் இதற்குப் பிரயத்னப்பட லாம் என்றும் தெரிவித்தனர். அதன்மீது தான் இப்'பொன் விலங் குகள்' என்னும் நாடகத்தை எழுதியனுப்பினேன்.

எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில் இதனுடன் மொத்தம் 11 நாடகங்கள் அனுப்பப்பட்டன. இவைகளையெல்லாம் பரீட் சித்து எதற்குப் பரிசு கொடுக்கவேண்டுமென்று தீர்மானிப்பதற்காக, காலஞ்சென்ற பச்சையப்பன் கலாசாலையில் தமிழ் வித்வானாக இருந்த, தி. செல்வகேசவராய முதலியார் எம். ஏ. ஒன்று, திவான் பகதூர் மாசிலாமணிப் பிள்ளை அவர்கள் இரண்டு, திவான்பகதூர் எம். எஸ். பவாநந்தம்பிள்ளை அவர்கள் மூன்று, இவர்களை ஏற்படுத் தினார்கள். இம்மூவரும், அப்பதினொரு நாடகங்களையும் பரிசோ தித்துப் பார்த்து, "பொன் விலங்குகள்" என்னும் நாடகத்திற்குத் தான் பரிசளிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் தீர்மானித்த பிறகு தான், இதை எழுதினவன் நான் என்று, அவர் கள் உட்பட, எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டது; இம்மாதிரியே தெலுங்கில், வே. வெங்கடேச சாஸ்திரியார் எழுதிய, "உபயப்பிரஷ் டம்" என்னும் தெலுங்கு நாடகத்திற்கு, தெலுங்குப் பரிசு கொடுக் கப்பட்டது.

இப் "பொன் விலங்குகள்" என்னும் நாடகத்தின் கதையைப் பற்றி நான் எழுதவேண்டிய அவசியமில்லை; என் நண்பர்கள் பெரும் பாலும் இதைப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இதில்

முக்கியமான அம்சம் என்னவென்றால், இதில் பாட்டென்பதே கிடையாது. கதா நாயகியாகிய பங்கஜவல்லி, சங்கீதமாகப் பாடும் ஒரு விருத்தம் தவிர, சாதாரணமாக நாடகங்களில் பாடும் பாட்டுகள் ஒன்றேனும் கிடையாது. இதனால், இதை மேடையில் நடித்தால் ஜனங்களுக்குச் சந்தோஷத்தையுண்டு பண்ணுமோ என்று எங்கள் அங்கத்தினர் பலர் ஐயமுற்றனர். ஆயினும் இவ்வருஷம் டிசம்பர் மாசம் 4-ந் தேதி இதை ஆடினபொழுது, அந்த ஐயமெல்லாம் நீங்கியது. விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஜனங்கள் நிறைந்திருந்தனர். எனக்கு ஞாபகமிருக்கிறபடிச் சற்றேறக் குறைய நானூறு ரூபாய் வசூலாயிற்று; வசூல் அதிகமானது பெரிதல்ல, வந்தவர்கள் எல்லாம் நன்றாயிருக்கிறதெனக் கூறினது தான் எனக்கு முக்கியம். இதைப்பற்றி நானும் கொஞ்சம் பயந்து கொண்டுதானிருந்தேன்; ஏனெனில், தொன்று தொட்டு இந்நாட்டில் நாடகம் என்றால், பாட்டுகளில்லாமல் கிடையாது. பூர்வகாலத்தில் நாடகம் முழுவதும், வெறும் பாட்டுகளாகவேயிருந்ததென்பதிற் கையமில்லை; பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, வசனங்கள் நுழைந்த போதிலும், பெரும்பாலும் தற்காலத்திய நாடகங்களும் பாட்டு மயமாயிருக்கின்றனவென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. சங்கீதமில்லாத நாடகமென்றால் சந்திரனில்லாத வானம் என்று எங்கு வெறுக்கிறார்களோ என்று நானும் பயந்தவனே. ஆயினும் அன்றைத் தினம் வந்திருந்த திரளான ஜனங்கள், ஆதிமுதல் அந்தம் வரையில் ஆங்காங்கு கரகோஷத்துடன் நாடகக் கதையைக் கவனித்து வந்தது எனக்கு அப்பயத்தைப்போக்கி, தென் இந்தியாவிலும், ஐரோப்பா கண்டத்திலிருப்பது போல், இத்தகைய நாடகங்களுக்கு இடமுண்டு என்று எண்ணும்படிச் செய்தது. இந்த ஊக்கத்தைக் கொண்டு தான், பிறகு நான், 'விஜயரங்கம்', 'தாசிப்பெண்,' 'உண்மையான சகோதரன்,' முதலிய ஜனசமூக நாடகங்களை இயற்றியுள்ளேன். ஆயினும் நாடகம் என்றால் சங்கீதம் அதற்கு இன்றியமையாதது என்னும் எண்ணம், நமது தென் இந்தியாவில் அற்றுப் போய் விட்டது என்று நான் சொல்லவில்லை. அநேக நூற்றாண்டுகளாய் வேரூன்றிய எண்ணத்தை அத்தனை எளிதில் மாற்ற எவருக்கும் ஆற்றல் கிடையாது என்று நான் ஒப்புக்கொள்ள வேண்டிய

வனே. பாமர ஜனங்கள் இன்றும் நாடகம் பார்க்கப் போனால், சங்கீதத்தையே கவனிக்கின்றனர் என்பது திண்ணம். இருந்த போதிலும், கற்றறிந்தவர்கள், எந்த நாடகத்திற்கும் சங்கீதம் இருந்துதான் தீரவேண்டும் என்னும் கொள்கையினின்றும் சிறிது மாறியிருக்கின்றனர் என்று உறுதியாய்க் கூறலாம். இவ்விஷயத்தில், இதை வாசிக்கும் நாடகப் பிரியர்களாகிய எனது நண்பர்கள் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. ஐரோப்பா முதலிய கண்டங்களில் நாடகங்களில் சங்கீதமென்பதில்லாமற் போகவில்லை. ஆயினும் அவ்விடமெல்லாம் நாடகங்கள் முக்கியமாக இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன; டிராமா பிராபர், (Drama proper) ஆபெரா (Opera) என்று இருவகை. முதற் சொல்லப்பட்டதில் சங்கீதமே கிடையாது. இரண்டாவது பிரிவினில் சங்கீதம் முற்பட்டதாம்; வசனங்கள் இங்கும் அங்குமாக, ஏதோ கொஞ்சம் இருக்கும். நம்முடைய தேசத்திலும் நாடகங்கள் இவ்வாறு பிரிக்கப்படவேண்டு மென்பது என்னுடைய கருத்து. புராண சம்பந்தமான 'நந்தனார் சரித்திரம்,' 'ராமதாஸ் சரித்திரம்,' 'அரிச்சந்திர நாடகம்' முதலிய நாடகங்களில் சங்கீதத்திற்கு வேண்டிய அளவு இடங்களிருக்கலாம். ஆயினும் தற்காலத்திய ஜன சமூக நாடகங்களில் சங்கீதமே இல்லாமலிருக்கவேண்டும் என்பது தான் என் துணிவு. இந்த எண்ணமானது கைகூட, இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும். இருந்த போதிலும், எனதாயுளில் இது ஆரம்பிக்கப்பட்டதே என்று ஈசனைப் போற்றுகிறேன்.

இந் நாடகத்தை எங்கள் சபையார் நடித்தபொழுது எனதாருயிர் நண்பர் ரங்கவடிவேலு பங்கஜவல்லியாகிய கதா நாயகியாக மிகவும், நன்றாக நடித்தார். நான் கதா நாயகனான ராமசந்திரன் வேடம்பூண்டேன். நான் ராமசந்திரனாக நடித்தபொழுது நேரிட்ட ஒரு சந்தர்ப்பத்தை எனது நண்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ராமசந்திரனாகிய கதாநாயகன் ஒரு வயித்தியன். அவன் க்ஷயத்திற்காக ஒரு மருந்தைக்கண்டு பிடித்திருந்தான். அதை அவன் சிறு வயதில் மணந்து பிறகு மரணமடைந்ததாக நினைத்திருந்த, அவனது மனைவி பங்கஜவல்லி, அப்பிரிவாற்றாமையே முக்கிய காரணமாக நேரிட்ட, க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட பொழுது,

பங்கஜவல்லிக்கு அம் மருந்தைக் கொடுத்துச் சிகிச்சை செய்கிறான் என்பது கதையின் ஒரு பாகம். இதை நான் மேடையின்மீது தக்கபடி நடித்துக் காட்ட வேண்டி, வயித்தியப் பரீட்சையில் தேறி வயித்தியர்களாயிருக்கும் எனது சில நண்பர்களிடம் சென்று, க்ஷய ரோகம் பிடித்த ஒரு நோயாளியை—அதிலும் ஒரு பால்ய ஸ்திரீயை—எப்படிப் பரிசோதிப்பது?—நாடியை எப்படிப் பார்ப்பது? ஹிருதயத்தை எப்படிக் கவனிப்பது? ஸ்வாசாசயத்தை எப்படிப் பரீட்சிப்பது? முதலிய எல்லா விவரங்களையும் நன்கு கற்றேன். பிறகு மேடையின்மீது அந்தக்காட்சி வந்தபொழுது, அதன்படியே, வைத்தியனாக நோயாளியைப் பரிசோதித்தேன். நாம் எல்லாம் சரியாகச்செய்துவிட்டோம் என்று கொஞ்சம் கர்வப்பட்டேன் என்றே நான் சொல்லவேண்டும். ஏனெனில், வந்திருந்தவர்களெல்லாம் இக்காட்சியானது மிகவும் நன்றாக நடிக்கப்பட்டதெனக் கரகோஷம் செய்தனரன்றோ? ஆயினும் ஒரு தப்பிதம் செய்தேன் என்பதை நாடக முடிவிற் கண்டேன். அக்காலத்தில், எங்கள் சபையார் தமிழ் நாடகங்கள் போடும்போதெல்லாம் ஏறக்குறையத் தவறாமல் எல்லாவற்றிற்கும் வந்திருந்த காலஞ்சென்ற டாக்டர் நாயர் என்பவர் (இவர் இங்கிலாந்து தேசம் போய் எம். டி. பட்டம்பெற்ற பிரபல வயித்தியர் என்பதை இதை வாசிப்பவர்களுக்கு நான் கூறவேண்டியதில்லை) நாடகம் முடிந்தவுடன் மேடைக்குள் வந்து ரங்கவடிவேலுவையும் என்னையும் ஏதோ கொஞ்சம் சிலாகித்துப் பேசிவிட்டு, "ஆயினும் சம்பந்தம்! ஒரு தப்பிதம் செய்தாய்!" என்றார்.

என்னவென்று நான் வினவ, "எந்த வயித்தியனாவது தர்மாமிடரை (Thermometer—ஜுரம்பார்க்கும் கருவி) நோயாளியின் நாவில் வைத்து, பிறகு அதனை எடுத்து, கழுவாமல், அதன் உறையில் போட்டதைப் பார்த்திருக்கிறாயா? சாதாரண நோயாளியாயிருந்தாலே பெரும் தப்பிதமாம். அதிலும் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட நோயாளி!" என்று பதில் உரைத்தார். நாங்களிருவரும் சம்பாஷித்தது ஆங்கிலத்தில்; இங்கு அதைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறேன். அதன்மீது வயித்தியர்கள் முறைப்படி மிகவும் நன்றாய் ஆடிவிட்டோம் என்கிற கர்வம் அடங்கினவனாய், தலைவணங்கி என் தப்பிதத்தை ஒப்புக்கொண்டு, அது முதல் இந் நாட

கத்தில் நான் நடிக்கும் பொழுதெல்லாம் இந்தத் தப்பிதம் செய்யாதபடி நடந்து வருகிறேன். நாடகமேடையில் நடிக்கவேண்டும் என்று விரும்பும் என் இளைய நண்பர்களுக்கு இதனால் நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், ஏதாவது வேடம் பூண்டால் அதற்குரிய விஷயங்கள், எவ்வளவு அற்பமானதாயிருந்தபோதிலும், கவனிக்கவேண்டுமென்பதே. இது ஒரு சிறு விஷயம், இதை யார் கவனிக்கப்போகிறார்கள்? என்று கருதலாகாது. அதை அறிந்த ஒரு புத்திமான் சபையில் வந்திருக்கலாம்; அவன் கண்ணுக்கு அக்குற்றம் எப்படியும் வெளிப்படையாகும்.

இந்நாடகத்தில் எனது பால்ய நண்பர், வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார், சாமிநாதனை நடித்தார். அதை அவருக்கென்றே எழுதினேன். ஆயினும் அதை நடிப்பது அவருக்குக் கஷ்டமாயிருந்தது. இதற்குக் காரணம் அவர் ஞாபகசக்தி கொஞ்சம் குறைவாக இருந்ததே யன்றி வேறொன்றுமில்லை. பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பொழுதே அவருக்கு எதையாவது குருட்டுப்பாடம் செய்வதென்றால் கஷ்டமாயிருந்தது. நடு வயதில் தமிழில் குருட்டுப்பாடம் செய்வதென்றால் அவருக்குப் பகீரதப் பிரயத்னம்தான்! அன்றியும் தமிழ் நாடக மேடையையேறி அறியாதவர் இதுவரையில்; ஆகவே மிகவும் கூச்சப்பட்டார். ஆயினும் நாடக தினம், மிகவும் நன்றாக நடித்தார். இதன் பிறகு இரண்டொரு முறை ஆங்கிலத்தில் இவர் நடித்தபோதிலும் இவர் தமிழ் நாடகத்தில் நடித்தது இது தான் முதன் முறையும் கடைசி முறையுமாம். இவருக்குத் தெய்வ கடாட்சத்தினால் சென்ற வருஷம் ஷஷ்டி பூர்த்தியும் ஆகிவிட்டது. இனி இவர் நாடகமேடையில் தோன்றுவது மிகவும் அபூர்வமாம். மறுபடியும் இவர் நாடகமேடை ஏறுவாராயின், எங்கள் சபையும் நானும் செய்த பெரும்பாக்கியமெனக் கொள்வேன். இவரிடம் நாடகமேடையைப் பற்றிய ஒரு பெருங்குணம் உண்டு. இவர் தானாக மேடையில் நடிக்காது காரணத்தினாலோ அவ்வளவு சக்தியில்லாதவராயிருந்த போதிலும், மற்றவர்களுக்கு இப்படி இப்படி நடிக்கவேண்டுமென்று சொல்லிக் கொடுப்பதில் சிறந்த சக்தி வாய்ந்தவர். நாற்பது வருடங்களாக நான் நாடகமேடையில் பழகினவனாயினும், இப்போதும் ஏதாவது புதிதாக நடிப்பதென்றால், அவரு

டைய புத்திமதிகளைக் கேட்பேன். 'அமலாதித்யன்' 'புத்தர்' முதலிய கடினமான நாடக பாத்திரங்களை நான் ஒத்திகை செய்த போதெல்லாம், இவர் முன்பாக நடித்துக் காட்டி, இவரது அபிப் பிராயங்களைக் கேட்டு, என்னைத் திருத்திக்கொண்டிருக்கிறேன். இவரை மற்ற ஆக்டர்கள் ஆஸ்ரயித்து இவரது புத்திமதிகளால் அபிவிருத்தி அடையாதது அவர்களுடைய துர் அதிர்ஷ்டம் என்றே நான் சொல்வேன். இவருக்கு நாடகக் கம்பெனியிலும் மற்றக் கம் பெனிகளிலும் உள்ள ஆசையினால், இவரை அண்டிக் கேட்டவர் களுக்கு, எப்பொழுதும் உதவாமற்போனதில்லை. ஆற்றில் ஜலம் ஏராளமாகவும் நிர்மலமாகவும் ஓடும் பொழுது அதை வாரி அருந் தாமற் போனால் யார் தவறு? ஆறு தானாகக் கேட்குமோ, என்னிட முள்ள ஜலத்தை நீங்கள் ஏன் அருந்தவில்லை யென்று?

இவரிடம் இன்னொரு விசேஷமுண்டு. இவருக்குச் சங்கீதம் என்பது கொஞ்சமும் தெரியாது; சங்கீதஞானம் சற்றுமில்லை, அதாவது ராகங்களைப் பகுத்தறியுஞ் சக்தி கொஞ்சமுமில்லை; ஆயி னும் நாடகமேடையில் நடிகர்கள், இப்படி இப்படிப்பாடினால் நன்றா யிருக்குமென்று மிகுந்த புத்தி சாதுர்யமாகச் சொல்லிக் கொடுக்கும் திறமை வாய்ந்தவர்; சங்கீதத்தில் நிபுணர்களுக்கும் இவர் யுக்தி சொல்லிக் கொடுத்திருக்கிறார். ஒரு உதாரணத்தை இங்கெடுத் தெழுதுகிறேன்:—நந்தனார் சரித்திரத்தில், எனது நண்பர் டாக்டர் ஸ்ரீனிவாசராகவாசாரியார், நந்தனாக நடிப்பதில் தனக்கு நிகரில்லை யென்று பெயர் பெற்றிருக்கிறார்; இவர் சங்கீதத்தில் மிகவும் பழகி தேர்ச்சிபெற்றவர்; ராகக்கியானத்திலும் தாளக்கியானத்திலும் எங்கள் சபையில் எல்லோரையும்விடச் சிறந்தவர் என்றே கூறவேண் டும். இப்படி யிருந்தும், நந்தனார் சரித்திர நாடகத்தில், "பிறவிப் பிணிதீர மருந்தொன்றுண்டு பேரின்பமன்றுளே" என்னும் பாட் டின் சரணத்தை ஒரு விதமாகப் பாடும் பொழுது, ஓரிடத்தில் நாடகத்தைப் பார்க்க வந்தவர்களெல்லாம் கரகோஷம் செய்யாத காலமில்லை; ஆயினும் அதை இப்படிப் பாகித்துப் பாடவேண்டு மென்று இவருக்குச் சொல்லிக் கொடுத்தது, எனது பால்ய நண்ப ரான வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரே. அன்றியும் ஒரு ராகமாவது இப்படிப் பாடவேண்டுமென்று தெரியாவிட்டாலும், ஏதாவது பாடி

ளுல், இந்தச்சந்தர்ப்பத்திற்கு இது தகுதியானதன்று, இது தகுதி, என்று சொல்வதில் இவருக்கு இணையானவர்களை நான் கண்டதில்லை யென்றே கூறவேண்டும். சிறு வயது முதல் நல்ல சங்கீதத்தைக் கேட்டுக் கேட்டு, சங்கீதச் செவிச் செல்வம் பெரிதும் உடையார். நான் புத்த சரித்திரத்தை நாடக ரூபமாக ஆட ஒத்திகை நடத்தின போது, அதிலுள்ள பாட்டுகளையெல்லாம் இவருக்குப் பாடிக் காட்டச் செய்து, இவர் சிலவற்றைத் திருத்திக்கொடுக்கப் பெரும் பயனை அடைந்தேன். ஏதாவது சங்கீதம் தனக்குத் திருப்திகரமா யில்லாவிட்டால், "இதென்ன, ஜஷ்டை! நன்ருயில்லை. வேறு ஏதாவதுபாடச்சொல்" என்று சொல்வார். அவர் கூறுவது சரியாகத் தானிருக்கும். இவருடைய சங்கீதத்தைப்பற்றி, இதை யெழுதும் பொழுது ஒரு சிறு விருத்தாந்தம் எனக்கு ஞாபகம் வருகிறது.

ஒருமுறை நானும் இவருமாகத் திருச்சாளுருக்கு ஒரு நண்பருடைய குமாரத்தியின் கலியாணத்திற்காகப் போயிருந்தோம். ஒரு நாள் இரவு, சாப்பிட்டுவிட்டு நாங்கள் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தபொழுது, "சம்பந்தம், எனக்கு ராகங்கள் கொஞ்சம் சொல்லிக்கொடு!" என்ருர். ஆகட்டும் என்று இசைந்து, அன்று சாயங்காலம் கச்சேரியில் வீணை தனம் வாசித்த, சஹாளு ராகம், இப்படிப்பட்டதென்று விஸ்தரித்து, என்னுலியன்ற அளவு அதைப் பாடிக் காண்பித்தேன். அதன் முக்கியமான மூர்ச்சையின்னதென்று சொல்லி, அந்த ராகத்தில் எனக்குத் தெரிந்த இரண்டொரு விருத்தங்களையும் பாடிக் காண்பித்தேன்.

பிறகு மறுநாள் நாங்கள் துயில் நீத்து எழுந்தவுடன் கலியாண வீட்டில் நலங்கிற்காகக் குழந்தைகள் பாட, அதை சஹாளுராகத்தில் நாதஸ்வரக்காரன் வாசித்தான். உடனே எனது நண்பர், "சம்பந்தம், இதென்ன ராகம்?" என்று கேட்டார்! அதன் பேரில் என்னையுமறியாதபடி எனக்கு அடங்காச் சிரிப்புண்டாக, சிரித்து ஓய்ந்தபின் "இராத்திரி யெல்லாம் ராமாயணம் கேட்டு விட்டு, ராமனுக்குச் சீதை என்ன வேண்டுமென்று கேட்பது போல இரவெல்லாம் உனக்கு சஹாளு ராகத்தைச் சொல்லிக் கொடுத்தேன்! இப்பொழுது இதென்ன ராகமென்று கேட்கிருயா?" என்று கூறி,

'ராகத்திற்கும் உனக்கும் ரொம்பதூரம். இப்பிரயத்தனத்தை விட்டுவிடு'என்றேன். இது நடந்து அனேகம் வருஷங்களாயின; இருந்தும் இப்பொழுது இதை நான் எழுதும் பொழுது, எனக்கு அடங்காச் சிரிப்பு வருகிறது!

இவ்வாறு ஒரு ராகமும் தெரியாதவர் நாடகமேடை சங்கீதத்தைப்பற்றி எவ்விதம் ஆக்டர்களுக்குப் புத்திமதி கூறத்தக்கவராயிருக்கக் கூடும் என்று இதை வாசிக்கும் சிலர் சந்தேகிக்கக் கூடும். அவர்களுக்கெல்லாம், 'இப்படிப்பட்ட விஷயங்களில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் தட்டினால் அவரிடம் சென்று சில நேரம் சம்பாஷித்துப் பாருங்கள், பிறகு அவரது அரிய குணத்தை நன்றாய் அறிவீர்கள்' என்று நான் பதில் உரைக்கக்கூடும். ஏதோ எனது பால்ய நண்பரை நான் புகழ்கிறேன் என்று நீங்கள் கருதலாகாது. புகழும் பொழுது, "நண்பனைக் காணுவிடத்தும்" என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆயினும் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரை என் நண்பனைப் பாவித்தது மன்றி, என் குருவாகவும் பாவிக்கின்றபடியால் அவரை நான் இவ்வாறு புகழ்வது தவறாகாது. நான் மேற் குறித்த பாட்டில், குருவை அவர் முன்னிலையிலும் அவர் இல்லாவிடத்தும் புகழலாம் என்றிருப்பதை, இதை வாசிப்பவர்கள் கவனிப்பார்களாக.

இப் "பொன் விலங்குகள்" என்னும் நாடகத்தில், மற்றொரு முக்கியமான பாத்திரம் பங்கஜவல்லியின் அத்தையாகிய விதவை. காலஞ்சென்ற கா. ச. தேசிகாசாரியார் பி. ஏ., பி. எல். இவ்வேடம் பூண்டு மிகவும் நன்றாக நடித்தார். நாடகமேடையின் மீது, அநேகம் "விதவை"களைப் பார்த்திருக்கிறேன். ஆயினும் இவர் அன்று நடித்ததைப்போல் அவ்வளவு நன்றாக நடித்தவர்களை இதுவரையில் கண்டிலன். இந்தத் தேசிகாச்சாரியார் பிறகு எங்கள் சபையில் வேஷம் தரிக்காதது எங்கள் சபை செய்த தௌர்ப்பாக்கியமென்றே சொல்லவேண்டும். இவரைச் சாதாரணமாக ஒரு பாத்திரம் எடுத்துக் கொள்ளச் செய்வது மிகவும் கடினம்; எடுத்துக்கொண்டாரோ, அப்பாத்திரத்திற்கு ஏற்றபடி மிகவும் சாதுர்யமாக நடிக்கும் குணம் வாய்ந்திருந்தார்.

இப்பொன்விலங்குகள் என்னும் நாடகத்தில் "பிஸ்தாக் கொட்டை ஸ்வாமிகள்" என்று ஒரு பாத்திரமுண்டு. அது நான் எழுதிய ஹாஸ்ய பாகங்களில் அதி முக்கியமானது. நகைப்பை யுண்டுபண்ணும் பாத்திரங்களுள், "சபாபதிக்குப்" பிறகு, இதைத் தான் எடுத்துக் கூறவேண்டும். இந்த பாத்திரத்தைக் காலஞ்சென்ற எனது நண்பர் டி. வி. கோபாலசாமி முதலியார் எடுத்துக்கொண் டார். அவர் மேடையின் மீது தோன்றியது முதல் கடைசி வரைக் கும் ஜனங்களுக்கு இடைவிடா நகைப்பையுண்டாக்கினர் என் பதற்கு ஐயமில்லை. இவர் இப்பாத்திரத்தை நன்றாக நடித்தமையால் இவருக்கு "பிஸ்தாக்கொட்டை சாமியார்" என்றே பெயர் வைத்து விட்டார்கள் இவரைப் பார்த்த அனைவரும். ஒருமுறை இவரே என் னிடம் அடியிற்கண்டிருக்கும் கதையைச் சொல்லியிருக்கிறார். இந் நாடகம் நடித்த சில நாட்கள் பொறுத்து, தென்இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் ஒன்றில், (தஞ்சாவூரோ என்னவோ, நன்றாய் எனக்கு ஞாபகமில்லை) இவர் இந்நாடகத்தில் பிஸ்தாக்கொட்டைச் சாமியா ராக நடித்ததைப் பார்த்திருந்த, ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த கனம் சதாசிவ ஐயரவர்கள், இவரைத் தூரத்தில் பார்த்து, "வாருங்களேயா பிஸ்தாக்கொட்டை ஸ்வாமிகளே!" என்று உறக்கக் கூப்பிட, ஸ்டேஷனில் அருகிலிருந்தவர்களெல்லாம் கொல்லென நகைத்தார்க ளாம்; தனக்கு வெட்கமாயிருந்த போதிலும், ஒரு விதத்தில் சந் தோஷப்பட்டதாயும் எனக்குத் தெரிவித்தார். பிறகு இவரது மரண பர்யந்தம் இவருக்கு இப்பெயரே வழங்கலாயிற்று. யாராவது கோபாலசாமி முதலியார் என்றால், "என்ன, பிஸ்தாக்கொட்டை ஸ்வாமிகளா?" என்பார்கள்.

நான் அதற்குத் தக்கபாத்திரனாக அல்லாவிட்டாலும், என்னி டம் மிகவும் பிரீதி வைத்திருந்த கனம் சதாசிவ ஐயர் அவர்கள், 'இந்தப் பிஸ்தாக்கொட்டை சாமியார் என்கிற பாத்திரத்தை எங்கு பிடித்தீர்?, என்று ஒருமுறைகேட்ட ஞாபகமிருக்கின்றது. ஆகவே, இப்பாத்திரத்தை அப்பெயருடன் நிர்மாணம் செய்த விவரத்தை இங்கு எழுதுகிறேன்.

1894 ஆம் வருஷம் புதுச்சேரியிலிருந்த தனவந்தரான கூனிச் சம்பட்டு லட்சுமணசாமி செட்டியார் என்பவர் தன் குடும்பத்

தார் பலருடன் காசி யாத்திரைக்குச் சென்றார். அப்பொழுது அவருக்கு அத்யந்த சிநேகிதராயிருந்த என் தகப்பனாரையும் உடன் அழைத்துச் சென்றார்; என் தகப்பனாருடன் என் தமயனார் ப. ஐயாசாமி முதலியாரும் சென்றார். யாத்திரையாக இப்படிப் புறப்பட்டவர்கள், சிப்பந்திகளுட்பட, ஏறக்குறைய நூறு பெயர் இருந்தனர். இவர்களுள் புதுச்சேரியிலிருந்து ஒரு ஸ்வாமியாரும் இருந்தனர். இத்தனை பெயரும் யாத்திரை செய்வதற்காகச் செட்டியார் அவர்கள் ஒரு பெரிய செலூன் (Saloon) வண்டியும் இதர வண்டிகளையும் சேர்த்து ஒரு ஸ்பெஷல் வண்டி (Special Train) ஆக ஏராளமான திரவியம் கொடுத்து ஏற்பாடு செய்திருந்தார். யாத்திரை செய்து கொண்டு போகும்பொழுது, காலையில் இஷ்டமான விடத்தில், இந்த ஸ்பெஷல் வண்டி நிறுத்தப் படும். எல்லோரும் இறங்கி ஸ்நானம் எல்லாம் செய்து, பிறகுதான் சமயலுக்கு ஏற்பாடு செய்வார்களாம். சமயலாக நாழிகையாகும். ஆயினும் இந்த ஸ்வாமியாருக்கு மாத்திரம் யாத்திரைக்குச் செட்டியாருடன் சென்ற சில வயோதிகர்களான விதவைகள் ஒரு பெரிய புட்டியில் பிஸ்தாக்கொட்டைகளை நறுக்கிக் கல்கண்டுடன் கலந்து வைத்திருப்பார்களாம். மற்றவர்களெல்லாம் பசியுடன் காத்திருக்க நம்முடைய ஸ்வாமியார் மாத்திரம், காலையில் பல் விளக்கியவுடன் இந்தப் பிஸ்தாக்கொட்டையையும் கல்கண்டையும் சாப்பிட்டுவிட்டு, ஹாய் என்று இருப்பாராம். இரண்டொரு நாள் காலையில் பட்டினியால் கஷ்டப்பட்ட என் தமயனார் பசியாற்றாது மூன்றாவது தினம், மெல்ல ஸ்வாமியார் அறியாதபடி, அவருக்கென்று வைத்திருந்த புட்டியினின்றும் கொஞ்சம் பிஸ்தாக்கொட்டையையும் கல்கண்டையும் எடுத்துச் சாப்பிட்டு விட்டாராம்.

இவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் நடைபெற, ஸ்வாமியார் அவர்கள், தினம் தனக்குத் காலையில் சேரவேண்டிய பிஸ்தாக்கொட்டை கல்கண்டு குறைவதைக்கண்டு, என் தகப்பனாரிடம் போய் முறை யிட்டனராம். அதன்பேரில், வேடிக்கையான ஓர் விதக் குறும்பு வாய்ந்த என் தகப்பனார், (தற்காலம் எனக்கிருக்கும் சிறு குறும்பு, அவரிடமிருந்து நான் பிதுரார்ச்சிதமாகப் பெற்றேன் என்று நினைக்கிறேன்) என் தமயனை அழைத்து, சிரித்துக் கொண்டே

"ஐயாசாமி, நீதான் இதைச் செய்திருக்கவேண்டும். இனி முன்பு போல் செய்யாதே! எடுத்தால் சாமியாருக்குத் தெரியும்படியாக அவ்வளவு எடுத்துவிடாதே ஒரே விசையில்! கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சாப்பிடு!" என்று காய்தா செய்தாராம்! இதையெல்லாம் என் தமயனர் எனக்குக் கடித மூலமாகத் தெரிவித்தார். அக்கடிதங்கள், என் பழயகட்டுகளில் இன்னும் எங்கோ இருக்கவேண்டும் என நினைக்கிறேன். பிறகு என் தமயனுக்கு நான நிருபம் எழுதும்போதெல்லாம், "உங்கள் பிஸ்தாக் கொட்டைச் சாமியார் எப்படியிருக்கிறார்?" என்று கேட்பேன் இந்த யாத்திரை முடிவு பெறும்வரையில். இதுதான் பிஸ்தாக்கொட்டை ஸ்வாமிகள் எனும் பாத்திரம் என் மனதில் உதித்ததற்கு அங்குரார்ப்பணம். இந்த ஸ்வாமியார் மிகவும் ஸ்தூல தேகமுடையவராக விருந்தாராம். இராதா பிறகு! தினம் காலையில் பிஸ்தாக் கொட்டையும் கல்கண்டுமே சாப்பிட்டுக்கொண்டிருந்தால்! ஆயினும் இவர் வாஸ்தவத்தில் ஒரு மஹானுயிருக்கலாம்! இவரைப்பற்றி எனக்கு வேறென்றும் தெரியாது. என் அனுபவத்தில் ஸ்வாமியார் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கும் பலர்களுக்குள் நூற்றில் ஒருவர் தான் வாஸ்தவமான சன்னியாசியாக இருப்பார்; மற்றவர்களெல்லாம் வயிறு வளர்க்க வேஷம் போடுபவர்களே. இப்படிப்பட்டவர்கள் பேதைகளை ஏமாற்றி ஜீவித்து வருவதை நமது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றே, இந்த "பிஸ்தாக் கொட்டை சாமியாரை" ஒரு நாடகப்பாத்திரமாக இந்நாடகத்தில் எழுதலானேன்.

இந்த பிஸ்தாக் கொட்டை சாமியாருடைய இரண்டு சிஷ்யர்கள் வேடம், பாலசுந்தர முதலியாரும் நாராயணசாமி பிள்ளையும் பூண்டு, சபையோரைக் களிக்கச் செய்தனர்.

இந்நாடகத்தில் ஒரு வயோதிகனை தமிழ் உபாத்தியாயர் பாத்திரம் ஒன்று வருகிறது; அதற்கு நான் சென்னகேசவராய முதலியார் என்று பெயர் வைத்தேன். இப் பெயர் வைத்தபொழுது நான் ஒருவரையும் குறிப்பிட்டுச் செய்தவனன்று. ஆயினும் இதற்குப் பல வருஷம் கழித்து, என் சம்பந்தி முறையை வகித்த பச்சையப்பன் கலாசாலை தமிழ் வித்வானுயிருந்த செல்வகேசவராய

முதலியார், ஒருநாள் என்னுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்த பொழுது "என் பெயரை என் அனுமதியின்றி உங்கள் நாடகத்தில் உபயோகித்திருக்கக் கூடாது" என்று சொன்னார். அப்பொழுது "ஐயோ! அப்படி யொன்றுமில்லை, உங்கள் பெயரை உபயோகிக்க வேண்டுமென்று செய்தவனன்று, ஏதோ தமிழ் உபாத்தியாயருக்கு ஒரு பெயர் வைக்க வேண்டுமே யென்று அப் பெயர் வைத்தேன். இது அகஸ்மாத்தாய் நேரிட்டது" என்று சொல்லி அவர் மன்னிப்பைக் கேட்டேன். இதில் வேடிக்கையென்ன வென்றால், இப் பொன்விலங்குகள் என்னும் நாடகம் தான் மற்ற நாடகங்களைவிட மேலானது என்று இதற்குப் பரிசு கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்த பரீட்சகர்களுக்குள் இவர் ஒருவராய் இருந்தார்! நாடக பாத்திரங்களுக்குப் பெயர் வைப்பதிலும் நாடக ஆசிரியர்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது !.

இப் பொன் விலங்குகள் நாடகத்தில், டி. சி. வடிவேலு நாயகர், மிஸ். ரோஸ் கமலா என்னும் கிறிஸ்தவப் பெண்ணாகவும், பி. ஏகாம்பர ஐயர், பி.ஏ; பி.எல்; ராமசந்திரனுடைய தந்தையாகவும், மிகவும் விமரிசையாக நடித்தார்கள்.

இந்நாடகமானது என் குறிப்பின்படி இதுவரையில் 35 முறை தான் ஆடப்பட்டிருக்கிறது. நாடக கம்பெனிகள் இதை சாதாரணமாக ஆடுவதில்லை. அதற்கு முக்கிய காரணம் இதில் சங்கீதத்திற்கு இடமில்லாமையேயென்று நினைக்கிறேன். ஒரு முறை வேலு நாயர் இதைத் தன் கம்பெனியைக் கொண்டு சென்னை ராயல் தியேடரில் ஆடினார். அப்பொழுது என்னை வரவழைக்க, நான் போயிருந்தேன். நாடகத்தை வேலு நாயர் நன்றாய் நடத்திய போதிலும், வந்திருந்த ஜனங்களுக்கு இது சந்துஷ்டியை யளிக்கவில்லை யென்பது என் அபிப்பிராயம். இரண்டு மணி நேரம் நாடகம் நடந்த பிறகு காலெரி (Gallery) யிலிருந்த ஒருவன் எழுந்திருந்து "என்ன ஐயா? இந்த நாடகத்தில் பாட்டே இல்லையோ?" என்று உரக்கக் கேட்டான்! சங்கீதத்தையே விரும்பும் நாடகாபிமானிகளுக்கு இந்நாடகம் பிரயோஜனப்படாது என்பது திண்ணம். மதுரையில் கிங் ஜார்ஜ் அமேடூர் டிராமாடிக் அசோசியேஷன் (King George

Amateur Dramatic Association) என்னும் சபையார் சில வருஷங்களுக்கு முன் இதை மிகவும் நன்றாய் நடித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அச்சமயம், ராமசந்திரனாகவும் சாமிநாதனாகவும் நடித்த எனது நண்பர்கள் ராவ்சாஹெப் மாணிக்கவாசகம் பிள்ளை, வைகுண்டம் ஐயர் இருவரையும் நான் நேரிற் கண்டானந்திக்கக் கொடுத்து வைக்கவில்லை. சங்கீதம் பாடத்தகுந்த அங்கத்தினர் அதிகமாயில்லாத சபைகள் இந்நாடகத்தை எளிதில் ஆடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த 1910-ஆம் வருஷம் எங்கள் சபையார் நடத்திய இன்னொரு முக்கியமான நாடகம் "ஹரிச்சந்திரன்" என்பதாம். இதற்கு முன்பாக அநேக ஹரிச்சந்திர நாடகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இது மிகவும் புராதனமான நாடகம் என்பதற்குச் சந்தேகமில்லை. நமது தேசத்தில் ஹரிச்சந்திரன் கூத்து ஆடப்படாத கிராமங்களில்லை யென்றே கூறலாம். ஒருவிதத்தில் இதற்கு முன் அச்சிடப்பட்ட ஹரிச்சந்திர நாடகங்களுள் பிரபலமானது. "சத்ய பாஷா ஹரிச்சந்திரன்" என்று பெயர்வைத்து பெங்களூரில் வசித்த அப்பாவு பிள்ளை இயற்றியது தான். இவரது புஸ்தகத்தில், பழய பாட்டுகளையெல்லாம் நீக்கி, புதிய மெட்டுகளுடன் அச்சிட்டிருந்தார். இது தான் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் நாடகக் கம்பெனிகளால் ஆடப்பட்டு வந்தது. இதை ஆடுவதில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆக்டர் சுப்பராயசாரி என்னொருவர் இருந்தார் என்று நான் முன்பே எழுதியிருக்கிறேன். இப்படிப்பட்ட பழய கதையை, எனது நண்பர் திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளை அவர்கள் நூதன வழியில் கதையை அமைத்து எழுதினர். சாதாரணமாக இக்கதையை நாடக ரூபமாக எழுதுகிறவர்கள் ஹரிச்சந்திரனை நோக்கி, நட்சத்திரேசன் முதலியோர் ஏதாவது ஒரு பொய் சொல்லி விடு போதும், என்று சொன்னதாகவே எழுதியிருக்கின்றனர். எனது நண்பர், "பொய்சொல்;" என்று ஒருவனைக் கேட்டால் பொய் சொல்லிவிடுவானா?" இது அவ்வளவு ஒழுங்காக வில்லை, ஹரிச்சந்திரன் தானைப் பொய்புகலும் படியான பல கஷ்டங்களுக்குட்படுத்தி, அவைகள் ஒன்றினாலும் அவன் மனங்கலங்காது, சத்தியத்தையே பேசி வந்ததாக, கதையை ஏற்படுத்தி மிகவும் சாதுர்யமாக எழுதியிருக்கிறார்.

இந்த அழகிய நூதன அமைப்பை, அவர் எழுதிய புஸ்தகத்தை வாசித்தால்தான் தெரியும். ஆயினும் தமிழ் கல்வியில் மிகவும் தேர்ச்சி பெற்று, தமிழுக்கே பல வருடங்கள் உழைத்துவந்த இந் நண்பர் இயற்றிய இந்த ஹரிச்சந்திர நாடகத்தில் என் மனதிற்கு ஒரு குறை தோன்றுகிறது. அதாவது இந்நாடகம் மிகவும் பெரியதாயிருக்கின்றதென்பதே. இவர் முதலில் இந்நாடகத்தை வெளியிடு முன் ப்ரூப் காபி (Proof Copy) எனக்குக் காட்டியபடி ஏறக்குறைய எழுநூறு அச்சிட்ட பக்கங்கள் அடங்கியதாயிருந்தது! எனது நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரும் நானுமாக, ஆசிரியரிடம் இது மிகவும் நீளமாயிருக்கிறது, இதைக் குறுக்க வேண்டும் என்று தெரிவித்தோம். இதற்கு உதாரணமாக, சந்திரமதியை, காசிராஜன் தன் மகவைக் கொன்றதாக விசாரணை செய்த காட்சி மாத்திரம், அச்சிட்ட 60 பக்கங்களுக்கு மேலிருந்தது! தற்காலத்திய செஷன்ஸ் கோர்ட்டு விசாரணை மாதிரி தற்சாட்சி விமரிசை, எதிர் விமரிசை, மறு விமரிசை முதலியவைகளுடன் எழுதியிருந்தது! இதையெல்லாம் மாற்றவேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டதின் பேரில், எங்கள் வேண்டுகோளுக்கிசைந்து பிள்ளை அவர்கள் நாடகத்தை ஏறக்குறைய முன்னூற்று முப்பது பக்கங்களாகக் குறுக்கினர். இதை எங்கள் சபை ஆடின போது, இதில் மூன்றிலொரு பாகமாகக் குறுக்கி ஆடினோம். அப்படிக் குறுக்கியும், ஏறக்குறைய நான்கரை, ஐந்து மணி நேரம் பிடித்தது!

பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டு எழுதிய இந்நாடகத்தை ஆசிரியர் அச்சிட்டு வெளியாக்கியவுடன், எங்கள் சபையார் இதை ஆடவேண்டுமென்று தீர்மானித்தனர். ஆயினும் முதல் எடுக்கும் பொழுதே ஒரு கஷ்டம் வந்தது. தெலுங்கில் ஹரிச்சந்திரனை நடித்த கே. ஸ்ரீனிவாசன் என்பவர், எங்கள் சபையை விட்டகன்று நெல்லூர் போய்ச் சேர்ந்து விட்டார். தமிழில் அக்காலம் ஹரிச்சந்திரன் வேடம் பூணத் தகுந்தவர்கள் ஒருவரு மில்லாதிருந்தது; என்னால் ஹரிச்சந்திரன் வேடம் பூண முடியாது என்று கூறிவிட்டேன். இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்களுண்டு, முதலாவது ஹரிச்சந்திரன் வேடம் பூணத்தக்க, திடமான காத்திரம்

ஏனக்கில்லை. இரண்டாவது எனக்கு அரிச்சந்திரன் பாட வேண்டிய பாட்டுகளை யெல்லாம் பாடும்படியான சங்கீத ஞானமில்லை. இவ்வாறு ஹரிச்சந்திரனையாட எனக்கு சாமர்த்தியமில்லை என்று மறுக்கவே, எனதாருயிர் நண்பராகிய சி. ரங்கவடிவேலுக்கு மிகவும் வருத்த முண்டாயிற்று. அவர் அநேக வருஷங்களாக இந் நாடகத்தில் சந்திரமதியாக ஆட வேண்டு மென்று விருப்ப முற்றிருந்தார். என்னை இந் நாடகத்தை யெழுதும்படியாகப் பன்முறை கேட்டும், என்னால் முடியாதென்று மறுத்து வந்தேன்; பிறகு இந்த சந்தர்ப்பம் வாய்க்கவே, தன் பொருட்டாவது நான் இந்த ஹரிச்சந்திரன் வேடம் பூணவேண்டுமென்று வற்புறுத்தினார். எங்கள் சபை நிர்வாக சபையாரும் என்னை ஆடும்படிக் கேட்டனர். நூலாசிரியராகிய பவாநந்தம் பிள்ளை அவர்களும் என்னைக் கேட்டனர். இவர்கள் எல்லாம் என்னை வேண்டிக் கொண்டனர் என்று பெருமையாக இதை இங்கு நான் எடுத்து எழுதவில்லை. வாஸ்தவத்தில் சரியாக அப்பாத்திரத்தையாடச் சக்தியற்றவனாயினும் அதை ஆட நான் ஒப்புக்கொண்டதற்குக் காரணத்தைக் கூறினேனே யொழிய வேறன்று. கடைசியில் நிர்வாக சபையில், இவ் விஷயம் தீர்மானத்திற்கு வந்தபொழுது, "எனக்கு ஹரிச்சந்திரனையாட இஷ்டமில்லை, அந்தப் பாத்திரத்தைச் சரியாக நடிப்பதற்கு எனக்குத் திறமையில்லை, ஆயினும் எனது நண்பர் ரங்கவடிவேலு சந்திரமதியாக நடிப்பதற்கு இடங்கொடுக்க வேண்டுமென்றே, நான் அரிச்சந்திரனாக நடிக்க ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று வெளிப்படையாகச் சொல்லி, பிறகே இப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டேன். நான் இதை இங்கு எடுத்து எழுதியதற்கு முக்கிய காரணம், நாடக மேடையில் பெயர்பெற வேண்டுமென்று விரும்பும் எனது நண்பர்கள் ஒவ்வொருவரும், ஏதாவது ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொள்ளும்படி கேட்கப்பட்டால், அப்பாத்திரத்திற்கு நாம் தகுந்தவர்கள் தானா, அதை நம்மால் நடிக்கத் திறமை யுண்டா, நமக்குப் பொருத்தமாயிருக்குமா என்று யோசித்தே பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கவனிக்கும் பொருட்டே.

இந்நாடகம் ஒத்திகை செய்த பொழுது நடந்த ஒரு சிறு சமாசாரத்தை இனி எழுதுகிறேன். எனக்கோ பாடத் தெரியாது;

ஆகையால் இந்த அரிச்சந்திரனாக நடிப்பதில் வசனத்தைக் கொண் டே நான் சபையோரைத் திருப்தி செய்ய வேண்டியவனா யிருக்கி றேன் என்று யோசித்து, இப் பாத்திரத்தை நடிப்பதில் ஆங்காங்கு உருக்குமான பாகங்களிலெல்லாம் இப்படி இப்படி நடிக்க வேண்டு மென்று யோசித்துத் தீர்மானித்து, கஷ்டப்பட்டு ஒத்திகை செய்து வந்தேன். சந்திரமதியையும், தேவதாசனையும், அடிமையாகக் கொண்ட கால கண்ட ஐயர் வசம் அவர்களை ஹரிச்சந்திரன் ஒப்பு விக்கும் சமயத்தில், கண்களில் நீர் தாரைதாரையாக வரும்படி ஒத்திகையில் ஒரு நாள் நடித்தேன். அத்தினம் எனது ஆக்டர்கள் நாடகாசிரியர் உள்படப் பல அங்கத்தினர், ஒத்திகை செய்யும் அறையில் குழுமியிருந்தனர். பார்த்தவர்களெல்லாம் இது நன்றா யிருக்கிறதென மெச்சினர். ஆயினும் இவர்களே, நாடகதினம் இக் காட்சியைக் கண்டபின், என்னிடம் வந்து, அன்று ஒத்திகை யில் நீங்கள் ஆக்டு செய்தது போல் அவ்வளவு உருக்கமாயில்லை என்று கூறினர். நான் யோசித்துப் பார்க்குமிடத்து, ஒத்திகையில் நடித்தது போலத்தான் மேடையின் மீதும் நடித்ததாக எனக்குத் தோன்றியது. அப்படியிருக்க இவர்கள் மனதில் ஏன் இப்படிப் பட்டது என்று ஆலோசித்துப் பார்க்குமிடத்து, நாடகமேடையைச் சார்ந்த ஒரு உண்மை எனக்கு வெளியாயது. அதாவது, ஜனங்கள், ஒரு ஆக்டர் இன்ன சந்தர்ப்பத்தில் இப்படி நடிக்கப் போகிறான் என்று அறியாதிருக்கும் பொழுது, அந்த ஆக்டர் புதுவிதமாய் நடித்தால், அது அவர்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றி, அவர்கள் மனதில் நன்றாய் உறுத்தி, அவர்கள் மனதைக்கவர்கிறது; அதையே மறுபடியும் பார்க்கும் பொழுது, இவன் இந்த சந்தர்ப்பத்தில் இப் படி நடிக்கப்போகிறான் என்று அறிந்தவர்களாதலால், அது அவர்க ளுக்குச் சாதாரணமாகப் போய்விடுகிறது; இது காரணம் பற்றியே, இங்கிலாந்து முதலிய தேசங்களில், ஆக்டர்கள் ஒத்திகை செய்யும் பொழுது, நாடகாசிரியன், பக்கவாத்தியக்காரர்கள் தவிர மற்றவர் கள் ஒருவரையும் சாதாரணமாகப் பார்க்கவிடுவதில்லை.

இதற்குக்காரணம், நான் முன்னே கூறியதுதான் என்பதை என் சுயானுபவத்திற் கண்டேன். ஆகவே சாதாரணமாக, ஒத்திகைகள் நடத்தும் பொழுது, உடனிருக்க வேண்டிய ஆக்டர்கள் தவிர மற்ற-

வர்களைப்பார்க்க விடுவது அவ்வளவு நல்லதல்ல. அன்றியும் அப்படி ஆக்டர்களல்லாதாரை ஒத்திகைகளைப் பார்க்க விடுவதில் இன்னொரு கஷ்டம் இருக்கிறது. சில ஆக்டர்கள் கூச்ச முடையவர்களா யிருப் பார்கள்; தாங்கள் அறியாதவர்களின் எதிரில் ஒத்திகை நடத்த நாணப்படுவார்கள்; அன்றியும், அவர்கள் ஏதாவது தவறாக நடித் தால், அன்னியர்கள் எதிரில், கண்டக்டர்கள் அவர்களது தப்பை எடுத்துக்காட்ட மனம் ஒப்பார்கள்; மேலும் ஒத்திகைகளில் ஏதா வது தவறு நடந்தால், இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆக்டர்கள் அல்லாதார், நாடகதினம் வெளியில் உட்கார்ந்து அந்த இடம் வரும் பொழுது, இந்த இடத்தில் இப்படி தப்பு நடக்கப் போகிறதென்று, அவ்விடம் வருமுன்னமே பேச ஆரம்பிக்கின்றனர். இவைகளை யெல்லாம் கருது மிடத்து, ஆக்டர்களைத்தவிர மற்றவர்களை ஒத்தி கைகளைப் பார்க்க விடுவது உசிதம் அல்லவென்று எனக்குத் தோன் றுகிறது. இது பற்றியே சில காலம் கழித்து, கண்டக்டர்கள் ஒத் திகை நடத்தும் பொழுது, ஒத்திகை அறையினின்றும் அன்னியரை வெளிப்படுத்தலாம் என்று ஒரு சட்டம் ஏற்படுத்தினேன் எங்கள் சபையில். இதை இதர நாடக சபைகளும் கவனிக்குமாறே இதைப் பற்றி இங்கு விரிவாய் எழுதலானேன்.

இந்த ஹரிச்சந்திரன் நாடகத்தை விக்டோரியா பப்ளிக் ஹாலில் எங்கள் சபையார் நடத்தியபொழுது, ஹாலில் இடமில்லா மல் டிக்கட்டுகள் விற்பதை நிறுத்தும்படி நேரிட்டது. ஆகவே, இதைச் சீக்கிரத்தில் மறுபடியும் இன்னொருமுறை இவ்வருஷமே ஆடினோம். இரண்டு முறையும் நல்ல தொகை வசூலாயிற்று. நான் ஹரிச்சந்திரனாக நடித்தது நன்றாயிருந்ததென என் முன் எல்லோ ரும் கூறிய போதிலும், அவர்கள் மனதில் நான் பாடவில்லை என்னும் குற்றம் இருந்தது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. எனதாருயிர் நண்பர், சி. ரங்கவடிவேலுவைப் பற்றி, மிகவும் நன்றாய்ப் பாடி நடித்ததாக எல்லோரும் புகழ்ந்தனர். ஆயினும் இப்பாத்திரத்தில் அ. கிருஷ்ணசாமி ஐயரைப் போல் அவ்வளவு நன்றாய் நடிக்கவில்லை என்பது என் துணிபு. ஆயினும் ரங்கவடிவேலு சந்திரமதியாக நடித்ததில், ஹரிச்சந்திரனை விட்டுப் பிரியும் கட்டத்திலும் கால கண்டர் வீட்டில் பணிவிடை செய்யும் கட்டத்திலும் மிகவும்

நன்றாய் நடித்தார் என்பது என் அபிப்பிராயம்; முக்கியமாக மேற்சொன்ன இரண்டாவது கட்டத்தில் ஓர் உயர்குலத்து ஸ்திரீ துர் அதிர்ஷ்டத்தினால் துடப்பத்தைக்கொண்டு ஒரு வீட்டின் முற்றத்தைப் பெருக்கும்படியான இழிதொழில் புரியும்படி நேரிட்டபொழுது இப்படித்தான் நடிக்கவேண்டுமென்பதை இவரிடம் நான் கண்டேன். இக்காட்சியில் ரங்கவடிவேலு நடித்தது எல்லோருடைய மனதையும் உருகச் செய்தது என்பதற்கு ஐயமின்று. இந் நாடகத்தில் நாங்கள் இருவரும் ஐந்தாறு முறை நடித்திருக்கிறோம். இலங்கைக்குச் சென்று கொழும்பில் ஒரு முறை இதை நாங்களிருவரும் நடித்தபொழுது ரூபாய் 1400க்கு மேல் வசூலாயிற்று. தற்காலம் இந்நாடகத்தை எங்கள் சபையார் நடிக்கும் பொழுது டாக்டர் ஸ்ரீனிவாசராகவாச்சாரியாராவது, எஸ். ராகவாச்சாரியாராவது ஹரிச்சந்திரனாக நடிக்கின்றனர். சந்திரமதி வேடம் டி. சி. வடிவேலு நாயகர் பூணுகின்றனர். தெலுங்கில் ஹரிச்சந்திரனாக நடித்த கே. ஸ்ரீனிவாசனுக்குப் பிறகு, பாட்டில் ஸ்ரீனிவாச ராகவாச்சாரியாரை எடுத்துக் கூறுவேன். ஆயினும் இப்பொழுது எங்கள் சபையார் நடிக்கும் ஹரிச்சந்திர நாடகம், திவான் பஹதூர் பவாநந்தம் பிள்ளை அவர்கள் எழுதியதன்று. 'சில பாகம் வி. வி. தேவநாத ஐயங்கார் எழுதியது, சில பாகம் பவாநந்தம்பிள்ளை அவர்கள் எழுதியது, சில பாகம் நான் அச்சிட்டிருக்கும் பிரதியிலிருந்து எடுத்தது, இவைகளையெல்லாம் சேர்த்து ஆடப்பட்டு வருகிறது. இவ்வாறு கலப்படமாய் ஆடுவது அவ்வளவு உசிதமல்லவென்பது என் அபிப்பிராயம்.

மேலே நானும் ஹரிச்சந்திர நாடகம் ஒன்று தமிழில் அச்சிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அது எழுதப்பட்டது அடியில் வருமாறு:—இதற்குச் சில வருஷங்களுக்கு முன் சென்னையில் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்கள் ஒரு நாடக கிளப்பாகச் சேர்ந்து, சில ஆங்கில நாடகங்களை வருஷந்தோறும் நடத்தி வந்தனர். அதன் பெயர் 'மதராஸ் ஸ்டூடென்ட்ஸ் டிராமாடிக் கிளப்' (Madras Students Dramatic Club) என்பது என்று எனக்கு ஞாபகம். அவர்கள் ஆங்கிலத்தில் நாடகம் ஒன்று நடத்தியபொழுது என்னை அழைத்திருந்தார்கள். அதற்குப் போயிருந்தபொழுது, நான்

இந்த ஆங்கிலக் கதைகள் நடத்துவதை விட்டு, நமது தேசத்துக் கதைகளை நடத்தக் கூடாதா என்று கேட்டேன். தென்னாலிராமன் தகப்பனார் சிராத்தத்தைப் பற்றிய கதையொன்று முன்னமே இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்; அதன் படி, நானிவர்களை இப்படிக் கேட்கவே, "நீங்கள் அப்படிப்பட்ட நாடகத்தை எங்களுக்கு இங்கிலீஷில் எழுதித் தாருங்கள்" என்று அச்சபையார் கேட்டனர். அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி ஹரிச்சந்திரன் கதையை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்தேன். அதை அச்சிட்டும் வெளிப்படுத்தினேன். அதை அப் பால்ய சபையார் ஆடிய பொழுது, வந்திருந்தவர்கள் நன்றாயிருந்ததென மெச்சினர். அது பன்முறை சென்னையிலும், நெல்லூர் முதலிய வெளி ஜில்லாக்களிலும் ஆடப்பட்டது. அச்சிட்ட அப் புத்தகத் தின் இரண்டு பதிப்புகளும் செலவழிந்து போய், இன்னும் அப் புஸ்தகம் வேண்டுமென்று அடிக்கடிக்காகிதங்கள் வருகின்றன. இப்படி இது கொஞ்சம் பிரபலமாகவே, மற்றொரு சபையார் திவான் பகதூர் பவாநந்தம் பிள்ளை அவர்கள் அச்சிட்டிருக்கும் புஸ்தகம் மிகப் பெரியதாயிருக்கிறது, ஓரிரவிற்குள் ஆடத் தகுந்த படி, ஆங்கிலத்தில் நீங்கள் அச்சிட்டிருக்கும் ஹரிச்சந்திர நாடகத் தைத் தமிழில் மொழி பெயர்த்துத் தாருங்கள் என்று கேட்டனர். அதன் பேரில், அதை அப்படியே தமிழில் மொழி பெயர்த்து அச் சிட்டுக் கொடுத்தேன். இது நான்கைந்து முறைதான் ஆடப் பட்டிருக்கிறது. சென்ற வருஷம் ட்ரேட்ஸ் ஸ்டாப் கிளப் (Trades Staff Club) அங்கத்தினர் இதை மிகவும் விமரிசையாக நடித்தனர். நான் பார்த்த சந்திரமதிகளுக்குள் இச்சபையைச் சார்ந்த சந்திரமதி வேஷதாரியே, எங்கள் சபை கிருஷ்ணசாமி ஐயருக்குப் பிறகு, நன்றாய் நடித்தவர் என்பது என் அபிப்பிராயம்.

இந்த ஹரிச்சந்திர நாடகத்தை ஒரு முறை எங்கள் சபையார் நடத்திய பொழுது, ஷே துரைசாமி ஐயங்காரும் வடிவேலு நாயக ரும் ஹரிச்சந்திரனாகவும் சந்திரமதியாகவும் நடிக்க, எனதாருயிர் நண்பர் ரங்கவடிவேலுவும் நானும் காலகண்டியாகவும் காலகண்ட ஐயராகவும் நடித்தோம்.

இந்த ஹரிச்சந்திர நாடகத்தை விட்டகலுமுன் இன்னொரு விஷயத்தைக் குறித்து எழுத விரும்புகிறேன். ஒரு முறை வெளியூரில் இதை எங்கள் சபையார் நடித்த பொழுது ஸ்ரீனிவாச ராகவாசாரியும் வடிவேலு நாயகரும் ஹரிச்சந்திரனும் சந்திரமதியுமாக நடிக்க, நான் அவர்கள் காட்டில் கஷ்டப்படும்பொழுது, அவர்களைப் பயமுறுத்தும் பூதமாக நடித்தேன்; பூதத்திற் கேற்றபடி முகத்தை விகாரமாகச் செய்துகொண்டு, கறுப்பு ஆடை அணிந்தேன்; நான் பேசவேண்டியதெல்லாம், “பூ!” என்னும் ஒரு கூச்சலே! இதை நான் இங்கெடுத்து எழுதவேண்டிய காரணம், நாடகமாடுவதென்றால் ஒரு சபையின் அங்கத்தினன் எந்த வேஷமும் தரிக்கச் சித்தமாயிருக்க வேண்டுமென்பதை என் இளைய நண்பர்கள் அறியவேண்டியே; நாம் அயன் ராஜபார்ட் ஆக்டராயிற்றே, ஆகவே வேறு சின்ன வேஷங்கள் தரிக்கலாகாது என்று எண்ணலாகாது; அன்றியும் இந்நாடகத்தில் கதா நாயகனை நடித்தோமே ஆகவே அதே நாடகத்தில் ஒரு அற்ப வேஷம் தரிக்கலாமா என்று யோசிக்கலாகாது. எந்த வேஷத்தை எடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தபோதிலும் அதற்குத் தக்கபடி நடித்தல் தான் ஆக்டருக்குரிய நற்குணம், அதுவும் முக்கியமாக இதை ஜீவனோபாயமாகக் கொள்ளாது விநோதமாகக் கொள்ளும் ஆமெடூர் (Amateur) ஆக்டர்களுக்கு.

இந்த வருஷம் தசராக் கொண்டாட்டத்தில் தமிழ் தெலுங்கு நாடகங்களுடன், ஒரு மலையாள நாடகமும் ஒரு சிறு ஹிந்துஸ்தானி நாடகமும் ஆடினோம். இச்சமயம் மலையாளி அங்கத்தினர் பலர் இருந்தபடியால், அவர்களையெல்லாம் சேர்த்து ‘கல்யாணிக் குட்டி என்னும் மலையாள நாடகத்திலிருந்து சில காட்சிகள் ஆடினோம். அதில் நான் “கேலு” எனும் நாயர் வேலைக்காரன் வேஷம் பூண்டேன். சில மஹம்மதிய மெம்பர்கள் இருந்தபடியால், ஷேக்ஸ்பியர் எழுதிய “நடுவேனிற் கனவு” (Mid summer Nights' Dream) என்னும் நாடகத்திலிருந்து ஒரு காட்சியை ஹிந்துஸ்தானியில் மொழி பெயர்த்து, அதை ஆடினோம். அதிலும் எனக்கு ஒரு பாத்திரம் கொடுக்கப்பட்டது. இந்துஸ்தானி பாஷை பேச நான் கற்றுக்கொண்டபடியால், இதில் ஆடுவது எனக்கு எளிதாயிருந்தது. பெரிய நாடகங்களில் முக்கியமான கதாநாயகன் பாகத்தை

ஆடுவதில் எவ்வளவு சந்தோஷமிருந்ததோ, அவ்வளவு சந்தோஷமிருந்தது, வேறு பாஷைகளில் இப்படிப்பட்ட சிறிய பாகங்களை எடுத்துக் கொள்வதிலும்; ஒரு விதத்தில் அதைவிட அதிக சந்தோஷமிருந்த தென்றே நான் கூறவேண்டும்; ஏனெனில் பெரிய பாகங்கள் ஆடும்பொழுது எப்படியிருக்குமோ என்னும் பயமிருந்தது; இச்சிறிய பாகங்கள் ஆடும்பொழுது கவலையேயில்லை!

# 20 ஆவது அத்தியாயம்

இனி 1911 ஆம் வருஷத்திய நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதுகிறேன். இவ்வருஷம் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளுள் எங்கள் சபை கொழும்பு நகரம் சென்று நாடகங்களாடியது ஒன்றும்; இது ஒரு பெருங் கதையாகையால் சற்று விவரமாய் எழுதவேண்டியிருக்கிறது.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக ஒருமுறை என தாருயிர் நண்பராகிய ரங்கவடிவேலுவும் நானும், திவான் பஹதூர் மாசிலாமணிப் பிள்ளையுடனும், இன்னும் சில சிநேகிதர்களுடனும் லங்கைத் தீவிற்குப் போயிருந்தோம். அது வேறு கதையாம். எனது நாடகமேடை நினைவுகளைப்பற்றிய அதில் நேரிட்ட சந்தர்ப்பத்தை மாத்திரம் இங்கு எடுத்து எழுதுகிறேன். அப் பிரயாணத்தில் கொழும்பு நகரத்தை நாங்கள் சுற்றிப்பார்த்து வந்தபொழுது, எங்களை யெல்லாம் அழைத்துக் கொண்டுபோய் ஊரிலுள்ள முக்கியமாகப் பார்க்கவேண்டிய இடங்களை யெல்லாம் காட்டிக்கொண்டு வந்த ஒரு நண்பர், ஓரிடத்தில், 'இங்கே பப்ளிக் ஹால் (Public Hall) இருக்கிறது. இதைப் பார்க்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டார். அவர் கொழும்பு நகரத்தாரின் வழக்கப்படி, ஹால் என்கிற பதத்தை, சற்று தவறாக உச்சரிக்க நாங்கள் எல்லாம் நகைத்து, அதை அவசியம் பார்க்க வேண்டுமென்று கூறினோம். உள்ளே நுழைந்தவுடன் அது ஒரு நாடக சாலையாக அமைக்கப்பட்டது என்பதைக் கண்டோம். பிறகு ரங்கவடிவேலுவும் நானும்

உள்ளே சென்று எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்க்க வேண்டு மென்று தீர்மானித்து எங்கள் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு அக் கட்டிடம் முழுவதும் பார்த்தோம். அந் நாடக சாலை சிறிதா யிருந்தபோதிலும் (சுமார் 500 பேருக்கு மேற்கொள்ளாது) அது மிகவும் அழகாய்க் கட்டப்பட்டிருந்தது. உள்ளே எல்லாம் பலவித வர்ணங்களுடைய மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன; நாடக மேடையானது மிகவும் உயரமாக அமைக்கப்பட்டு, அங் கிருந்து பேசினால் ஹால் முழுவதும் எளிதில் கேட்கும்படியான தன்மை வாய்ந்ததாயிருந்தது. நம்முடைய பட்டணத்தில் விக்டோ ரியா பப்ளிக் ஹாலில் எவ்வளவு கத்தினாலும் பாதி ஹாலுக்கு மேல் கேட்கவில்லையே, இங்கு எவ்வளவு சௌகர்யமாயிருக்கிறதென எங் களுக்குள் பேசிக்கொண்டோம். அன்றியும் நாடகமாடும் மேடை (Stage) சென்னையிலுள்ளதைவிட, இருமடங்கு விசாலமானதாயி ருந்தது. அன்றியும் அதற்குப் பின்னால் நேபத்யம் (வேஷம் தரிக் கும் இடம்) நாடக மேடையைவிட விசாலமானதாய், நிலக்கண் ணாடிகள் முதலியன வைக்கப்பட்டு மிகவும் அழகாயிருந்தது. இதை யெல்லாம் பார்த்து, எனதுயிர் நண்பர் ரங்கவடிவேலு, 'இங்கே நாம் நாடகங்கள் ஆடினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று கூற, அதற்கு, 'நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!' என்று வேடிக்கை யாக பதில் உரைத்து, அவ்விடத்தை விட்டகலுமுன், அங்கிருந்த ஹால்மேல்விசாரணைத் தலைவரை, வேடிக்கையாக, 'இங்கே யாரா வது தமிழ் நாடகங்கள் அல்லது இந்திய நாடகங்கள் போடுகிறார் களா?' என்று கேட்க அவ்வதிகாரி, 'அதிகமாயில்லை. எப்பொழு தாவது ஒரு சமயம் போடுவதுண்டு!' என்று பதில் உரைத்தார். அதன் மீது, 'அவர்களுக்கு என்ன வரும்படி சாதாரணமாக வரும்?' என்று வினவ, அவர் 'அவர்களுக்குச் சாதாரணமாக அறுபது எழு பதுவரைக்கும் வரும்', என்றார். அறுபது எழுபது ரூபாய் ஒரு நாடகத்திற்கு வரும்படி வந்தால், நாம் இங்கு நாடகம் ஆடினாற் போல்தான் என்று மனதில் நினைத்துக் கொண்டு, 'வெள்ளைக்காரக் கம்பெனிகள் ஆடினால் அவர்களுக்கு என்ன வரும்படி வரும்?' என்று கேட்க அதற்கவர், 'அவர்களுக்கு நூற்றிருபது, நூற்றைம் பது வரும்!' என்றார்; வெள்ளைக்காரர்களுக்கு நூற்றைம்பது ரூபாய்

வந்தால் எப்படிச் செலவு கட்டிவரும், இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறதென நினைத்துக்கொண்டு வெளியில் வந்தபின், எங்களை அழைத்துக்கொண்டு போனவரைப் பார்த்து இது என்ன சமாசாரம் என்று கேட்க, அவர் "இது உங்களுக்குத் தெரியாதா? இங்கெல்லாம் பத்து ரூபாய் நோட்டுகள் தான் சாதாரணமாக வழங்குகிறது. ஆகவே, 60 என்றால் அறுநூறு ரூபாய் என்று அர்த்தம், எழுபது என்றால் எழுநூறு ரூபாய் என்று அர்த்தம், நூறு என்றால், நூறு பத்து ரூபாய் நோட்டுகளாகக் கணக்கு செய்து கொள்ள வேண்டும்!" என்றார். ஆனால் சரிதான் என்று அதனுடன் அதை விட்டோம். அச்சமயம் நானாவது எனது நண்பராவது, எங்கள் சபை இவ்விடம் வந்து நாடகங்கள் ஆடக்கூடும் என்று கனவிலும் நினைத்தவர்களல்ல. அச்சமயம் தூத்துக்குடியிலிருந்து, கப்பல் மூலமாகக் கொழும்பு வந்து சேர, ஓர் இரவெல்லாம் நாங்கள் பட்ட கஷ்டத்தை நினைத்துக்கொண்டு, இது எங்கள் சபைக்குச் சாத்தியமான காரியமல்லவென்று கைவிட்டோம். இதற்கப்புறம் இரண்டு வருஷங்கள் வரையிலும் இதைப்பற்றி ஒருபோதும் நினைத்தவர்களல்ல.

பிறகு இவ்வருஷம் (அதாவது 1911) ஏப்ரல் மாதத்திலோ என்னமோ, ஒரு நாள் எங்கள் சபை நிர்வாகசபைக் கூட்டத்தில், எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார், தன் வழக்கப்படி, "என்ன சம்புந்தம்! நம்முடைய சபை ஏதாவது புதியதாய்ச் செய்யவேண்டும். வெறுமையாகப் போட்ட நாடகங்களையே போட்டுக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்?" என்று சொன்னார். அதன் மீது அவருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று விரும்பினவனாக, வேடிக்கையாக, "இந்த வருஷம் நமது சபை சிங்களத்துக்குப்போய் நாடகமாட வேண்டும்!" என்று சிரித்துக்கொண்டே பிரேரேபித்தேன். உடனே ரங்கவடிவேலு தான் ஆமோதிப்பதாகச் சொல்ல, அங்கிருந்தவர்களெல்லாம், ஸ்ரீநிவாச ஐயங்கார் உட்பட, மிகவும் நல்லது என்று குதூஹலத்துடன் ஒப்புக் கொண்டனர்! நான் இதைப்பற்றிப் பிரேரேபித்தபோது வேடிக்கைக்காச் சொன்னேனே யொழிய, கொஞ்சமாவது இது சாத்தியமான காரியம் என்று நினைத்துச் சொன்னவனே யன்று. அதன்

பேரில், நான் வேடிக்கைக்காகச் சொன்னேன், இது அசாத்தியமான காரியம் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும், அனைவரும், "அதெல்லாம் உதவாது. நீதானே சொன்னாய். ஆகவே அதை எப்படியாவது நீதான் நிறைவேற்ற வேண்டும்!" என்று கூறி, அவ்வாறே, நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானித்து விட்டார்கள்! சரி, யோசிக்கலாம் என்று சொல்லிவிட்டு, அன்றிரவு வீட்டிற்குப் போனவுடன், இதென்ன வேடிக்கையாகக் கூறப்போய், விபரீதமாக முடிந்ததே என்று யோசித்தவனாய் என்னாலியன்ற அளவு பிரயத்தனப்படுகிறேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டபடியால், நாம் பிரயத்தனபட்டுப்பார்ப்போம், என்று தீர்மானித்து, கொழும்பில் முன்முறை நாங்கள் போயிருந்தபோது தங்கியிருந்த வீட்டுக்காராரா கிய மிஸ்டர் துரைசாமி என்பவருக்கு இதைப்பற்றி ஒரு நிருபம் எழுதினேன். எழுதிய போது என் தாத்பர்யம் என்னவென்றால், உங்கள் சபை இங்கு வருவது சவுகர்யமாயிராது, சபைக்கு நஷ்டமுண்டாகும் என்று பதில் எழுதிவிடுவார், அதைக் கமிட்டியாருக்குக் காண்பித்து, என்னாலியன்ற அளவு முயன்று பார்த்தேன், என் மீது பழியில்லை, என்று கூறிவிடலாம் என்பதே. எனது கொழும்பு நண்பர் என்ன செய்தார் என்றால், நான் நினைத்ததற்கு மாறாக, "உங்கள் சபை சந்தோஷமாக இங்கு வரலாம்; உங்களுக்கு ஒன்றும் நஷ்டம் வராது!" என்று உடனே பதில் அனுப்பினார்! அதற்கு மேல் நான் என்ன செய்வது? 'இதென்னடா கஷ்டமாக முடிந்ததே!' என்று நான் யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது, 'கொழும்பிலிருந்து பதில் வந்ததா?' என்று விசாரித்துக்கொண்டிருந்த ரங்கவடிவேலு, அதைப் படித்துப் பார்த்து விட்டு "எப்படியாவது நம்முடைய சபை அங்கே போகவேண்டும்" என்று வற்புறுத்தினார். அவர் இப்பிரயாணத்தின் மீது மிகவும் மனம் வைத்திருக்கிறார் என்று அறிந்து அதன் பலவிதமான கஷ்டங்களை எண்ணியவனாய், அவைகளையெல்லாம் அவருக்கு நான் எடுத்துரைக்க, அவர் அவற்றையெல்லாம் கேளாதவராய், "இதையெல்லாம் என்னிடம் சொல்லுவானேன்? உங்களுக்கு மனம் இல்லை என்று சொல்லிவிடுங்கள். நீங்கள் மனம் வைத்தால் இது எப்படியும் முடியுமென்று எனக்குத் தெரியும்!" என்று பதில் உரைத்தார். இதனை

பேரில் நான் வாயெடுக்க வகையில்லாதவனானேன். என்னை ஏதாவது ஒரு காரியம் செய்யும்படி உந்த வேண்டுமென்றால், எனதுயிர் நண்பர், இந்த மார்க்கத்தை நன்றாகக் கற்றிருந்தார். அன்றியும், இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்கு ஹனுமாருடைய குணத்தில் ஒரு சிறு குணம் எனக்குண்டெனத் தெரிவித்திருக்கின்றேனே! 'சரி, இனிப்பேச்சில்லை! அப்படியே ஆகட்டும்!' என்று கூறிச் சபை எப்படியாவது கொழும்பிற்குப் போய்த் தான் தீரவேண்டுமென்று தீர்மானித்து, 'நீ ஒன்றும் பயப்படவேண்டாம்!' என்று எனதுயிர் நண்பரிடம் கூறி எல்லாம் வல்ல இறைவன் மீது பாரத்தைச் சுமத்தி, ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தேன்.

மேற்சொன்னபடி ஆரம்பித்த நாள் முதல் கொழும்புக்குப் போய் நாங்கள் முதல் நாடகம் கொடுத்த ராத்திரி வரையில் ஒரு நாளாவது என் வழக்கப்படி நித்திரை செய்யவில்லை என்று கூறுவேனாயின் அது பொய்யாகாது. நான் அந்த ஒரு மாதம் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. ஆயினும் அவ்வளவு கஷ்டப்பட்டோமே யென்று நான் துக்கப்படவில்லை. அவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்துக் கொண்ட காரியத்தை ஸ்வாமியின் கிருபையால் பூர்த்தி செய்தோமே யென்று சந்தோஷப்படுகிறேன். எனக்கு நேரிட்ட கஷ்டங்களில் சிலவற்றை இங்கெடுத்து எழுதுகிறேன்.

முதலில், பிள்ளையார் குட்டாக, எனது தெலுங்கு நண்பர்களில் ஒருவர், தமிழில் மாத்திரம் நாடகம் நடத்தப் போகிறார்கள் தெலுங்கிலில்லை என்கிற காரணத்தாலோ, அல்லது வேறு எக்காரணத்தினாலோ சில தெலுங்கு ஆக்டர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, 'சபை கொழும்பிற்குப் போகக்கூடாது!' என்று ஆட்சேபித்து, அதற்காகச் சபை பொதுக் கூட்டத்தில் இதைத் தீர்மானிக்கவேண்டுமென்று ஒரு மஹஜர் (Mahajzar) தயார் செய்ய ஆரம்பித்தார், அவர்களுடனெல்லாம், மெல்லப்பேசி அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, கடைசியாக இதற்கெல்லாம் தலைவனாக இருந்த அவரையே நேரிற் கண்டு அவரது ஆட்சேபனைகளுக்கெல்லாம் சமாதானம் சொன்னேன். கடைசியாக அவர் வேறு நியாயம் எடுத்துக்கூற வகையறியாமல், "நீ சத்தியமூர்த்தியையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு போகிறதாகக் கேள்விப்பட்டேன்.

அவன் இப்பொழுதுதான் ஆக்டுசெய்யக் கற்றுக்கொள்ளுகிறான். அவனை அழைத்துக்கொண்டு போவதில்லை என்று வாக்குக் கொடுப்பா யாயின், எங்கள் ஆட்சேபணையை மீட்டுக் கொள்ளுகிறோம்!" என்று கூறினார். அதன்மீது எனக்குக் கோபம் வந்து, 'நான் சத்தியமூர்த்தி யை அழைத்துக்கொண்டுதான் போவேன். நான் ஒரு முறை கூறிய மொழியினின்றும் தவறேன். வருவது வரட்டும், உம்மாலானதை, நீர் பாரும்!' என்றுபதில் கூறிவிட்டு விலகி வந்தேன். அதன்பேரில், ஏது நம்முடைய ஜபம் சாயாதுபோலிருக்கிறது! என்று, அந்த ஆட் சேபணையை விட்டார். இந்நண்பர் இன்னும் உயிருடன் இருக்கிற படியால் இவர் பெயரை இங்கு நான் எழுத எனக்கிஷ்டமில்லை.

பிறகு அங்கு போய்வருவதற்கு ஆக்டர்களைச் சேர்க்க வேண்டிய தாயிற்று. எங்கள் நிர்வாக சபையார் அவ்விடம் 5 நாடகங்களாவது கொடுத்தால்தான் செலவு கட்டிப்போகும் என்று தீர்மானித்தார்கள். அப்படி தீர்மானிக்கப்பட்ட நாடகங்கள், லீலாவதி சுலோசனை, மனோஹரன், காலவரிஷி, அமலாதித்யன், சாரங்கதரன்'; காலவரிஷி தவிர, மற்ற நான்கும் பெரிய நாடகங்களே. அவ்விடத்திற்குப் போ னால் நம்முடைய முக்கியமான நாடகங்களை ஆடிக்காண்பிக்கவேண்டு மென்பது எங்கள் கருத்து. இந்த ஐந்து நாடகங்களுக்கும் வேண் டிய ஆக்டர்களை ஒவ்வொருவராகச் சேர்க்க வேண்டியதாயிற்று; வக்கீல்களாகிய சிலருக்குத்தான் கோடைகால விடுமுறை இருந்தது மற்றவர்கள் உத்தியோகத்தி லிருந்தவர்களுக் கென்ன செய்வது? ஒவ்வொருவராக அவர்களை வரவழைத்து அவர்களையெல்லாம் வரும் படி சொல்லவேண்டியதாயிற்று; அதிலும், தற்காலம் எங்கள்சபை வெளியூருக்குப் போவதென்றால் சபையாரே ஆக்டர்களுடைய செலவையெல்லாம் ஏற்றுக்கொள்வதுபோல் அப்பொழுது இல்லை. ஆக்டர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் செலவைத் தாங்களே ஏற்க வேண்டியதாயிருந்தது. லங்கைக்கு வரவிரும்பும் ஒவ்வொருவரும் ரூபாய் 50 கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்தோம். இவ்வாறு ஒவ்வொரு ஆக்டரையும் 50 ரூபாய் கொடுத்து எங்களுடன் வரும் படிச்செய்ய வேண்டியதாயிற்று. எனக்கு ஞாபகமிருக்கிறவரையில் ஒரு ஆக்டரைத்தான் சபையின் செலவில் அழைத்துக்கொண்டு போனோம்; மற்றவர்கள் எல்லாம் தங்கள் பணத்தைக் கொடுத்தே

வந்தார்கள். பணம்கொடுப்பதன்றிப்பல ஆக்டர்கள், தங்கள் ஆபீசிலிருந்து விடுமுறை பெற்றுவர வேண்டியதாயிற்று. இதற்கு முன் இரண்டு மூன்று முறை எங்கள் சபை வெளியூருக்குப் போனபோது ஐந்தாறுநாள்தான் பிடித்தது, இம்முறை குறைந்த பட்சம் இரண்டு வாரம் விடுமுறைபெற வேண்டியதாயிற்று. ஒவ்வொரு முக்கியமான ஆக்டருக்கும் யார் மூலமாகப்போனால் லீவு கிடைக்கும் என்று யோசனைசெய்து, அவர்களைப் பிடித்து அவர்களுக்கு விடுமுறை வாங்கிக்கொடுத்தேன். சாதாரணமாக ஆபீசுகளில் லீவுகொடுப்பதே கடினம்; அதிலும் கொழும்புக்குப்போய் நாடகமாடுவதற்கு லீவுவேண்டுமென்று கேட்பது எளிதா என்று இதை வாசிக்கும் நண்பர்களே யோசித்துப்பார்க்கலாம். எங்கள் சபையில் முக்கியமான ஆக்டர்களில் ஒருவராகிய அ. கிருஷ்ணசாமி ஐயர் யாதுகாரணத்தினாலோ வர முடியாமல் போயிற்று. ஆகவே, பத்மாவதி வேஷத்திற்காக முக்கியமாக எஸ். பத்மநாபராவை அழைத்துக் கொண்டுபோக வேண்டியது அவசியமாயிற்று. அவர் "நாடகமாடுவதற்காக வெளியூருக்குப் போவதற்காக லீவு கேட்பதென்றால், என்னால் முடியாது, என் ஆபீசரிடம் நீங்கள்சொல்லி எனக்கு லீவு வாங்கிக்கொடுத்தால் வருகிறேன்!" என்று சொல்லி விட்டார். அதன்பேரில் அவரது ஆபீசரிடம் போய், 'பத்மநாபராவ் இல்லா விட்டால் எங்கள் சபை கொழும்புக்குப் போவதே நின்று விடும்!' என்று சொல்லி, நயமாகப் பேசி, இரண்டு வாரம் அவருக்கு லீவு வாங்கிக்கொடுத்தேன். சில ஆக்டர்களுடைய தகப்பன்மார்கள், அவ்வளவு தூரம் போவதென்றால் ஆட்சேபணை செய்வதாக அறிந்து, அவர்களிடமெல்லாம் போய், "இதில் ஒன்றும் அபாயமில்லை? நாங்கள் எல்லாம் போகவில்லையா" என்று நியாயங்கள் எடுத்துக் கூறி, அவர்களை யெல்லாம் சம்மதிக்கும்படிச் செய்யவேண்டியதாயிற்று.

இதிலெல்லாம் பெரிய கஷ்டம் என்னவென்றால், பிராம்மணர்களாயிருந்த சில ஆக்டர்கள் "தூத்துக்குடி யிலிருந்து கொழும்புக்கு ஒரு ராத்திரியெல்லாம் சமுத்திரத்தின் மீது போக வேண்டியதாயிருக்கிறது, அதற்கு எங்கள் பந்துக்கள் ஒப்ப மாட்டார்கள், பிறகு எங்களை ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுவார்கள், நாங்கள் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும் இந்தச் சங்கடத்திற்கு என்ன

செய்வது?" என்று ஆட்சேபித்தார்கள். அவர்களுக் கெல்லாம், 'சமுத்திரத்தின் மீதிருக்கும் போது நீங்கள் ஒன்றும், தாகத்திற்குக் கூடப் புசிக்க வேண்டியதில்லை. ஒரு ராத்திரியில் போய்ச் சேர்ந்து விடுவோம்!' என்று சொல்லி, அவர்களுடைய தகப்பன்மார் முதலிய பெரியோர்களைப் பார்த்து அவர்களை யெல்லாம் இசையும்படிச் செய்ய வேண்டியதாயிற்று. இவைகளை யெல்லாம் ஒருவாறு செய்து முடித்த பிறகு, எங்களுடன் சமையலுக்காகப் பிராம்மண சமையல்காரர்களை அழைத்தால் ஒருவரும் வரமுடியாதென்று சொல்லி விட்டார்கள்! "பிராம்மணர்கள் சமுத்திரத்தைத் தாண்டலாகாது, அதிலும் நாங்கள் சமயல் வேலை செய்பவர்கள், எங்களை ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுவார்கள், பிறகு எங்கள் ஜீவனமே போய் விடும்!" என்று வாஸ்தமாகச் சொன்னார்கள். இப்பொழுது சிலோன், ரங்கூன், சீமைக்குப் பிராம்மணர்கள் போய் வருவது சகஜமாய் விட்ட போதிலும், அக்காலம் மிகவும் அரிதாயிருந்ததென்றே சொல்ல வேண்டும். எனக்குத் தெரிந்தவரை, பிராம்மணர்கள் சிலோனுக்குப் போய் வந்தது மிகவும் அரிதாம். எங்கள் சபை ஒரு முறை போய்வந்த பிறகு அநேகம் சபைகள் போயிருக்கின்றன; நாங்கள் போய் வந்த சவுகர்யத்தைக் கண்டு மற்றவர்களும் போய் வருவது பிறகு சாதாரணமாய் விட்டது. ஆயினும் இவ் விஷயங்களிலெல்லாம், முதலில் கால் வைப்பவன் பாடுதான் கஷ்டம். அந்த வைஷ்ணவ பிராம்மணச் சமையற்காரர்களை வரவழைத்து, அவர்களுடன் பல நியாயங்கள் எடுத்துக் கூறியும் அவர்கள் இசையவில்லை. கடைசியாக, "வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் முதலியோர் எங்களுடன் வரப் போகிறார்கள்; அவர்களுக்கு என்ன கஷ்டம் வருகிறதோ, அது தானே உங்களுக்கும் வரப் போகிறது? அவர்களுக் காகிறது உங்களுக்காகிறது; நீங்கள் பயப்பட வேண்டாம். அப்படி ஏதாவது வந்தால் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்!" என்று சொன்னதின் பேரில், அவர்கள் ஒருவாறு இசைந்தார்கள்.

பிறகு எங்கள் படுதாக்கள், உடுப்புக்கள், முதலியவற்றை யெல்லாம், ரெயில் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் கொண்டுபோக ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று. நாங்கள் எடுத்துக் கொண்டு

போன சாமான்கள், துருவாக்கள் நிறைய இருந்ததென்றால், அவை களையெல்லாம் கட்டி ரெயில் மூலமாகவும் கப்பல் மூலமாகவும் கொண்டுபோய்க் கொண்டுவர எவ்வளவு கஷ்டமிருக்க வேண்டு மென்று இதைப்படிக்கும் நண்பர்கள் தீர்மானித்துக்கொள்ளலாம். அன்றியும் சபையின் அங்கத்தினர் ரெயில் மூலமாகவும் கப்பல் மூல மாகவும் குறைந்த சார்ஜில் (அரை சார்ஜில்) போய்வர மேல் அதிகாரி களுக்கு எழுதி உத்திரவுபெற வேண்டியிருந்தது; இதிலெல்லாம் எனது நண்பர் பி. எஸ். தாமோதர முதலியார் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு உதவினார். இவ்விஷயத்தில் இந்தப் பிரயாணத் திலும், பிறகு சபை போன அநேகம் பிரயாணங்களிலும் இவர் சபைக்காக எடுத்துக் கொண்ட சிரமமானது என்றும் மறக்கற்பால தன்று. தற்காலம் உலகவின்பத்தைத் துறந்து சன்யாசியாக வசித்து வரும் இவருக்கு என்றும் எங்கள் சபை நன்றியறிதலுடைய தாயி ருக்கவேண்டும். இவ்வேற்பாடுகள் எல்லாம் செய்த பொழுது இரவென்றும் பகலென்றும் பாராமலும் நித்திரையென்றும் பசி யென்றும் பாராமலும் இவர் உழைத்தது ஈசனுக்குத் தான் நன்றாய்த் தெரியும்; எனக்கும் கொஞ்சம் தெரியும். இது ஒரு கஷ்டமா என்று கூறுவார்கள் சிலர்; இம்மாதிரியாக, ஒரு நாடக சபையை ஒரு ஊருக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டிய ஏற்பாடுகள் செய்து பார்த்தால் அப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியும்.

இவைகளையெல்லாம் ஏற்பாடு செய்த பிறகு, முன்னதாகக் கொழும்புக்குப் போய், அங்கு நாங்கள் தங்கியிருப்பதற்கு வேண்டிய வசதி முதலியவற்றைப் பேசிவைப்பதற்கும், நாடக விளம்பரங்கள் முதலியவற்றைப் பிரசுரம் செய்வதற்கும், யாரையாவது உடனே அனுப்பவேண்டுமென்று, எனது கொழும்பு நண்பர் எழுதினார். அதன்பேரில் எனதுயிர் நண்பர் சி. ரங்கவடிவேலுவையும், யாழ்ப் பாணத்தில் பிறந்தவராகிய ஜெ. பி. ஷண்முகம் பிள்ளையையும், முன்னதாக அனுப்பிவைத்தேன். இவர்களிருவரும் முன்னதாகப் போய்ச் சேர்ந்து எங்களுக்கு இருப்பிடம் முதலியன வெல்லாம் ஏற்பாடு செய்து வைத்தனர். எனதுயிர் நண்பர் தினம் எனக்கு அங்கிருந்து கார்கிதம் எழுதிக்கொண்டிருந்தார். அக்காகிதங்களில் நமது நாடகங்களுக்கு வசூலாவது நமது செலவுக்குக்கட்டிவருமோ

என்னமோ எனக்கு சந்தேக மாயிருக்கிறதெனப் பன்முறை தெரிவித்தனர். சென்னையிலிருந்த எனது நண்பர்களும் இப்பெரிய பிரயாணத்தை எடுத்துக்கொண்டோமே, சபைக்கு இதனால் பெரும் நஷ்டம் வந்தால் என்ன செய்கிறதென மிகவும் பயந்தனர். வாஸ்தவத்தில் எனக்கும் பயமாகத்தானிருந்தது. இப்படியிருக்கும் தருவாயில், நாங்கள் புறப்படுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன், ஒரு நாள் எனக்கு ஒரு தந்தி வந்தது. 'ஐந்து நாடகங்களுக்கு 2500 ரூபாய்க்கு ஒருவர் கண்டிராக்ட் எடுத்துக் கொள்வதாகச் சொல்லுகிறார். அதை ஒப்புக்கொள்ளவா?' என்று; நான் மிகவும் சந்தோஷப் பட்டவனாகி, எமது நிர்வாக சபை அங்கத்தினர்க்கு அதைக் காண்பித்துக்கேட்க, எல்லோரும் மிகவும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டனர். நாங்கள் வரவு செலவு கணக்குப் பார்த்ததில், நாடகம் ஒன்றிற்கு 500 ரூபாய் வந்தால், நஷ்டமின்றிச் சரியாகப் போகும் என்று கணக்கிட்டிருந்தோம். ஆகவே மேற்கண்டபடி ஒருவர் கண்டிராக்ட் எடுத்துக்கொண்டால் நமக்கு நஷ்டமேயிராது என்று குதூஹலத்துடன் சம்மதித்தோம். அதன்படியே இங்கிருந்து தந்தி கொடுத்து அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டோம். நஷ்டம் வருமே என்கிற பயம் இதனால் அடியுடன் தீர்ந்தபோதிலும், மற்ற ஏற்பாடுகளெல்லாம் இரவு பகலாகச் செய்யவேண்டி யிருந்தது. அச்சமயம் எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் கோடைக்கானலுக்குத் தேக சௌக்கியத்திற்காகப் போயிருந்தார். அவருக்கு “நீ உடனே திரும்பிப் பட்டணம் வந்து சேராவிட்டால், எனக்குப் பயித்தியம் பிடித்துப்போம்!” என்று தந்தி கொடுத்து அவரை நான் வரவழைத்தது எனக்கு ஞாபகமிருக்கிறது.

பிறகு எல்லா ஏற்பாடுகளையும் முடித்துக்கொண்டு ஒரு புதன் கிழமை இங்கிருந்து புறப்பட்டோம். யாரோ, வியாழக்கிழமை வாரசூலை, ஆகவே வியாழக்கிழமை புறப்படக்கூடாதென்று சொன்னார்கள். இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், யாராவது இது நல்லதல்லவென்று ஏதாவது சொன்னால் அவர்கள் மனம் கோணாதபடி அவர்களிஷ்டப்படியே நடப்பது என் வழக்கம். சென்னையிலிருந்து தூத்துக்குடி போய்ச்சேர 24-மணி நேரம் பிடித்தது. ரெயில் பிரயாணத்தில் ஒரு கஷ்டமுமில்லை; அவ்வூருக்கு

சிநேகிதர்களுக்கு முன்னதாக எழுதி, உணவு முதலியவற்றை யெல்லாம் ஏற்பாடு செய்து வைத்திருந்தோம். தூத்துக்குடியி லிருந்து கப்பல் யாத்திரையில்தான் மிகவும் கஷ்டப்பட்டோம். என்னுடன் வந்த சுமார் 40 பெயர்களில் ஒருவராவது இதற்கு முன் சமுத்திரத்தின் மீது பிரயாணம் செய்ததில்லை. போதாக் குறைக்குத் தூத்துக்குடி ஆர்பரிலிருந்து, எங்களை ஏற்றிக்கொண்டு போகவேண்டிய கப்பலானது ஒருமைலுக்கு அப்பால் தங்கியிருந் தது ; அதைப் போய்ச்சேர ஸ்டீம்லான்ச்சில் போகவேண்டியிருந் தது. இதில் நாங்கள் இத்தனை பெயரும் எங்கள் சாமான்களுடன் ஏறிப்புறப்பட்டவுடன், அலைகள்மோத ஆரம்பிக்க, இந்த லான்சா னது மேலும் கீழுமாக ஆடத் தலைப்பட்டது. பயங்காளிகளா யிருந்த சில அங்கத்தினரும், எங்களுடன் வந்த சில வேலைக்காரர் களும் அழத்தொடங்கினார்கள் ! அவர்களுக்கெல்லாம் தைரியம் சொன்ன போதிலும் எனக்கும் பயமாகத்தானிருந்தது. அப்பொ ழுது நடந்த ஒரு சிறு சமாசாரத்தை இங்கெழுதுகிறேன். நான் கொஞ்சநேரம் கண்களை மூடிக்கொண்டிருக்க, என் பக்கத்தில் உட் கார்ந்திருந்த ஒரு நண்பர், நான் கண்விழித்தவுடன், 'ஏன் கண்ணை மூடிக்கொண்டிருந்தீர்கள் ? என்று கேட்க, "இத்தனை பேரும் என்னை நம்பி இப்பிரயாணத்திற்கு உடன்பட்டிருக்கிறார்கள்; இவர்களை யெல்லாம் இப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு, சுக மாய் அவரவர்கள் வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கும்படி யாக, ஸ்வாமியைக் குறித்துப் பிரார்த்திக்கிறேன்" என்று உண் மையை உரைத்தேன்.

ஸ்டீம் லான்சிலிருந்து கப்பலைப் போய்ச் சேர்ந்தவுடன், இந்தக் கஷ்டம் ஒழிந்தது என்று எல்லோரும் சந்தோஷித்தார்கள். ஆயி னும் இனி வரப்போகிறதை அறிந்தவனாய், எல்லோரையும் ஜாக்கிர தையாயிருக்கும்படி எச்சரித்து விட்டு, என் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டேன். இதைக்கண்டு என்னைப் பயங்காளி என்று ஏளனம் செய்து விட்டு, எல்லோரும் கப்பலின் மேல் பாரிசத்தி லிருந்து கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். முதலில் ஒரு கஷ்டமுமில்லாவிட்டாலும், கப்பல் வேகமாய்ப்போக ஆரம் பித்தவுடன் கப்பல் மேலும் கீழுமாய் அலைக்கப்பட, ஏறக்குறைய

ஒருவர் தவறாமல் வாந்தியெடுத்து கீழே அவரவர்களுடைய படுக்கைக்கு வந்தனர். எனக்கு ஞாபகமிருக்கிற வரையில் நான் ஒருவன்தான் வாந்தி எடுக்காதவன். இந்த வாந்திக்கு சீ சிக்னெஸ் என்று பெயர். இது சாதாரணமாக முதல் முறை கடல் யாத்திரை செய்பவர்களுக்கெல்லாம் காணுவதுண்டு. இதற்கு அநேகம் பெயர் அநேகம் சிகிச்சை சொல்லுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில், கடல் பிரயாணம் சகஜமாகிற வரையில், உணவை மிதமாக்கி, கப்பல் மிகவும் அதிகமாய் அசையும் பொழுது பேசாது படுக்கையில் படுத்துக்கொண்டிருப்பது தான் தக்க சிகிச்சை. ஆயினும் இதை வாசிக்கும் எனது நண்பர்கள், இந்த வாந்திக்காகப் பயப்படவேண்டியதில்லை. இப்படி வாந்தி யெடுத்துவிட்டால், உடலிலிருக்கும் பித்த ஜலமெல்லாம் போய், உடம்பிற்கு ஆரோக்கியத்தையே தருகிறது. நான் மூன்று முறை தூத்துக்குடியிலிருந்து கொழும்பிற்குப் போயிருக்கிறேன். அம்முறைகளிலெல்லாம், அக்கப்பல் தலைவர்களைக் கேட்டதில், அவர்கள் எல்லோரும், ஆசியா கண்டத்தில் கப்பல் யாத்திரை செய்யும் பொழுது, சமுத்திரத்தை இவ்விடத்திற்கடப்பது மிகவும் கடினமானது; முக்கியமாக அரேபியன் சமுத்திரமும், வங்காளக்கடலும் கலக்கிற இடத்தில், கப்பலானது மிகவும் கலகப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். போதாக்குறைக்கு இம்முறை, கப்பலின் பங்கில் (படுக்கையறையில்) என்னுடன், படுத்திருந்தவர் ஒரு கோமுட்டிச் செட்டியார்; கோமுட்டிகளெல்லாம் பயங்காளிகள் என்று நான் சொல்லவரவில்லை. ஆயினும் "முதலியார் ஜம்பம்!" என்று முதலியார்களைப் பற்றிச் சொல்வதுபோல், பயங்காளி கோமுட்டி என்று ஒரு வழக்கச் சொல் உண்டு. அந்தப் பழமொழிக்கு ஒத்த குணமுடையவர் என்னுடனிருந்த செட்டியார் (அவர் பெயரை இங்கு நான்வெளியிட இஷ்டமில்லை.) அவர் கண்களில் நீர் ததும்ப, 'சம்பந்தம்! நீதான் எப்படியாவது என்னைக் காப்பாற்றி, என் பெண்சாதி பிள்ளைகளிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கவேண்டும்!" என்று அழ ஆரம்பித்தார். அவருக்குச் சமாதானம் சொல்வது என்பாடு போதுமென்றாயிற்று. பிறகு "இரவு எவ்வளவு நீடித்திருந்தாலும் பொழுது விடியவேண்டிய காலம் வந்துதான் தீரவேண்டும்!" என்

றும் மூழ்கியொழிக்கிசைய, அதிகாலையில் கொழும்புத் துறைமுகம் போய்ச் சேர்ந்தோம். கப்பல் ஆட்டம் நீங்கி, நிம்மதியடைந்தோம். கொழும்புத் துறைமுகத்தின் நிபந்தனைகளின் பிரகாரம், எங்கள் சாமான்களையெல்லாம் பரிசோதித்து, எங்களையும் வைத்தியர்கள் பரிசோதித்த பிறகு தான் நாங்கள் கப்பலைவிட்டு இறங்கவேண்டிய தாயிற்று. இதற்குள்ளாக, எனதுயிர் நண்பர் ரங்கவடிவேலுவும், கொழும்பில் பெரிய வக்கீலாயிருந்த—நான் முன்னே கூறியபடி எங்களைக் கொழும்பிற்கு வரும்படி அழைத்த—சர் ராமநாதன் என்பவரின் மூத்த குமாரரான, ராஜேந்திரா என்பவரும் வந்து சேர்ந்தார்கள். அவரது உதவியினால் எங்கள் சாமான் பரீட்சையும், வைத்தியப் பரீட்சையும் சீக்கிரத்தில் முடிந்தது.

பிறகு கப்பலிலிருந்து போட்டுகளி (படகுகள்)ல் இறங்கி, பியர் போய்ச் சேர்ந்தோம், அங்கு போய்ச் சேர்ந்தவுடன் நாங்கள் கப்பல் யாத்திரையிற்பட்ட கஷ்டத்திற்கெல்லாம் பரிஹாரம் கிடைத்தது. யாழ்ப்பாணத்து வாசியாகிய, லங்கைத்தீவில் மிகவும் மதிப்பைப்பெற்ற சர். கனக சபையவர்களை முன்னிட்டு, கொழும்பில் உள்ள நூற்றுக்கணக்கான பெரிய மனிதர்கள் நகை முகத்துடன் எங்களை நல்வரவழைத்தனர். சர். கனகசபை, இந்தியாவிலிருந்து, தமிழராகிய நமது சகோதரர்கள் லங்கைக்கு வருகிறார்கள்; முதன் முறை ஆதலால் அவர்களை நாம் துறைமுகம் சென்று நல்வரவழைக்க வேண்டுமென்று, கொழும்பிலுள்ள பெரியமனிதர்களுக்கெல்லாம் எழுதி, அவர்களை வரும்படிச் செய்தனராம். இச் சீமான் இப்பொழுது காலமாய் விட்டார். அப்படியிருந்தும், அன்று அவர் எங்கள் சபையோருக்குச் செய்த மரியாதையானது அவரை இன்னும் நான் மறவாதிருக்கும்படிச் செய்கிறது.

இவ்வாறு நாங்கள் எல்லாம் நல்வரவழைக்கப்படவே, ஸ்வாமியின் கருணையினால் ஆரம்பம் திருப்திகரமாயிருக்கிறது, முடிவுவரை இப்படியேயிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, எனது நண்பர்களுடன், எங்களுக்கு ஏற்படுத்திய விடுதிக்குப் போய்ச்சேர்ந்தேன். போய்ச்சேர்ந்து எனது காலைக்கடனை முடித்துக்கொண்டு, தாகத்திற்குச் சாப்பிட்டவுடன், எனக்குக் கொழும்பில் நாடின

மாய்க் கிடைத்த நண்பர்களில் ஒருவராகிய சதாசிவம் என்பவர், என்னை ஒரு பக்கமாக அழைத்துக்கொண்டுபோய், "நீங்கள் உங்களுடைய ஐந்து நாடகங்களையும் 2500 ரூபாய்க்குக் கண்டிராக்டாக விட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன்; இதோ ஒருவர் அந்த ஐந்து நாடகங்களுக்கும் 3000 ரூபாய் தருவதாக, செக்குடன் வெளியில் காத்துக்கொண்டிருக்கிறார். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். அதன் பேரில் காற்று நமக்கு அனுகூலமாய்த்தான் அடிக்கிறது என்று சந்தோஷப்பட்டவனாயினும், ஒரு முறை வாக்குக் கொடுத்தபின் அதனை மாற்றுவது நியாயமல்ல, முடியாதென்று அவருக்குப் பதில் உரைத்து, செக்குடன் வந்தவரை அனுப்பி விடச் செய்தேன்.

பிறகு அன்று காலை முதல், சபை கொழும்புவை விட்டுத் திரும்பிய வரையில், எங்களைப்பார்க்க அந்நகரவாசிகளில் அநேகர் ஒருவர் மாறி ஒருவராய் வந்து கொண்டிருந்தனர் என்று சொல் வேணுமின் அது பொய்யாகாது. சாப்பிடுகிறவேளை உறங்குகிற வேளை தவிர யாராவது வந்து பேசிக்கொண்டிருப்பார்கள். அன்று மத்தியானம், முன்னாள் இரவு தூங்காததற்காக, நானும் தூங்கி எனது ஆக்டர்களையும் தூங்கச் சொல்லிவிட்டு, பிறகு சாயங்காலத்திற்குமேல், அங்குள்ள சிவன் கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வந்தோம். இந்த வழக்கம் இப்பொழுதும் எங்களுக்குண்டு. யாதாமொரு ஊருக்குப்போனால், அன்று சாயங்காலம் நாடகமில்லா விட்டால் எல்லா ஆக்டர்களுமாக அங்குள்ள முக்கியமான கோயிலுக்கு, சிவன் கோயிலோ, விஷ்ணு கோயிலோ, போய் தரிசித்துவிட்டு வருவோம். நான் அன்று கோயிலுக்குப் போனபோது சிவபெருமானுக்குச் செய்துகொண்ட பிரார்த்தனை என்னவென்றால், எப்படியாவது சிங்களவாசிகள் மனதை எங்கள் சபையார் திருப்தி செய்யும்படிச் செய்ய வேண்டுமென்பதே. இவ்வாறு நான் பிரார்த்தனை செய்ததற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. இவ்விடத்தில் எங்களுக்குப் புதிதாய் ஏற்பட்ட சிநேகிதர்களுள் பலர், காலையில் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது, உங்கள் சபையைப்பற்றி நாங்கள் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறோம், என்று புகழ ஆரம்பித்தார்கள். அவர்களுள் ஒருவர்

கூறியவார்த்தைகளை மாத்திரம் இங்கு எழுதுகிறேன்; சதாசிவம் என்பவர், "சில வருஷங்களுக்குமுன், நாராயணசாமி பிள்ளை, (இவர் சுப்பராயாசாரி கம்பெனி உடைந்து போன பிறகு, பிரத்யேகமாக ஒரு கம்பெனி ஏற்படுத்திப் பல நாடகங்களை நடத்திக் கீர்த்தியும் பணமும் சம்பாதித்தவர். இவர் இலங்கைத்தீவில் பல நாடகங்கள் நடத்தி ஏராளமான பொருள் சம்பாதித்தவர்) உங்கள் சபையைப் பற்றிச் 'சுகுண விலாஸ சபையார் ஏறிய நாடகமேடையின்பேரில் நாங்கள் ஏற ஏலாது!" என்று புகழ்ந்திருக்கிறார்!" என்றார். இது போன்ற பலவார்த்தைகளைக் கேட்டபொழுது, என்னடா இது இவர்கள் எல்லாம் நம்மைப்பற்றி மிகவும் அதிகமாக எண்ணிக் கொண்டிருக்கிறாற் போலிருக்கிறதே! அவர்கள் எண்ணுவதற்குக் குறையாதபடி அவர்கள் மனதைத் திர்ப்தி செய்விக்க வேண்டுமே! என்னும் பீதி என்னைப் பற்றிக்கொண்டது.

மறுநாள் காலை நாடகசாலைக்கு, படுதாக்களெல்லாம் சரியாகக் கட்டியிருக்கின்றதா என்று, என் வழக்கம் போல் பார்க்கப்போன போது, சைட்படுதாக்களும் மேல் ஜாலர்களும் கட்டச் சௌகர்ய மில்லாதிருக்கிறதென்று, எங்கள் ஆள் சொன்னான். அதன் பேரில் என்ன செய்வது என்று கலங்கியவனாய், எனக்குத் தோன்றிய இரண்டொரு யுக்திகளைச் சொல்லி விட்டு, அந்த ஆளிடம் உன்னா லானதைப் பார் என்று சொல்லிவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்தேன். சாதாரணமாகவே, வேறு ஊருக்குப் போய் முதல் முதல் ஏதாவது நாடகமாடுவதென்றால், எனக்கு, எப்படிமுடியுமோ என்கிற பயமுண்டு. இதனுடன் மேற்சொன்ன காரணங்களும், ஒன்றாய்க் கூடவே, என் பாடு கஷ்டமாகி விட்டது. இம்மனக் குழப்பத்தில் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டு யார் வந்து என்னுடன் பேச வந்தாலும் "சிடு சிடு" என்று பேச ஆரம்பித்தேன்; இம்மாதிரியாக எனக்கிருக்கும் சமயங்களிலெல்லாம், எனதுயிர் நண்பர், "இப்பொழுது வாத்தியாரிடம் ஒருவரும் கிட்டப் போகாதீர்கள். அவருக்குப் பிசாசு பிடித்திருக்கிறது" என்று, வேடிக்கையாய்ச் சொல்லுவார். கொஞ்ச நேரம் பொறுத்து, இதற்கெல்லாம் நாம் கவலைப்படுவானேன்? ஸ்வாமியிருக்கிறார் என்று அவர்மீது பாரத்தைச் சுமத்தி விட்டு, எழுந்திருந்து போய் எனது நண்பர்களுடன்

கலந்து பேச ஆரம்பித்தேன். அவர்களெல்லாம் "பிசாசு விட்டுப் போய்விட்டதா? இனி பேசலாம்" என்று ஏளனம் செய்தார்கள். இப்படி நடப்பது எங்கள் சபை வெளியூருக்குப் போகும்போதெல்லாம் எனக்குச் சாதாரணமாகி விட்டது. இது தவறல்லவா என்று இதை வாசிக்கும் எனது நண்பர்கள் என்னைக் கேட்கவேண்டியதில்லை. தவறென அறிந்தும் அதைத் தவிர்க்க அசக்தனாயிருக்கிறேன் என்றுதான் நான் பதில் உரைக்கக்கூடும்.

பிறகு, ராத்திரி நாடகமான படியால், ஆக்டர்களெல்லாம் 5 மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு, வேஷம்தரிக்க அருகிலிருந்த நாடக சாலைக்கு நடந்துபோனோம். பிறகு நாங்கள் எல்லாம் வேஷம் தரித்துக் கொண்டிருக்கும் பொழுது, அந்த நாடகசாலையின் பழக்கப்படி, நாடக ஆரம்பத்திற்கு ஒரு மணிக்குமுன், நாடகசாலையின் வெளிக் கதவுகளைத் திறக்க, ஒரே கும்பலாய் ஜனங்கள் நுழைய ஆரம்பித்தார்கள். இதை நான் பார்த்தறிந்தவனல்ல, கேட்டறிந்தேன். ஏதாவது நாடகத்தில் நான் ஆடுவதானால், நான் மேடையின் மீது வருகிற வரையில், ஜனங்கள் வந்திருக்கிறார்களா? எத்தனை பெயர் வந்திருக்கின்றனர்? இவைகளை யெல்லாம் கவனிக்கக்கூடாது என்கிற ஒரு கோட்பாடுடையவன் நான்; இதைப்பற்றி என் நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன் முன்னமே என்று நினைக்கிறேன். பத்து பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் ரிசர்வ் பண்ணியிருந்த நாற்காலிகள் தவிர மற்ற இடமெல்லாம் நிரம்பிவிட்டது என்று இதே வேலையாகப் பார்த்துக்கொண்டிருக்கும் வழக்கமுடைய சில நண்பர்கள் எனக்குத் தெரிவித்தனர். உடனே வெளியில் டிக்கட்டாபீசிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த, எங்கள் சபை பொக்கிஷதாரராகிய வ. ரங்கசாமி ஐயங்கார் உள்ளே நான் வேடம் தரித்துக் கொண்டிருக்கும் இடம் வந்து, "சம்பந்தம் சம்பந்தம்! பாவி! ஏமாந்து போனாயே? நாடகம் ஒன்றிக்கு ஐந்நூறு ரூபாய்க்கு கன்டிராக்டு விட்டு விட்டாயே! இன்றைக்கு மாத்திரம் ஆயிரம் ரூபாய் சம்பாதித்து விட்டானே!" என்று என்னை வைய ஆரம்பித்தார்! இதில் வேடிக்கை யென்னவென்றால், இந்த மெம்பர்தான், சென்னப் பட்டணத்திலிருந்த பொழுது நாடகம் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்குக் கண்டிராக்ட் கேட்கிறார்கள் ஒப்புக்கொள்ளலாமா,

என்று சண்முகவேலு தந்தி கொடுத்த பொழுது, "கட்டாயமாய் ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சபைக்குப் பெரும் நஷ்டம்வரும்" என்று வற்புறுத்தினவர்! அன்றைத்தினம் ஆயிரத்து நானூற்றுச் சில்லரை ரூபாய்க்கு மேல் வசூல் ஆயிற்று என்று கண்டிராக்டரே என்னிடம் ஒப்புக்கொண்டார். எனக்கிருந்த சந்தோஷமெல்லாம் சபைக்கு நஷ்டமில்லாமற் போனதுமன்றி, கண்டிராக்டரும், இந்தச் சபை நாடகத்தைக் கண்டிராக்ட் எடுத்தோம், நமக்கு இவ்வளவு நஷ்டமுண்டாயிற்று, என்று துக்கிக்காதபடி அவரும் சந்தோஷப்படும்படி நேர்ந்ததே என்பதேயாம். இப்படி ஏராளமான ஜனங்கள் வருவார்களென்று லங்கைத் தீவுவாசிகளான எங்களது புதிய நண்பர்களே, தாங்கள் நினைக்க வில்லை என்று ஒப்புக்கொண்டனர். இவ்விஷயத்தில் ஒரு சிறுகதை. அந்த நாடகசாலையை மொத்தத்தில் சில வருஷங்களுக்கு வாடகைக்கு வாங்கிக்கொண்டு நடத்தி வந்தவர் வார்விக் மேஜர் என்பவர்; பிறகு இவர் "சர்" பட்டம் பெற்றார். இவரிடம் போய் எனது உயிர் நண்பர் நாடகசாலையை 5 நாடகங்களுக்கு வாடகைக்குக் கேட்டபொழுது "நான் சாதாரணமாகத் தினத்திற்கு நூறு ரூபாய்க்குக் குறைந்து விடுவதில்லை. ஆயினும் நீங்கள் வெளி ஊரார். உங்களுக்கு அதிகப் பணம் வசூலாகாது. ஆகவே தினம் ஒன்றிற்கு எழுபத்தைந்து ரூபாய்க்கு விடுகிறேன்" என்று சொல்லி, அப்பணத்தை முன்னதாகவே, தங்களுக்குக் கட்டிவிடவேண்டு மென்று நிர்ப்பந்தித்தாராம்; பிறகு இவர்களிடமிருந்து வசூலாவது கடினம் என்று எண்ணினர் போலும்! இவருக்குத் தமிழ் பாஷை தெரியாதிருந்த போதிலும், நாடகத்தின் கடைசி வரைக்கும் இருந்து மிகவும் நன்றாய் இருக்கிறதெனப் புகழ்ந்ததாகக் கேள்விப்பட்டேன். இவர் என்னைப் பற்றிச் சொன்ன சிறு சமாசாரத்தை இங்கு எழுதுகிறேன். இவ்விடம் நாங்கள் முதல் நாடகமாக ஆடினது "லீலாவதி சுலோசனை" இதில் நான் மூன்றாவது காட்சியில்தான் முதல் முதல் வருகிறேன். அதிலும் அக்காட்சியில் நான் செய்யவேண்டியதெல்லாம் ரங்கத்தின் ஒருபுறமிருந்து மற்றொரு புறம் நடந்து போக வேண்டியதுதான். அப்படி நடந்து சென்றதை வெளியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வார்விக் மேஜர் தன் பக்கத்திலிருந்த

சதாசிவம் என்பவரைப் பார்த்து, "இது யார் இந்தச் சிறுவர்? நல்ல ஆக்டர்போல் தோன்றுகிறாரே" என்று கேட்டாராம். அதற்கு எனது நண்பர், "அவர் தான் சம்பந்தம்! உங்களுக்குத் தெரியாதா?" என்று பதில் உரைத்தனராம். இதை அந்த சதாசிவம் என்பவரே என்னிடம் மறுநாள் தெரிவித்தார். "அந்தச் சிறுவருக்கு, வயது 38 ஆகிறது என்றும் கூறியிருக்கக் கூடாதா?" என்று சொல்லி நான் சிரித்தேன்.

மேற் சொன்னபடி ஏராளமான ஜனங்கள் வந்திருக்கிறார்களே என்கிற சந்தோஷம் ஒரு புறம் இருக்க, இதில் மாத்திரம் என்ன பிரயோஜனம் இவர்களெல்லாம் திருப்திகரமாயிருக்கிறதெனச் சந்தோஷப் பட்டாலொழிய என்ன பிரயோஜனம், என்று எண்ணினவனாய், முதற் காட்சி ஆரம்பிக்கும் பொழுது, முதல் ஸைட்படுதா பின்னால் நின்றுகொண்டு சபையோரைப் பார்க்கா விட்டாலும், அவர்கள் நாடகத்தை எப்படி அங்கீகரிக்கிறார்கள் என்று மிகவும் கவனித்து வந்தேன். முதல் காட்சியின் ஆரம்பத்தில், மேடைமீது பத்மநாபராவ், ஸ்ரீனிவாசராகவாச்சாரி, ரங்கவடிவேலு, வடிவேலு, ராமகிருஷ்ணையர் ஆகிய இந்த ஐவரும் ஸ்திரீ வேஷத்தில் தோன்றுகின்றனர். அக்காலத்தில் இவ்வைந்து பெயரும் நல்ல யௌவனத்தில் இருந்தவர்கள். ஸ்திரீ வேஷத்திற்கு மிகவும் பொருத்தமுடையவர்கள்; முக்கியமாக வெங்கடாசல ஐயர் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு இவர்களுக்கெல்லாம் மிகவும் அழகாக வேஷம் போட்டிருந்தார். விநாயகர் ஸ்துதி, சரஸ்வதி துதி முடிந்து, டிராப்படுதா மேலே போனவுடன் இவ்வுருவங்களைக் கண்டதும், வந்திருந்த சபையோர் சந்தோஷப்பட்டனர் என்பதை, அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலுடன் பேசிக்கொண்ட சப்தத்தினால் கண்டறிந்தேன். அன்றியும் இன்னின்ன நாடகத்தில் இன்னின்ன சந்தர்ப்பத்தில் சபையோர்கள் சந்தோஷப்படவேண்டும் என்று எனக்கு ஒரு நியதியுண்டு. அவ்வண்ணமே, அம் முதற் காட்சியில் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் சபையோர் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்தது, எனக்கு சந்தோஷமுண்டாக்கியது. எனக்கு ஏதோ மிகுதியாயிருந்த கொஞ்சம் சந்தேகமும், முதற் காட்சியின் முடிவில், டிராப்படுதா இறங்கிய பொழுது, வந்திருந்தவர்கள் அனை

வரும் செய்த கரகோஷத்தினால், முற்றிலும் நிவர்த்தியாயது. மறு நாள் சர். ராமநாதனுடைய மூத்தகுமாரர் ராஜேந்திராவுடன் நான் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவர் "நாடகத்தின் முதற் காட்சி முடிந்தவுடன், உங்கள் சபை இவ்வூரார் மனதைத் திர்ப்தி செய்வதைப்பற்றி எங்களுக்குச் சிறிதும் சந்தேகமில்லாமற் போயிற்று!" என்று எனக்குத் தெரிவித்தார்.

அன்றிரவு நடந்த நாடகத்தில் சங்கீதத்தில் லீலாவதியாக நடித்த ஸ்ரீனிவாசராகவாசாரியும், கமலாகரனாக நடித்த பாலசுந்தர முதலியாரும் நல்ல பெயர் பெற்றார்கள். ஸ்ரீனிவாசராகவாசாரி அப்பொழுதுதான் கொஞ்சம் ஸ்தூல சரீரமுடையவராக ஆரம்பித்தார். ஆயினும் அவர் ஸ்திரீ வேஷத்தில் நடித்தது கொழும்பு வாசிகளால் மெச்சப்பட்டது. ஆயினும் நாடகம் பார்க்க வந்தவர்களின் மனதையெல்லாம் கவர்ந்தவர் எனதாருயிர் நண்பராகிய சி. ரங்கவடிவேலுவே. கொழும்பு ஜலம் அவர் உடம்பிற்கு ஒப்புக்கொள்ளாததினாலேயோ அல்லது அச்சமயம் லங்கைத்தீவில் மழைகாலமாதலால் அம்மழையில் நனைந்ததினாலேயோ எக்காரணத்தினாலேயோ அவருக்குத் தொண்டை நன்றாய்க் கட்டிக்கொண்டது. நம்முடைய பூர்வீகக் கவிராயர்கள் வேடிக்கையாகக் கூறுவதுபோல், அவருக்குக் கம்மல் காதிலுமிருந்தது, தொண்டையிலுமிருந்தது. இதனால் அவர் ஒரு பாட்டும் பாட முடியாமற்போயிற்று. எவ்வளவோ இதற்காகச் சிகிச்சை செய்து பார்த்தும் பாட முடியாமற் போயிற்று. இருந்தும் அவர் சுலோசனையாக நடித்தது எல்லோரையும் மிகவும் சந்தோஷிக்கச் செய்தது என்பதற்குத் தடையில்லை. அவர் "ரோஜாப்பூ காட்சி" என்று சொல்லப்படும் இந்நாடகத்தின் மத்தியில் வரும் ஒரு காட்சியில், நடித்தபொழுது வந்திருந்தவர்கள் கரகோஷம் செய்தது இன்னும் என் செவியில் தொனிக்கிறது போலிருக்கிறது. இந்த ஒரு இடத்தில் மாத்திரமன்று; அவர் வந்த காட்சிகளில் முக்கியமான சந்தர்ப்பங்களிலெல்லாம் இடைவிடாது கரகோஷம் செய்தனர் என்று கூறுவது கொஞ்சமேனும் மிகையாகாது. ஒரு முறை சபையோரின் மனதைக் கவர்ந்துவிட்டால், அவர்களுக்கு இதுதான் சந்தோஷத்தைத் தரும், இது தராது என்பதிடையாதுபோலும். இதற்கப்புறம் இங்கு இவர் நடித்த நான்கைந்து

நாடகங்களில் புதுச் சேலைகளைத் தரித்துக்கொண்டு மேடையின்மீது தோன்றும் போதெல்லாம் கரகோஷம் செய்தது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. நான் ஏதோ எனது ஆருயிர் நண்பனை அதிகமாகப் புகழ்கிறேன் என்று இதை வாசிக்கும் நண்பர்கள் நினைக்கலாகாது. அவர் கொழும்பு வாசிகளின் மனதைக் கவர்ந்ததற்கு ஒரு உதாரணத்தை மாத்திரம் இச்சந்தர்ப்பத்தில் எடுத்து எழுதுகிறேன். அன்றைத்தினம் நாடகம் பார்க்க வந்தவர்களுள், இலங்கை தீவில் மிகவும் கியாதி பெற்றிருந்த ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர், பன்முறை விவாகம் புரியும்படி நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்த தன் தாயாரிடம் போய், "நான் சுலோசனாவைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன்!" என்று சொன்னாராம். இதை அவரது தங்கை யாகிய ஒரு மாதரசியே என்னிடம் பிறகு சொல்லக்கேட்டேன்.

ஹாஸ்ய பாகத்தில் எம். துரைசாமி ஐயங்கார் நன்றாக நடித்ததாகச் சொன்னார்கள். அவர் இந்நாடகத்தில் 'அவசரப்படேல்' காட்சி யென்று வழங்கும் ஒரு காட்சியில் சாதாரணமாக மிகவும் நன்றாய் நடித்து எல்லோரையும் சிரிக்கச் செய்வார். இவர் இங்கு இக்காட்சியை நடித்த பிறகு சில தினங்கள் வரையில், இவரைக் கொழும்பு நேசர்கள் பார்த்தால் 'அவசரப்படேல்' என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

நானும் நன்றாக நடித்ததாக என்னிடம் சொன்னார்கள். அன்றிரவு நாடகம் முடிந்தவுடன் எங்களுடைய புதிய நண்பர்களெல்லாம், ஒருவர் பாக்கி யில்லாமல், உள்ளே வந்து எங்களையெல்லாம் புகழ்ந்து சந்தோஷிக்கச் செய்தனர். இந்நாடகமானது, சர். ராமநாதத்தின் தாயாதியாகிய சர். பி. அருணாசலம் என்பவரின் முன்னிலையில் நடந்தது. அவரும் அவருடன் விஜயம் செய்த ஒரு வெள்ளைக்காரச் சீமானும், சீமாட்டியும், நாடகம் நடித்ததைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசியதாகக் கேள்விப்பட்டேன்.

அன்றிரவு நான் வேஷத்தைக் களைந்துவிட்டு, எங்களிருப்பிடம் போய் ஈஸ்வரனைத் துதித்துவிட்டு அதுவரையில் ஒரு மாசம் புரியாத சுக நித்திரை புரிந்தேன்.

மறுநாள் நாங்கள் கண் விழித்தது முதல், நாள் முழுவதும், எங்களை நாடக மேடையில் பார்த்த நண்பர்கள் ஓயாது எங்கள் இருப்பிடம் வந்தனர். இது நாங்கள் லங்கையை விட்டுத் திரும்பும் வரையில் நிகழ்ந்த தெனவே கூறவேண்டும். தினம் காலையிலும் மாலையிலும், எங்கள் ஆக்டர்களையெல்லாம், கொழும்பில் பார்க்க வேண்டிய இடங்களுக் கெல்லாம், மோட்டார் வண்டிகளில் அழைத்துக்கொண்டு போய் விடுவார்கள்; தினம் யார் வீட்டிலாவது விருந்துக்குச் சிலரை அழைத்துக்கொண்டு போவார்கள். அதிகமாகக் கூறுவானேன்? எங்களைத் தங்கள் விருந்தாளிகளாகப் பாவித்து, எங்கள் சவுகரியங்களை யெல்லாம், ஒன்றையும் மறவாமலும் விடாமலும், பார்த்து வந்தனர். எங்களுள் யாராவது ஒருவர் ஏதாவது ஒன்று இஷ்டப்படுவதாகச் சொல்லவேண்டியதுதான், அரை மணிக்குள் அது எங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்துவிடும் "விருந்தோம்பல்" என்பதைப் பற்றி நான் படித்திருக்கிறேன், அது இத்தகையது என்பதை இவர்களிடமிருந்து நான் பிரத்யட்சமாகக் கற்றேன். கொழும்பு நேசர்கள் எங்களுக்குச் செய்த உதவிகளில் இரண்டொன்றை இங்கு எடுத்தெழுதுகிறேன். இரண்டு மூன்று நாட்கள் கழித்து எனதுயிர் நண்பர் நாங்கள் இருந்த வீட்டில், நாற்பது பெயர் ஒன்றாய் இருப்பதென்றால், கொஞ்சம் அசௌகர்யமாருக்கிறதென்று ஏதோ பேச்சில் தெரிவித்தார். உடனே, அவரையும், இன்னும் மூன்று நான்கு பெயரையும் சர். பி. ராமநாதன் வீட்டிற்கு, அவர் மூத்த குமாரனான மிஸ்டர் ராஜேந்திரா என்பவர் அழைத்துக்கொண்டு போய் விட்டார். என்னையும் வரும்படி அழைக்க, நானும் போய் விட்டால் இங்கிருப்பவர்களெல்லாம் ஏதாவது சொல்வார்கள், என்னை மன்னிக்கவேண்டு மென்று கேட்டுக் கொண்டேன். ஒரு நாள் சாப்பாட்டு சமாசாரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வெங்கடாசல ஐயர், பட்டணத்திலிருந்து கொண்டு வந்த நெய் ஆய்விட்டது.

கடைத்தெருவில் கிடைக்கும் நெய் நன்றாயில்லை யென்று அவர் தெரிவித்தார்; ஒரு மணி நேரத்திற்கெல்லாம், நாங்கள் கொழும்பில் இன்னும் இருக்கவேண்டிய நாட்களுக்கெல்லாம் வேண்டிய புத்துருக்கு நெய் வந்து சேர்ந்துவிட்டது! இதில் வேடிக்கை

யென்ன வென்றால், அதை யார் அனுப்பியது என்பதை இதுவரை யில் அறியேன்! அனுப்பித்தவர்களுக்கு நான் வந்தனம் செய்ய வேண்டுமே அதற்காவது சொல்லுங்கள் என்றாலும், ஒருவரும் சொல்லமாட்டோம் என்று மறுத்து விட்டார்கள். இதைப்பற்றி ஆங்கிலத்தில் சில வருஷங்களுக்குமுன் எங்கள் சபை நடத்தி வந்த இந்தியன் ஸ்டேஜ் என்னும் பத்திரிகையில், நான் எழுதிய ஒரு வாக்கியத்தை இங்கு தமிழில் மொழி பெயர்த்து எழுதுகிறேன். "இம்முறையும் இன்னும் எங்கள் சபை சிங்களத்திற்குப் போயி ருந்த இரண்டு முறையும் எனக்கும் எனது சபை அங்கத்தினருக் கும் சிங்களவாசிகள் செய்த உதவிகளை யெல்லாம் எடுத்துரைக்க அசக்தனாயிருக்கிறேன்; அன்றியும் அவைகளுக்காக, எனது லங்கை நண்பர்களுக்குப் பிரதி செய்ய முடியாதவனாயிருக்கிறேன்; நான் மறுபடியும் அங்கு சென்று அவர்களையெல்லாம் காண முடியுமோ என்னவோ சந்தேகம், ஆகவே அவர்களெல்லாம் என்னிடமும், எனது சபை அங்கத்தினரிடமும் பாராட்டிய அன்பிற்காகவும், நன் றிக்காகவும் எனது வந்தனத்தை—என் மனமார்ந்த வந்தனத்தை— இதன் மூலமாகச் செலுத்துகின்றேன்; இங்கெழுதியுள்ளதை அங்குள்ள நண்பர்களுட் சிலராவது கண்ணுற்று, என் வந்தனத்தை அங்கீகரிப்பார்களாக; அவர்கள் செய்த பேருதவிக்கெல்லாம், நான் செய்யக்கூடிய கைம்மாறு வேறொன்றும் அறிகிலேன்."

நாங்கள் இங்கு ஆடிய இரண்டாவது நாடகம் "மனோஹரன்" இந்த நாடகத்தில் பத்மாவதியாக நடித்த பத்மநாபராவ் எல்லோரா லும் மிகவும் சிலாகிக்கப்பட்டார். ரங்கவடிவேலு விஜயாளாக நடித் ததைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஒரு முறை அவர்மீது அன்புகொண்ட பிறகு, ஜனங்கள் நாடகமேடையின்மீது அவர் ஏதா வது தவறு இழைத்தாலும் அதுவும் ஒரு அற்புதமான நடிப்பு என்று எண்ணும்படியான மனோஸ்திதிக்கு வந்துவிட்டனர். இந் நாடகத்திற்கு வாராத சில நண்பர்கள் மறுநாள் எங்களிடம் வந்து, "இந்நாடகம் மிகவும் நன்றாக யிருந்ததாகக் கேள்விப்பட்டோம். இப்படிப்பட்ட சிறந்த நாடகத்தை ஏன் சனிக்கிழமையில் போடக் கூடாது? வாரத்தில் இடையிலுள்ள தினங்களில் போடும் நாடகங் கள் அவ்வளவு நன்றாயிராது என்று நாங்கள் வரவில்லை; அன்றியும்

இரண்டு ராத்திரிகள் ஒருங்கே, விழிப்பதென்றால் கஷ்டமாயிருந்தது; இந்நாடகத்தை மறுபடியும் எப்படியாவது போடுங்கள், நாங்கள் பார்க்கவேண்டும்" என்று வற்புறுத்தினர். இந்த மனோஹரன் நாடகம் நான் ஆடுவதில் எனக்குள்ள கஷ்டத்தை இதற்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். ஆகையால் அவர்களுக்கெல்லாம், இம்முறை முடியாது, ஈஸ்வரன் கிருபையால் இன்னொரு முறை இலங்கைக்கு நாங்கள் வந்தால் போடுகிறோம், என்று பதில் சொன்னேன்.

பிறகு மூன்றாவது நாடகமாக காலவ சரித்திரம் நடத்தினோம். அதில் எனதுயிர் நண்பர் ரங்கவடிவேலு முதற்காட்சியில் நர்த்தனம் செய்தது முன்பிருந்ததைவிட நாடகாபிமானிகள், அவர்மீது அதிகப்பிரேமை கொள்ளச் செய்தது. இந்நாடகத்தில் வடிவேலு நாயகர், சந்தியாவளியாக நடித்தது பலரால் புகழப்பட்டது. ராம கிருஷ்ணையர் இன்றும் வேடிக்கையாய்க் கூறினபடி, "காலவ நாடகம், வடிவேலு தினம்; மனோஹர நாடகம், பத்மநாபராவ் தினம்; சாரங்கதரா ரங்கவடிவேலு தினம்; அமலாதித்யன் வாத்தியார் தினம்," என்று வேடிக்கையாக எங்களிடம் சொல்வது வழக்கம். இதற்கு அர்த்தம் இன்னின்ன ஆக்டர் இன்னின்ன நாடகங்களில் தன் முழு சாமர்த்தியத்தையும் காட்ட இடமுண்டு என்பதேயாம். வடிவேலு நாயகர், இந்நாடகத்திலும் இதற்கு முந்திய இரண்டு நாடகங்களிலும் ஸ்திரீவேஷம் தரித்ததைக் கண்டவர்கள், இவர் இவ்வளவு கறுப்பா யிருக்கிறாரே, இவர் நாடக மேடைமீது இவ்வளவு சிவப்பாகவும் அழகாகவும் எப்படித் தோன்றுகிறார் என்று வினவ, இது அவருக்கு வேஷம் தரிப்பதின் சூட்சுமத்திலிருந்து தான் என்று நான் பதில் சொன்னேன். அதன் பேரில், அவ்விடத்திய சில ஆப்த நண்பர்கள், எங்களுக்கெல்லாம் வேஷம் தரிப்பதை அருகிலிருந்து பார்க்கவேண்டுமென்று, உத்தரவுபெற்று, சாயங்காலம் நாங்கள் வேஷம் போட்டுக் கொள்ளும் பொழுது, முதலிலிருந்து கடைசிவரைக்கு மிருந்து பார்த்தார்கள்.

மூன்றாம் பாகம் முற்றிற்று.